Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර් | பக்கம் 24 ரூபா 30.00
ஏப்ரல் 25 - மே 01, 2013

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1011

# கூட்டமைப்பின் பொதுவேட்பாளர் தமிழர்களை ஏமாற்ற புதிய வியூகம்




## போருக்குப் பின் புல(ன்)ம் பெயர்ந்தவர்களின் அரசியல்!

## மட்டக்களப்பிலும் தலைதூக்குகிறது விபச்சாரக் கலாசாரம்!

## அமெரிக்கா - ஈராக் குண்டுகள் வெடிக்கின்றன?!

## சிவலிங்க தத்துவம்

சிவலிங்கத்தின் அடிப்பாகம் பிரம்ம பாகமாகும். இது, மனிதனின் உயிர்மூச்சுக்குரியது. நடுப்பாகம் மனிதனின் தசை, இரத்தம் ஆகியவற்றிற்கு பாதுகாப்பானது. மேல்பாகம் மனிதனின் எலும்பு, நரம்பு ஆகியவற்றை குறிக்கிறது. இப்படிப்பட்ட சிவலிங்கத்தை பூசை செய்தால் மும்மூர்த்திகளை பூசை செய்த பலனை பெறலாம்.

**சிவன் கோவில் திசைகளின் பலன்கள்**

வடகிழக்கு பார்வை- வாதநோய் தீரும், தெற்கு பார்வை - அகால மரணம் நீங்கும், மேற்கு பார்வை- திருமண தடை நீங்கும், பிரிந்த தம்பதிகள் சேரும். வடமேற்கு- பொன்னும், பொருளும் சேரும், தென்மேற்கு - தெய்வீக அருள் உண்டாகும், வடக்கு - வேலை வெற்றியடையும்.

எந்தெந்த கிழமையில் என்னென்ன நைவேத்தியம்?

ஞாயிறு-சர்க்கரைப்பொங்கல், திங்கள்-பால் (அ) தயிர் அன்னம், செவ்வாய்-வெண்பொங்கல், புதன்-கதம்பசாதம், வியாழன்-சித்ரான்னம், வெள்ளி-பால் பாயாசம், சனி-புளிச்சாதம்.

சிவபூஜைக்கு கத்தரிக்காய் பக்குவம் நிவேதனம் செய்வது விசேஷம். சிவபூஜைக்கு பின்னர் இருபது சிவபக்தர்களுக்கு அன்னம் அளிப்பது மிகவும் விசேஷம். 108 ருத்ர காயத்ரி ஜபிப்பது விசேஷம்.

ஆன்மீகம்

## இயேசு அருளும் நிறைவாழ்வு

"நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளேன்" என்னும் இயேசுவின் மிகப் பிரபலமான இந்த சொற்களை இன்று நாம் சிந்திப்போம். நாம் அனைவரும் வாழவேண்டும் என்பதுதான் இறைவனின், இறைமகன் இயேசுவின் விருப்பம். நாம் துன்புறவேண்டும், மடியவேண்டும் என்பது இறைத் திருவுளமாக இருக்கமுடியாது. இதனை நம் விசுவாசத்தின் அடிப்படைக் கோட்பாடாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, நாம் நிறைவாழ்வு பெறவேண்டும் என்பது இயேசுவின் விருப்பம். வாழ்வது ஒருமுறை, அந்த ஒரு வாழ்வும் நிறைவானதாக, முழுமை பெற்றதாக அமைய வேண்டும். மானிடர்களின் உளவியல் தேவைகள் பற்றி ஆய்வுசெய்த ஆபிரகாம் மாஸ்லோ என்னும் அறிஞர் 'ஆளுமை நிறைவுத் தேவை' என்பதையே மானிட நிறைவுத் தேவையாகக் குறிப்பிட்டார்.

இயேசுவின் நிறைவாழ்வு என்பதுவும் அதுவே. எந்த நோக்கத்துக்காக இறைவன் நம்மைப் படைத்தாரோ, அந்த நோக்கம் நிறைவேறும்படி வாழ்வதுதான் நமது நிறைவாழ்வு. "தந்தை எனக்குக் கொடுத்த வேலையைச் செய்துமுடிப்பதே என் உணவு" (யோவா 4: 34) என்று மொழிந்த இயேசுவைப் போல, இறைவன் நம்மைப் படைத்த நோக்கத்தை நிறைவேற்றுவதே நிறைவாழ்வு. அதற்கான அருளை, ஆற்றலை உயிர்த்த இயேசுவிடமிருந்து பெற்றுக்கொள்வோமா!

## அல்லாஹ்வின் சோதனைகள் அகிலத்தில் இறங்கும்

இன்று எம்மில் சிலர் மண்ணை உயர்த்தி மார்க்கத்தைத் தாழ்த்தி வருகின்றனர். இவர்கள் கல்லுக்கும், மண்ணுக்கும் காசைச் செலவழித்து கட்டடங்களை அமைத்து மாடமாளிகையில் சுகபோக வாழ்க்கை வாழ்கின்றனர்.

ஏழைகளை இவர்கள் கண்கொண்டு பார்ப்பதில்லை. ஹாரூனின் நிலையை கண்முன் கொண்டு வாருங்கள். அவன் அகிலத்தில் செய்த தவறுகளுக்காக அல்லாஹ்வால் இப்போதும் இப்பூமிக்குள் இவன் உள்வாங்கப்பட்டுக்கொண்டே இருக்க இவ் மண்ணிலே மனிதன் மதியிழந்து மமதை கொண்டு வாழ்வதா?

ஏழைகளை வஞ்சிக்கும் செல்வந்தனின் மாடமாளிகை எதற்கு? தன்னை படைத்த அல்லாஹ்வை மறந்து பாரில் படோப வாழ்க்கை வாழ்பவனின் பணம் எதற்கு? மனிதன் அமைதியாக, அழகாக அறவாழ்வு வாழ்வதற்கு ஆழிய போதனைகளை அல்குர் ஆன் எடுத்துரைக்கிறது. இறைமறை கட்டளைகளை ஏற்று நடக்க வேண்டும். மாறாக வலியவன் வாழ்வதும், வறியவன் நலிவதும் நமது நடைமுறைக்கு வருமானால் விளைவு விபரீதமாக இருக்கும். அல்லாஹ்வின் சோதனைகள் அகிலத்தில் இறங்கும்.

எம்.சீ.கலீல், கல்முனை-05.

## கவிதைப்போட்டி இல 1008



### வார்த்தைப் பஞ்சம்

காலிகளும் போலிகளும்
கள்வர்களும் கயவர்களும்
கடை விரித்திருக்கும்
இக்காலகட்டத்தில்
தன் எஜமானாரின்
வாகனம் கைவிட்டு
போகக் கூடாது- என்ற
நன்நோக்கத்தில்
பசிநோக்காது
கண் துஞ்சாது
மெய்வருத்தம் பாராது
கருமமே கண்ணாயிருந்து
காவல் புரியும்
வாய்பேசா ஜீவன்களின்
நன்றி உணர்வை
எடுத்துரைக்க வார்த்தை ஏது?

பாராட்டுக்குரியது

க.கமால்தீன்
ஏறாவூர்-03




## கவிதைப் போட்டி இல 1011



### பாதுகாப்பு

ஐயா வரும்வரை
ஐயறிவு மிருகங்கள்
பூட்டில்லா சைக்கிளுக்கு
போதிய பாதுகாப்பு.

எம்.சி. கலீல்,
கல்முனை-05.

எமர்னத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 07.05.2013

கவிதைப் போட்டி இல. 1011 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### பொருளாதாரம்

நாய்களுக்கு சவாரி
நாளை
நாங்கள்
நடுத்தெருவில்...

எஸ்.பி.பாலமுருகன்.
பதுளை.

### பகீரத முயற்சி

தம் எஜமானனைப்
பிரிய மனமில்லா
இச் செல்லப் பிராணிகள்
அவரது துவிச்சக்கர
வண்டிச் சில்லுகளின்
வளியை வெளியேற்ற
எடுக்கும் பகீரத
முயற்சி இது.

அ.சந்தியாகோ,
கண்டி.

### எஜமானிய விசுவாசம்



அவசரமாக சென்ற எஜமானார்
திரும்புவதற்கு தாமதமாவதால்
திருட்டுப் பசங்க
உந்துருளியை தள்ளிக்கொண்டு
போய்விடுவார்களோ
என்ற ஆதங்கத்தில்
கண்ணை இமை காப்பதுபோல்
காத்து நிற்கும் - இந்த
நன்றியுள்ள நாலு கால்
பிராணிகளின்
எஜமானிய விசுவாசத்தை
என்னவென்றுரைப்பது.

க.சகீலாபேகம்,
ஏறாவூர்-03.

### வாழ்வின் நிலையான அன்பு நன்றி



எமது நிழலாக எம்மோடு உன்
வாழ்க்கையை அர்ப்பணித்து
எமது உறவு போல் எம்மோடு
வாழ்ந்து. மகிழ்ந்து பழகி
நாம் இல்லாவிடிலும். எம்
நினைவில்
உன் வாழ்வைத் தட்டிக்கழிக்கும்
உன் நன்றித்துவமே
மெய் வாழ்வில் மிக
உயர்ந்தது.

ச.சுதர்ஷன்,
வட்டுக்கோட்டை.

## உங்கள் பக்கம்

### அதிகரிக்கும் வாகனங்களால் அவதியுறும் மக்கள்

அண்மைக் காலமாக நாட்டில் அதிகரித்து வருகின்ற வாகனப் போக்குவரத்துக்கள் காரணமாக கொழும்பு போன்ற பகுதிகளில் வாகன நெரிசல் பொதுமக்களின் அன்றாட வாழ்விற்குச் சவால்விடும் வகையில் அதிகரித்துக் காணப்படு கின்றது.

அண்மைக்காலமாக துறை சார்ந்த நிபுணர்களுக்கு வாகனங்கள் கொள்வனவு செய்வதில் வழங்கப் பட்டு வருகின்ற சலுகைகள், நாளுக்கு நாள் புதிதாக முளைவிடு கின்ற லீசிங் கம்பனிகளின் போட்டி என்பவற்றினால் சாதாரணமான மக்களும் வாகனங்களைக் கொள்வனவு செய்யக் கூடிய சூழலை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதனால் அதிகரித்துக்கொண்டு செல்கின்ற வாகனங்களின் எண்ணிக் கைக்கு ஏற்றவாறு வீதிகளின் விஸ்தரிப்பு அமையவில்லை என்பது பெரும்பாலானவர்களின் குற்றச்சாட்டாக இருக்கின்றது. இதை விட மேலை நாடுகளைப் போன்று காலத்துக்குக் காலம் பாவனைக்குதவாத வாகனங்களை சேவையில் இருந்து தடைசெய்வதற்கான ஏற்பாடுகளும் எமது நாட்டில் இதுவரை குறிப்பிடத்தக்க வகையில் முன்னெடுக்கப்படவில்லை.

இந்நிலையிலேயே அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்ற வீதி விபத்துக்களும் உயிர்ப்பலிகளும் சர்வசாதாரணமாகிக் கொண்டிருக்கின்றது.

எனவே, இது தொடர்பில் உரிய தரப்பினர் விரைந்து சிந்தித்து ஆரோக்கியமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டுமென மீண்டும் தினமுரசின் உங்கள் பக்கம் ஊடாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆர்.குகன், வெள்ளவத்தை.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


## மாற்றங்கள் தேவை!

பல தடைக்கற்களைத் தாண்டி, வெற்றிநடை போட்டது என்றால் முரசே முரசு மீது கொண்ட நம்பிக்கையும், விடாமுயற்சியும்தான். அந்தவகையில் பல்தரப்பட்டவை முரசில் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது. இன்னும் பல மாற்றங்கள் முரசில் நிச்சயம் இடம்பெற வேண்டும். அதையே வாசகர்களாகிய நாமும் விரும்புகின்றோம்.

அற்புதராஜா காலத்தில் இருந்த பல சுவாரசியங்கள் குறைவாகவே காணப்படுகிறது. ஆனாலும் ஓரளவு நிறைவாய் காணப்படுகின்றது. வெற்றிநடை போட வேண்டும் வாழ்த்துகின்றேன்.

எம்.செந்தூரன், தெமட்டக்கொட

## வாசகர் சாலை



### மகிழ்விக்கிறது முரசு

வாசகர்களாகிய எம்மை முரசு அறிவார்ந்த ரீதியாக மகிழ்விக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. பாப்பா முரசில் இடம்பெறும் தகவல் களஞ்சியம், சிறுசிறு தகவல்கள் எல்லாமே சூப்பர், சூப்பர்.

தெரியாத அரிய பல தகவல்களை வழங்கும் ஆசிரியருக்கு எனது பாராட்டுக்கள். இன்னும் நிறையவே சேர்த்துக் கொள்ளுங்கள்.

லேடீஸ் ஸ்பெஷலில் வரும் அழகு குறிப்புகள், பெண்கள் கட்டுரைகள் ஆகியவற்றை ஒவ்வொரு கிழமையும் தவறாமல் வாசிப்பதுண்டு. அனைத்தும் பாராட்டுக்குரியதுதான்.

சி.அருள்ராஜா, இணுவில்

### விசுவாசம்!

தினமுரசின் நீண்ட காலமாக முரசின் வாசகியாக இருக்கின்றேன். அரசியலில் அசட்டை செய்யாமல் வெளிப்படையாக எதையும் சொல்லும் விதம் என்னைக் கவர்ந்துள்ளது.

வன்னியில் முரசு தடை செய்யப்பட்டிருந்த காலத்திலும் முரசை படித்ததுண்டு. முகாம் சென்று திரும்பி மீண்டும் எமது சொந்த இடத்திற்கு வந்த பின்பும் தினமுரசு பத்திரிகையை வாசிக்கின்றேன். இன்னும் தரமானதாக வரவேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

மு.கார்முகில்,
முள்ளியவளை.

### வாழ்த்துக்கள்!!

முரசுக்கு, கோடான கோடி வணக்கங்கள்! கால மாற்றங்களின் தேவையறிந்து செயற்படுவதில் உனக்கு நிகர் நீயே. அரசியல் ரீதியான கட்டுரைகளின் தீவிர வாசகன் நான்.

வெளிநாட்டு கட்டுரையை எழுதிவரும் வேணுகிருஷ்ணா அந்நாட்டு நடப்புக்களை, எமக்கு விளங்கக் கூடிய வகையில் அருமையாக எழுதிவருகிறார். அவரின் கட்டுரைகளைக்கூட நான் சேகரித்து வைத்திருக்கின்றேன். அவருக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

எம்.திவா,
திருகோணமலை.

# தமிழ் மக்களின் துயரங்களை துடைப்பதே இலக்கு

### பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின்



தமிழ் மக்களின் துயரங்களைத் துடைக்கவேண்டும் என்ற நோக்குடனேயே அன்றுதொட்டு இன்றுவரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செயற்பட்டு வருகின்றார் என்று ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தெரிவித்துள்ளார்.

தொழில்பயிற்சி அதிகாரசபையின் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்துள்ள மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியின் பயனாக தொழில்வாய்ப்பினை வழங்கக் கூடிய கற்கை நெறிகளையும் பயிற்றுவிக்கும் தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு ஒரு கற்கைநெறிக்கான அங்கீகாரம் காணப்பட்டபோதும் தற்போது 21 கற்கைநெறிகளுக்கு அங்கீகாரத்தினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் பல்வேறுபட்ட தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அரசாங்கத்தின் இவ்வாறான இலவச கற்கைநெறிகளைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதன் ஊடாக இளைஞர் - யுவதிகள் சிறந்த ஒரு எதிர்காலத்தை பெறமுடியும் எனவும் தெரிவித்தார்.

# இரட்டைக் கொலையின் சந்தேக நபர் சிக்கினர்

புல்மோட்டை பிரதேசத்தில் இடம் பெற்ற இரட்டைக்கொலை சம்பவத் துடன் தொடர்புடையதாக கூறப்படும் பெண்ணொருவரை ஜா-எல பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய் துள்ளனர்.

மகசென்புர என்ற கிராமத்தைச் சேர்ந்த எச்.எம். சூரியபண்டார (வயது 38), ஜீவனி அனுரதிக்கா (வயது 36) என்ற தம்பதியினர் கோடரியால் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட் டுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது. அந்த வீட்டிலேயே தங்கியிருந்த உறவுக்காரப் பெண்ணே அவ்விரு வரையும் கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபரான இளம் பெண் கொல்லப்பட்டவர்களுடன் அதே வீட்டில் தங்கியிருந்த அதேவேளை கொல்லப்பட்டவர்களின் பிள்ளைக ளான நிமாலி பிரியதர்சினி (வயது 15) செவ்வந்தி பிரியதர்சினி (வயது 8) ஆகியோரை கொலைச் சம்ப வத்தின்பின் தன்னுடன் அழைத் துக்கொண்டு ஜா-எல பிதேசத்திற்கு தப்பிச்சென்றுள்ளார். சம்பவம் இடம்பெற்ற வீட்டின் வெளியே கொல்லப்பட்ட சூரியபண்டாரவின் சடலத்தை கண்ட அயலவர்கள் புல்மோட்டை பொலிஸ் நிலையத்திற்கு கொடுத்த தகவலை அடுத்து கொலை பற்றிய விபரங்கள் வெளியாகியது. பொலிசாரின் தீவிர விசாரணையை அடுத்து கொலைச் சந்தேக நபரும் அவருடன் சென்ற இரு பெண் பிள்ளைகளும் ஜா-எல பிர தேசத்தில் வைத்து ஜா-எல பொலி சாரினால் கைது செய்யப்பட்டனர்.

### உண்டியல்

# உடைத்தவருக்கு விளக்கமறியல்

கொழும்பு கங்காராம விஹாரையில் உண் டியலை உடைத்து திருடியவரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவிட்டுள்ளார். உண்டியலை உடைத்து 790 ரூபா மற்றும் டொலர்களை திருடியதாக அவர்மீது குற்றச்சாட்டப்பட்டுள் ளது. உண்டியலை உடைத்துக்கொண்டி ருந்தபோது குறித்த சந்தேகநபரை கைது செய்ததாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரி வித்தனர். சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்தே அவரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# கொத்மலையில் மீண்டும் மின் உற்பத்தி

தலவாக்கலை மேல் கொத்மலை நீரதேக்கத்தில் மீண்டும் நீர நிரப்பப்பட்டுள்ளது. கடந்த மாத இறுதி பகுதியில், சுரங்கப் பாதை யின் பராமரிப்பு வேலைகளுக்காக இந்நீர்த் தேக்கத்தின் நீர முற்றாக கொத்மலை ஓயா விற்கு திறந்துவிடப்பட்டதுடன் அதன் மின் உற்பத்தியும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மேல் கொத்மலை நீரததேக்கத்தில் தற்போது நர நிரப்பப்பட்டுள் ளதுடன் மின் உற்பத்தி நடவடிக்கைகளும் வழமைபபோல் நடைபெறுவதாக திட்ட பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

## வட மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர்

# கூட்டமைப்பை பதியாவிடில் அடுத்த நடவடிக்கை நிச்சயம்

### அடித்துக் கூறுகிறார் சுரேஷ் எம்.பி



**எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அளவில் நடைபெறலாமெனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகின்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவுசெய்து கொள்வதற்கு தமிழரசுக் கட்சி சாதகமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளாதுவிடுமாயின் கூட்டமைப்பில் அங்கம்வகிக்கின்ற ஏனைய நான்கு கட்சிகளும் இணைந்து அடுத்த கட்டம் பற்றி ஆராய்ந்து முடிவெடுக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பேச்சாளரான சுரேஷ் பிரேமச்சந்திரன் முரசுக்குத் தெரிவித்துள்ளார்.**

அண்மையில், மன்னார் ஆயர் ஜோசப் ஆண்டகை அவர்களுடன் தமிழரசுக் கட்சி யைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் மேற்கொண்ட கலந்துரையாடலின்போது, முன் னாள் ஆயுதக் குழுக்கள் கூட்டமைப்பில் இருக்கும்வரை அதனை அரசியல்கட்சியாகப் பதிவுசெய்வது சாத்தியம் இல்லையென்று கூறியதாகச் செய்திகள் வெளியாகியிருந்தது.

இதுபற்றி பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் தொடர்புகொண்டு கேட்டது; குறித்த செய்தி தொடர்பில், உத்தியோக பூர்வமான முறையில் சம்பந்தப்பட்ட தரப்புக்க ளினால் வெளியிடப்படவில்லை என்றபடியால் அதுபற்றிய உண்மைத்தன்மை உறுதிப்படுத்த முடியாதுள்ளதாகவும், எனினும் விரைவில் மதப் பெரியார்கள் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோருடனான சந்திப்பொன்றை மேற் கொண்டு கூட்டமைப்புப் பதிவு தொடர்பில் முடிவு எடுக்கப்படும் என்றே இதுவரையில் தமிழரசுக் கட்சியினரால் தமக்குச் சொல்லப்பட்டதாகவும் இது ஒரு காலத்தைக் கடத்தும் செயற்பாடாக இருக்கின்ற போதிலும் தாங்கள் பொறுமையாக இருப்பதாக வும், எனினும் வடமாகாண சபைத் தேர்த லுக்கு முன்னர் கூட்டமைப்பு பதிவு செய்யப்படல் வேண்டும் இல்லையேல் வேறு தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்குத் தாங்கள் நிர்ப்பந் திக்கப்படுவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# நம்ப மறுக்கிறார் மனைவி!





பொஸ்டன் குண்டுவெடிப்பு சந்தேக நபர் என்று சுட்டுக் கொல்லப்பட்டவரின் மனைவியிடம் விசாரணை நடத்த முடியாமல் உள்ளதாக தெரிவித்துள்ளது, உளவுத்துறை எப்.பி.ஐ. துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமேர்லான் சர்னயேவ்வின் மனைவியின் வீட்டுக்கு சென்ற விசாரணை அதிகாரிகளுடன் பேச மறுத்துவிட்டார் அவர். தமேர்லான் சர்னயேவ்வின் மனைவி கேத்ரீன் சர்னயேவ், இஸ்லாமுக்கு மதம் மாறியுள்ள அமெரிக்கப் பெண். இவரது வக்கீல் அமாடோ டிலூகா, விசாரணை அதிகாரிகளுடன் சர்னயேவ்வின் மனைவி பேச மறுத்ததை உறுதி செய்தார். அவர் கூறுகையில், "சர்னயேவ்வின் மனைவி கேத்ரீன் சார்பாக நான்தான் விசாரணை அதிகாரிகளுடன் பேசினேன். அவ்வளவுதான் தற்போதைக்கு சொல்லமுடியும். இதை எப்படி டீல் பண்ணுவது என்று நாம் முடிவு செய்துள்ளோம" என்றார். தமேர்லான் சர்னயேவ்வின் மனைவி காத்ரீன், தமது 3 வயது மகளுடன் தற்போது ரோத் ஐலெண்ட்டில் உள்ள அவரது தாயாருடன் தங்கியுள்ளார்.

வக்கீல் அமாடோ டிலூகா கூறுகையில், போஸ்டன் குண்டுவெடிப்பு நடந்தபின்னர், கணவர் தமேர்லான் சர்னயேவ்வை உயிருடன் கடைசியாக தமது அப்பார்ட் மெண்டில் பார்த்ததாக அவரது மனைவி தெரிவித்துள்ளார். அப்போது, அவர் மிக சாதாரணமாகவே இருந்துள்ளார்.

சர்னயேவ்வின் மனைவி கேத்ரீன் சுகாதாரத்துறை ஊழியராக பணிபுரிகிறார். இவர் வாரத்தில் 7 நாளும் தொடர்ந்து பணிபுரிவதால், கணவர் வீட்டில் என்னவிதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார் என்பதை அறியவில்லை.

# முறியடிக்கப்பட்டது திட்டம்





பொஸ்டன் வெடிகுண்டு பரபரப்பு அடங்குவதற்குள், அல்-கொய்தா தாக்குதல் ஒன்றை முறியடித்துள்ளதாக அறி வித்துள்ளது கனேடிய பொலிஸ்.

டொரண்டோ நகரில் உள்ள பாலம் ஒன்றை ரயில் கடக்கும்போது குண்டுவெடிப்பு நடத்துவதற்காக போடப்பட்ட திட்டத்தை முறியடித்துள்ளதாக கூறியுள்ள கனேடியப் பொலிஸ், சதிகாரர்கள் என இருவரை கைது செய்துள்ளது.

இந்த சதியை முறியடிக்கும் முயற்சியில் கடந்த 6 மாத காலமாக ஈடுபட்டதாகவும் கனேடிய பொலிஸ் அமெரிக்க உளவுத்துறை எப்.பி.ஐ. உடன் இணைந்து இந்த திட்டத்தை முறியடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இருவருக்கும் அல்-கொய்தா தொடர்புகள் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. இருவரில் ஒருவர் மொரண்டோ நகரிலும், மற்றையவர் மொன்ட்ரியோல் நகரிலும் வசிப்பவர்கள்.

கனேடிய எல்லை பாதுகாப்பு சேவையை சேர்ந்தவர்கள் இதில் தொடர்புபடுவதால், கனடா எல்லையை பகிர்ந்து கொள்ளும் ஒரே நாடான அமெரிக்காவுக்கும் இந்த சதிச் செயலுக்கும் தொடர்பு உள்ளதா என்ற கேள்வி, கனேடிய மீடியாவால் எழுப்பப்படுகிறது. அமெரிக்க உளவுத்துறையும் இதில் தொடர்புகொண்டிருப்பதால், இந்த சந்தேகம் அதிகரித்துள்ளது. பொதுவாக தீவிரவாத அச்சுறுத்தல் இல்லாத நாடு எனக் கருதப்பட்ட கனடாவில், இந்த சம்பவம் நடந்துள்ளதால் கனேடியர்கள் அதிர்ச்சியடைந்து உள்ளனர்.

# வேட்டை கடையில் நடந்தது வேட்டை



ரஷ்யாவில் நடைபெற்ற துப்பாக்கி சூடு சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. வேட்டைக்கு பயன்படும் பொருட்கள் விற்கும் கடை ஒன்றில் நடைபெற்றுள்ளது இந்த துப்பாக்கிச் சூடு.

கடையில் பணிபுரிந்த விற்பனையாளர்கள் 3 பேர் உட்பட, 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர். சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட வீடியோக்களில், கடைக்கு வெளியே விழுந்து கிடக்கும் உடல்களை காணக்கூடியதாக உள்ளது. 6 பேரை சுட்டுக் கொன்ற நபர், கடைக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த காரில் ஏறிப் பறந்துவிட்டார். கொல்லப்பட்ட 6 பேரில், 14 வயது சிறுமியும் ஒருவர்.

மொஸ்கோவில் இருந்து சிறப்பு புலனாய்வு குழு ஒன்று சம்பவம் நடந்த இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கடையில் அந்த நேரத்தில் இருந்த அனைவரும் கொல்லப்பட்டுள்ளதால், சம்பவத்திற்கான காரணத்தை சொல்ல முடியாதுள்ளது என்றும் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

வாரமலர்
தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## மின் கட்டண அதிகரிப்பு தந்தது அதிர்ச்சி!!

"மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதை" என்பார்கள். அது போல் உள்ளது மின்சாரக் கட்டண அதிகரிப்பு.

மின்சார சபைக்கு 364 பில்லியன் ரூபா கடன் இருக்கின்றது. அதை கட்டவேண்டிய அவசியம் உள்ளது. அதற்காகவே தவிர்க்கப்பட முடியாமல் கட்டண அதிகரிப்பைச் செய்ய வேண்டியுள்ளதாக மின்சக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

உற்பத்தி செலவைவிடவும் மானிய அடிப்படையிலேயே மின் கட்டண அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதாக கூறிய அமைச்சர் 30 தொடக்கம் 90 வரையான அலகுகளை பாவிக்கும் சாதாரண மக்களுக்கான கட்டண அதிகரிப்பு விடயத்தில் அரசு 25 மில்லியன் ரூபா நஷ்டத்தை தாங்கிக் கொண்டுள்ளது என்றும் கூறினார்.

அமைச்சர் எத்தகைய நியாயங்களைக் கூறினாலும் இலங்கை மக்களின் வாழ்வாதார போராட்டத்தில் மின்கட்டண அதிகரிப்பு பெரும் சுமையாகவே அமைந்துள்ளது.

90 அலகுகளை பாவிக்கும் மக்களை விடவும் அதற்கு மேற்பட்ட அலகுகளை பாவிக்கும் மக்களே பெரும்பான்மையானவர்களாக இருக்கின்றனர். இதனாலேயே மின் கட்டண அதிகரிப்பானது போக்குவரத்துச் செலவீனத்திலும், பொருட்களின் விலையேற்றத்திலும், பெருந்தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

மின் கட்டண அதிகரிப்பாக மட்டுமல்லாமல் வாழ்க்கைச் செலவிலும் அதிகரிப்பை செய்யவேண்டியுள்ளது.

யுத்தத்துக்குப் பின்னர் இலங்கை மக்கள் மெல்ல பொருளாதார முன்னேற்றம் கண்டு வருகின்ற வேளையில் எதிர்பார்க்காத அதிர்ச்சியாகவே மின் கட்டண அதிகரிப்பு உள்ளது. இதனால் சிறு தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரும் நிறுவனங்கள் தமது உற்பத்திச் செலவுக்காக பெரும் செலவு செய்ய நேரிட்டுள்ளது. தொழிலாளர்களை குறைத்துக் கொள்ளும் கட்டாயத்துக்கும் சில நிறுவனங்கள் தள்ளப்பட்டுள்ளது.

எனவே மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் அரசு மீள்பரிசீலனை செய்யவேண்டுமெனவும், மக்களுக்கு சலுகைகளை வழங்க வேண்டுமெனவும் இலங்கை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஜனவரி மாதம் மின் பாவனையாளர்களுக்கு சலுகைகளை வழங்க முடியுமென எதிர்பார்ப்பதாக மின்சக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளபோதும் அந்த அறிவிப்பு மகிழ்ச்சிக்குரியதாக இருக்கவில்லை.

மின்சார பிரச்சினையை எதிர்கொள்ள மாற்று மின் உற்பத்தி முயற்சிகளில் அரசாங்கமும், தனியாரும் ஈடுபடுவது அவசியமாகும். அவ்வாறான முயற்சிகளுக்கு அரசு உதவியாகவும், சலுகையாகவும் பங்களிப்புச் செய்ய முன்வர வேண்டும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கூட்டமைப்பின் பொதுவேட்பாளர் தமிழர்களை ஏமாற்ற புதிய வியூகம்!

**கூட்டமைப்புக்குள் எழுந்துள்ள சர்ச்சையை வளர விடாமல் கூட்டமைப்பை பாதுகாப்பது அவசியம் என்று கருதும் புத்திஜீவிகள் என்போர் பொதுவேட்பாளர் ஒருவரை நியமித்து கூட்டமைப்பை பிளவுபடாமல் பாதுகாக்க முடியுமென்று கருதுகின்றனர். பொதுவேட்பாளர் யாராக இருக்க முடியும் என்று ஆராயப்பட்டபோது, முன்னாள் தமிழ் நீதியரசர் ஒருவரின் பெயரும், ஆயர் ஒருவரின் பெயரும் முன்னுரிமை அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது. எனினும் ஆயர் ஒருவர் நேரடியாக அரசியலில் ஈடுபடுவதானது வேறு அர்த்தங்களை கொடுத்துவிடும் என்ற கருத்துக்களும் முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும் நீதியரசரை வேட்பாளராக நிறுத்தினால் தமிழ் மக்கள் கடந்த கால ஏமாற்றங்களையும், அரசியல் முடக்க நிலையையும் மறந்து புதிய எதிர்பார்ப்புடன் வாக்களிப்பார்கள் என்று விவாதிக்கப்பட்டதன் பின்னணியிலேயே இந்தச் செய்திகள் வெளியாகின.**

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. அரசாங்கம் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை முன்னமே நடத்தியிருக்கலாம். ஆனால் அரசாங்கம் விரும்பியிருக்கவில்லை.

வடக்கு மாகாணம் தழுவிய ரீதியிலான தேர்தல் ஒன்றை நடத்துவதற்குரிய புறச்சூழல் அங்கு இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. மீள்குடியேற்றம் முற்றுப்பெறவில்லை. பொதுவசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. முக்கியமாக மிதிவெடி அகழ்வுகள் தொடர வேண்டியுள்ளது என்று பல காரணங்களை அரசாங்கம் கூறிவந்துள்ளது.

அரசாங்கம் கூறிய காரணங்கள் நியாயமானதுதான். இந்தக் குறைபாடுகள் ஒரு புறமிருக்க வடமாகாணத்தில் இயல்பு நிலைமையை உருவாக்குவதும் முக்கியமாகும்.

ஆனால் இத்தனை குறைபாடுகளுக்கு மத்தியிலும் அரசாங்கம் யுத்தத்துக்குப்பின் பாராளுமன்றத் தேர்தலை வெற்றிகரமாக நடத்தியது. உள்ளூராட்சித் தேர்தல்களை வெற்றிகரமாக நடத்தியது. ஜனாதிபதி தேர்தலையும் வெற்றிகரமாக நடத்தியது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு மட்டும் பின்வாங்கிக் கொண்டு காரணங்களைக் கூறுகின்றது.

இவ்வாறு அரசுமீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. இப்போது மீள்குடியேற்றமும், மிதிவெடி அகற்றும் பணிகளும், மீள் கட்டுமானப்பணிகளும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. என்பதால் வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் ஆயத்தமாக உள்ளது என்று கூறுகின்றது.

அரசாங்கம் அப்படிக் கூறினாலும் இந்தியா, அமெரிக்கா போன்ற சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் காரணமாகவே இலங்கை அரசாங்கம் வட மாகாண தேர்தலை நடத்தவுள்ளது என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

வடக்கில் நியாயமான தேர்தலை எதிர்பார்க்க முடியாது என்றும், அரசாங்கம் தேர்தல் முறைகேடுகளில் ஈடுபடுவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன என்றெல்லாம் எதிர்க்கட்சிகள் குறிப்பாக தமிழ்க் கூட்டமைப்பு கூறுகின்றது. ஆனாலும் எத்தனை குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியிலும் அரசாங்கம் நடத்திய தேர்தல்களில் போட்டியிட்டு பதவிகளையும், அதன் வரப்பிரசாதங்களையும் அனுபவித்தும்வருகின்றனர்.

தேர்தல்களை புறக்கணிக்கவோ, தேர்தல்களில் பெற்றுக் கொண்ட பதவிகளை தூக்கி எறிந்துவிடவோ கூட்டமைப்பு முன்வரவில்லை. இப்போது வட மாகாண சபை தேர்தல் குறித்தும் அதேவிதமான குற்றச்சாட்டுக்களை கூறுகின்றனர்.

மறுபக்கத்தில் வட மாகாண சபைக்கான தேர்தலில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பது தொடர்பில் தமக்குள் இழுபறிப்பட்டுக் கொண்டும் இருக்கின்றனர்.

முதலில் மாவை சேனாதிராஜாவை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூட்டமைப்பு கூறியது. பின்னர் முன்னாள் உதயன் ஆசிரியர் வித்தியாதரனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவது என்று ஒரு செய்தியை கூட்டமைப்பு வெளியிட்டது.

அதேவேளை கூட்டமைப்பிலுள்ள தமிழரசுக் கட்சிக்கு எதிர்ப்பு அணியினரோ முதலமைச்சர் வேட்பாளராக சுரேஷ் பிரேமச்சந்திரனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தவேண்டும் என்று கூறிவந்தனர்.

இந்த இழுபறியானது கூட்டமைப்புக்குள் பிளவுகளை தோற்றுவித்துள்ளது. தற்போதைய சூழலானது கூட்டமைப்பு தமக்குள்ளிருந்து தமது நேரடி வேட்பாளர் ஒருவரை முதலமைச்சராக நிறுத்த முடியாத நிலையில் கூட்டமைப்பு உள்ளது. பொதுவேட்பாளர் ஒருவரை நியமிப்பதாக இருந்தால் அதற்குக் கூட்டமைப்பில் இருக்கும் அனைத்துக் கட்சிகளும் தமது ஆதரவை வழங்கும் என்றும், அதை விடுத்து தமிழரசுக் கட்சி தனது முடிவுக்கு அமைவாக ஒருவரை நிறுத்துவதற்கு முற்படுமானால், அதற்கு தாம் ஒருபோதும் ஆதரவு வழங்கப்போவதில்லை என்பதோடு தாமும் முதலமைச்சர் வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டிய சூழலுக்குள் தள்ளப்படுவோம் என்று கூறிவருகின்றனர்.

கூட்டமைப்புக்குள் எழுந்துள்ள சர்ச்சையை வளரவிடாமல் கூட்டமைப்பை பாதுகாப்பது அவசியம் என்று கருதும் புத்திஜீவிகள் என்போர் பொதுவேட்பாளர் ஒருவரை நியமித்து கூட்டமைப்பை பிளவு படாமல் பாதுகாக்க முடியுமென்று கருதுகின்றனர்.

பொதுவேட்பாளர் யாராக இருக்க முடியும் என்று ஆராயப்பட்டபோது, முன்னாள் தமிழ் நீதியரசர் ஒருவரின் பெயரும், ஆயர் ஒருவரின் பெயரும் முன்னுரிமை அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது. எனினும் ஆயர் ஒருவர் நேரடியாக அரசியலில் ஈடுபடுவதானது வேறு அர்த்தங்களை கொடுத்துவிடும் என்ற கருத்துக்களும் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும் நீதியரசரை வேட்பாளராக நிறுத்தினால் தமிழ் மக்கள் கடந்த கால ஏமாற்றங்களையும், அரசியல் முடக்க நிலையையும் மறந்து புதிய எதிர்பார்ப்புடன் வாக்களிப்பார்கள் என்று விவாதிக்கப்பட்டதன் பின்னணியிலேயே இந்தச் செய்திகள் வெளியாகின.

நீதியரசர் என்றதுமே முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களைத்தான் கூட்டமைப்பு இழுத்துக்கொள்ள முயற்சிக்கின்றது என்பது தற்போது பரகசியமாகியுள்ளது. இச்செய்தி குறித்து விக்னேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில் தம்மை கொழும்பில் சிலர் அணுகி பொதுவேட்பாளராக நேரடி அரசியலில் இறங்குமாறு கேட்டதாகவும் அதற்கு உடனடியாக பதிலளிக்கவில்லை என்று பதிலளித்ததாகவும் செய்திகள் வெளியாகின.

தமிழ் மக்களின் அரசி யல் பிரச்சினை தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டு வருபவர் விக்னேஸ்வரன். கல்விமான் என்றவகையில் அவரை நிறுத்தினால் கூட்டமைப்பு புதிய கோணத்தில் பிரச்சினையை நகர்த்தத் தொடங்கியுள்ளது என்று தமிழ் மக்கள் நம்புவார்கள் என்றும், இதுவரை கூட்டமைப்பு தேர்தல்களில் பெற்றுக்கொண்ட வாக்குகளால் அனுபவிக்கும் பதவிகளை பாதுகாக்கவும், அதை முடக்கி வைத்திருப்பது புத்திசாதுரியமான அரசியல் வழிமுறைதான் என்றும், அது முட்டாள்தனமென்றால் விக்னேஸ்வரன் போன்றவர்கள் கூட்டமைப்பில் இணைந்து கொள்வார்களா? என்றெல்லாம் தமிழ் மக்கள் நம்புவார்கள் என்றும் கூட்டமைப்பிலுள்ளோர் கணக்குப் பார்க்கின்றனர்.

கூட்டிக்கழித்துப் பார்த்தால் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்கு வகுக்கும் புதிய திட்டமே இந்த பொதுவேட்பாளர் என்ற நாடகமாகும்.

கடந்த காலங்களில் தனிநாட்டுக் கோரிக்கை, சிங்கள அரசுக்கு பதிலடி, சர்வதேசத்துக்கு தமிழ் மக்களின் இறுதிச் செய்தி, இறந்த உறவுகளுக்கான உறுதி ஏற்பு என்றெல்லாம் கூறி வாக்குகளை பெற்று தமிழ் மக்களை ஏமாற்றியாகிவிட்டது. நடைபெறவிருக்கும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூறுவதற்கு புதிய வாக்குறுதிகள் எதுவுமில்லை. ஆகையால் பொதுவேட்பாளர் என்ற ஆயுதம் கையில் எடுக்கப்பட்டுள்ளது.

விக்னேஸ்வரன் கூறியதாக வெளியாகியிருக்கும் பதிலைப் பார்க்கும்போது, அது வானிலை அறிக்கை கூறுவது போல் உள்ளது. அதாவது அவர் நேரடி அரசியலுக்கு வந்தாலும் வருவார், வராமலும் விடுவார், என்றே உள்ளது. புத்திஜீவியாகவும், கொழும்பில் இருந்துகொண்டு இயக்குகின்றவர்களாகவும் இருக்க விரும்பும் பலர் நேரடி அரசியலில் குதிக்க விரும்புவதில்லை.

தற்போதைய கூட்டமைப்பின் அரசியலானது ஆக்கபூர்வமான எந்தச் செயற்பாட்டையும் கொண்டிருக்கவில்லை. அதற்குள் எவர் போனாலும் அவர்களை விழுங்கி விடுகின்றவர்களாக தமிழரசுக் கட்சியினர் உள்ளனர். தமிழரசுக் கட்சியினருக்கு சலாம் போடாமல், சொல் கேட்கும் பிள்ளையாக இல்லாவிட்டால் இன்று பிரச்சினைகளிலிருந்து தப்பிப்பதற்கு வரவேற்பளிக்கும் அவர்களே தூசித்து துரோகிப்பட்டம் வழங்கி அவதூறுகளை பரப்பவும் பின்வாங்கமாட்டார்கள்.

இதுதான் இன்றைய கூட்டமைப்பின் அரசியல் போக்காக உள்ளது என்பது. கூட்டமைப்புக்கு ஆலோசனை வழங்குகின்ற புத்திஜீவிகளாக கருதப்படுகின்ற அத்தனைபேருக்கும் நன்றாகத் தெரியும்.

எல்லாவற்றையும் வெட்டிச் சரிக்கப்போகும் வீரத்திருமகனாக தமிழ் மக்களிடம் காட்டப்படும் நபர் பின்னர் பொம்மையாக இருக்க வேண்டும். பின்னர் முன்னாள் நீதியரசர் என்றோ, ஆயர் என்றோ, புத்திஜீவி என்றோ, பத்திரிகை ஜாம்பவான் என்றோ புலம்ப முடியாது. கௌரவ அத்திகள் என்ற பெயர் கெட்டு ஒரு பொய்யை மறைக்க இன்னொரு பொய்யை கூறும் சாதாரண அரசியல் வாதியாக வாழ வேண்டியதுதான்.

தமிழ் மக்களின் வாக்குகளை அபகரித்து வசதியான வாழ்க்கை வாழலாம். ஆனால் ஒரு இனத்தின் பின்னடைவுக்கு காரணமாக இருக்கின்ற குற்ற உணர்ச்சியானது மெல்லக் கொல்லும்.

சிவன்

(சென்றவாரத் தொடர்ச்சி...)


# இந்துக்களது மெய்ஞான சிந்தனைகளே! விஞ்ஞானத்தின் முன்னோடி!

## 'ஓம்' கார ஒலியும் பெருவெடிப்புத் தத்துவமும்

**இந்து** சமயத்தில் 'ஓம்' என்ற மந்திரம் மிகவும் முக்கியமானது. மந்திர உச்சாடனங்களில் முதன்மைபெறுவது படைப்புக்கு மூலகாரணமான மந்திரம் எனப் புராணங்கள் கூறும். 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தைப்



பிரம்மா மறந்ததால், முருகன் அவரைச் சிறையில் அடைத்ததாகக் கூறப்படுகிறது. முருகன் தனது தந்தைக்கே 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தின்



Robert Wilson



பொருள் உரைத்ததாக கூறப்படுகிறது. இந்துக்களின் முதற்தெய்வம் கணபதி. 'பிரணவ ரூபி', ஓங்கார வடிவினை எனப் போற்றப்படுகிறார். அம்பாள் 'ஓம்' சக்தியாக விளங்குகிறாள். சங்கீத மும்மூர்த்திகள், நாயன்மார்கள் இறைவனை நாதப் பிரம்ம வடிவினராகக் கண்டு தரிசித்தவர்கள். இவையெல்லாம் இந்து சமயத்தில் 'ஓம்' என்ற மந்திரம் பெறும் முதன்மையை, முக்கியத்துவத்தை விளக்குவன.

இந்த 'ஓம்'கார ஒலி எவ்வாறு தோன்றியது?, அது எவ்வாறு படைப்புக்கு மூலமாயிற்று என ஆராய்ந்த விஞ்ஞானிகள் பெருவெடிப்பின்போது ஏற்பட்டதே!) இந்த 'ஓம்'கார ஒலி எனக் கூறியுள்ளனர். இன்று விஞ்ஞானிகள் கூறும் இந்த உண்மையினை வேத காலத்திலேயே வேத கால ரிஷிகள் கண்டுபிடித்துக் கூறியிருப்பது வியக்கத் தக்கது. போற்றத்தக்கது.

மேலும் வில்சன், பெஞ்சியாஸ் ஆகிய விஞ்ஞானிகள் 'மைக்ரோ றேடியேசன்' (Micro rahation) பற்றி ஆய்வு செய்துள்ளனர். இவர்களது ஆய்வின்படி 'ஓம்' என்ற ஒலியின் அதிர்வு பிரபஞ்சம் முழுவதும் ஒலித்துக் கொண்டிருப்பதாகவும், 1 இலட்சத்து 80 ஆயிரம் மைல்களிற்கு அப்பால் இந்த ஒலி அதிர்வு அதிகம் எனவும், இப்பகுதியில் விமானம் சென்றால் வெடித்துச் சிதறும் என்றும் தெரிவித்துள்ளனர். இந்தப் பிரபஞ்சம் எங்கனும், இறைவன் நாதப் பிரம்ம வடிவினனாக உள்ளான் என்ற இந்துக்களின் தத்துவமும், விஞ்ஞானிகளின் 'மைக்ரோ றேடியேசன்' ஆய்வும் ஒரே உண்மையினையே புலப்படுத்துகிறது என்பதனையும் நாம் தெரிந்துகொள்ளலாம்.

## போர்முடா முக்கோண மர்மமும் ஓங்கார ஒலியும்

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் போர்முடா முக்கோணம் என்றொரு இடமுண்டு. இது போர்முடா, போட்டோறிக்கோ, பகாமாஸ் ஆகிய மூன்று தீவுகளும் முக்கோண வடிவில் புளோரிடா மாநிலத்துடன் இணைக்கும் ஒரு பகுதி. இந்த முக்கோணப் பகுதியின் மேல் பறக்கும் விமானங்கள் காணாமல் போவதாகவும், விமானத்தின் தொலைத் தொடர்புக் கருவிகள் செயலிழந்து போவதாகவும் அண்மையில் அமெரிக்க விமானிகள் தெரிவித்துள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இப்பகுதியில் ஓங்கார ஒலியின் அதிகூடிய அதிர்வுகள் இருக்கலாம் என நம்பப்படுகிறது. இந்நோக்கில் விஞ்ஞானிகள் தங்கள் ஆய்வினை முடுக்கிவிட்டுள்ளனர்.

மேலும் இந்துக்கள் 'ஓம்' கார ஒலியாக இறைவன் பிரபஞ்சம் எங்கும் வியாபித்துள்ளான் எனக் கூறியுள்ளனர். இந்து




Arno Penzias

ஆலயத்தின் கருவறையும் (இறைவன் எழுந்தருளி இருக்கும் இடம்) முக்கோண வடிவில் அமைந்திருப்பதும், அங்கிருந்து மந்திரங்கள் ஓதப் படுவதும் சிந்திக்கத் தக்கது. இந்த 'ஓம்' என்ற ஒலியின் அளவை, அதன் ஊற்றை இன்றைய விஞ்ஞானிகள் கூறுவதற்கு முன்பே இந்துக்ளது வேதங்களும் ஆகமங்களும் கூறியிருப்பது சிந்திக்கத்தக்கது.

## இதிகாசமும் விஞ்ஞானமும்


இந்துக்களது இதிகாசங்களான இராமாயணமும், மகாபாரதமும் சிறந்த அறிவியல் களஞ்சியங்களாக காணப்படுகின்றன. நவீன விஞ்ஞானத்தின் சிந்தனைகள் பலவற்றினை இந்த இதிகாசங்களில் கண்டுகொள்ளலாம். ஆதிகாவியமான இராமாயணம், வால்மீகியினால் இயற்றப்பட்டதெனவும், அவர் 12 வருடங்கள் காட்டில் தவமிருந்து இராமாயணக் காட்சிகளை மனத்திரையில் பார்த்த பின்பே!



இராமாயாணத்தைக் காவியமாகப் பாடினார் எனவும் அறியமுடிகிறது. இவ்வாறு மனத்தையே திரையாகக் கொண்டு இப்பிரபஞ்ச உண்மைகளைப் பார்த்து உணர்ந்து கூறியவர்களே இந்து மெய்ஞானிகள். இந்த மனத்திரைத் தத்துவமே பிற்கால விஞ்ஞானிகளின் பல கண்டுபிடிப்புகளிற்கு முன்னோடியாக விளங்கியுள்ளன. தொலைக்காட்சி, கைத்தொலைபேசி, கணினி, இன்னும் மருத்துவத்துறைசார்ந்த கருவிகளின் கண்டுபிடிப்புக்களுக்கு முன்னோடியாக அமைந்துள்ளன.

இன்றைய நவீன சினிமாத் தொழில்நுட்பமும், வால்மீகியின் மனத்திரைத் தத்து வத்தின் வெளிப்பாடாகவே அமைந்திருப்பதைக் காணமுடியும். ஒரு கதையினை சினிமாவாக எடுப்பவர்கள், முதலில் கதைக்குரிய காட்சிகளை ஓவியமாக வரைந்து மனக்கண் முன் தெரிந்த காட்சியைப் புறக்காட்சிக்கு கொண்டுவந்து சரி, பிழைகள் பார்த்த பின்னரே, திரைப் படமாக்குகின்றனர்.

இன்றைய நவீன விஞ்ஞான உலகின் போக்குவரத்துச் சாதனங்களில் முக்கிய மானது விமானப் போக்குவரத்தாகும். நாடுவிட்டு நாடு செல்வதற்கும், கண்டம் விட்டு கண்டம் செல்வதற்கும் சாதாரண விமானங்களிலிருந்து, அதிவேக விமானம் வரை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த விமானக் கண்டுபிடிப்புக்களின் ஆரம்ப கர்த்தாக்கள் ரைட் சகோதரர்களே என்று விஞ்ஞானிகள் நம்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் பல ஆயிரம் வருடங்களிற்கு முன்பே தோற்றம் பெற்ற இராமாயணத்தில், இராவணன் புஷ்பக விமானம் பயன்படுத்திய செய்தியினை அறிந்துகொள்ளலாம். இந்தப் புஸ்பக விமானம் பற்றிய சிந்தனையே, ரைட் சகோதரர்களின் விமானக் கண்டுபிடிப்புக்கு முன்னோடியாக அமைந்திருக்கவேண்டும்.



இராமாயணம் போல், மகாபாரதமும் சிறந்த, நிறைந்த அறிவியல் சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இன்று உலகம் விஞ்ஞானத்துறையில் முன்னேறிவிட்டதாகவும், கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளைக் கண்டுபிடித்துள்ளதாகவும் நாட்டுத் தலைவர்களும், விஞ்ஞானிகளும் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்.

இந்த உண்மையினை மறுப்பதற்கில்லை. எனினும், இந்த ஏவுகணைத் தத்துவத்தின் முன்னோடிச் சிந்தனைகளை மகாபாரதத்தில் கண்டுகொள்ளலாம்.

அமெரிக்கா (1994) ஈராக்மீது தொடுத்த யுத்தத்தின போது இரு நாடுகளும் ஏவுகணைகளைப் பயன் படுத்தியுள்ளன எனவும், ஈரானால் ஏவப்பட்ட பற்றியாட் ஏவுகணையை அமெரிக்காவின் ஸ்கட் ஏவுகணை காவிச் சென்று, பாதுகாப்பான இடத்தில் அழித்தொழித்ததாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த ஏவுகணை யுத்தச் செய்தியை இந்துக்களது மகாபாரதத்திலும் நாம் கண்டுகொள்ளலாம். கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் நடை பெற்ற யுத்தத்தின்போது, ஒரு பகுதியினர், நாகஸ்திரம் ஏவ, மறுபகுதியினர், கருட அஸ்திரம் ஏவி (பாண்டவர்) அதனை அழிந்ததாக மகாபாரதம் கூறுகிறது. எனவேதான் விஞ்ஞானிகளின் ஏவுகணைத் திட்டத்தின் முன்னோடிச் சிந்தனைகளை இதிகாசங்களில் கண்டுகொள்ளலாம்.

பாண்டவர்கள் பாணத்தினால் வானத்திற்கு ஏணியமைத்து இந்திர லோகம் சென்று, இந்திரனிடம் இருந்த ஐராவதம் என்ற வெள்ளை யானையினை, தாயின் விரதத்தின் பொருட்டுப் பூமிக்குக்கொண்டு வந்த செய்தியினை மகாபாரதம் கூறும்.

சந்திரனில் முதன்முதல் காலடி பதித்தவர் நீல் ஆம்ஸ்டோங் எனவும், செவ்வாய்க்



கிரகத் திற்கும், வேறு கோள்களிற்கும் விண்கலங்களைப் ஆய்வுக்காக அனுப்பும் விஞ்ஞானிகளின் முயற்சிகளிற்கும், இந்த மகாபாரதச் செய்தி முன்னோடியாக அமைந்திருக்கவேண்டும்.

இன்றைய நவீன விஞ்ஞானத்தில் பெரிதும் பேசப்படும் விடயம், உயிரினங்களைப் பரிசோதனைக் குழாய்களில் உற்பத்தி செய்யும் விஞ்ஞான முறைமை (Test tub) பற்றியதாகும். ஒவ்வொரு உயிரினத்தையும் இயற்கைக்குப் புறம்பாக பரிசோதனைக் குழாய் மூலம் இனப்பெருக்கம் செய்யமுடியும் என்பதனையே உயிரியல் பெருக்க விஞ்ஞான முறைமை விளக்கி நிற்கிறது. அண்மையில் இந்தியா 27 குழந்தைகளை இவ்வாறு உருவாக்கிச் சாதனை படைத்துள்ளதாகப் பத்திரிகைச் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது. இதற்கு முன்னர் லண்டனில் இவ்வாறான முறைமையில் செம்மறி ஆடு ஒன்றினை உருவாக்கிக் காட்டியிருந்தனர்.

ஆனால் மகாபாரத்திலே கௌரவர்களின் தாயாகிய காந்தாரியின் சிதைந்த கருவிலிருந்து கௌரவர்களின் குரு, 100 ஆண் பிள்ளைகளை மந்திரசக்தியினால் உருவாக்கிய செய்தியை அறியலாம். எனவே பரிசோதனைக்குழாய் மூலம் உயிரினங்களை இனப்பெருக்கம் செய்யமுடியும் என்ற விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புக்கு மகாபாரதச் செய்தி முன்னோடியாக அமைந்திருக்கலாம்.

## நவீன ஜெனடிக் விஞ்ஞானமும் கன்மக்கோட்பாடும்

இன்று விஞ்ஞான உலகில் பேசப்படும் இன்னொரு முக்கிய விடயம் ஜெனடிக் விஞ்ஞானமாகும். இது மனிதனின் மரபணு முதல், ஏனைய உயிரினங்களின் மரபணுக் கள் பற்றிய ஆய்வு பற்றிக் கூறுவது, மரபணுப் பரிசோதனையின்படி மனிதன் ஒருவனின் பரம்பரைப் பண்புகள், சந்ததி சந்ததியாகக் கடத்தப்படுவதாகவும், நோய்கள் பல கடத்தப்படுவதாகவும் மரபணு விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் தெரிவிக்கின்றனர்.

இந்துக்களது திருநூல்கள் யாவும் கன்மக் கோட்பாட்டுத் தத்துவத்தை வலியுறுத்தும். ஒருவர் செய்த கர்மத்திற்கு ஏற்பவே பிறவிகளும், பிறவிகள் தோன்றும், ஏற்படும் வசதிவாய்ப்புகளும், நோய், பிணிகளும் ஏற்படுகின்றன என்பது இந்துத் திருநூல்களின் முடிந்த முடிபாகும். இக்கோட்பாட்டை மணிவாசகர் திருவாசகத்தில், "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி, கல்லாய் மனிதராய்ப், பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய், எல்லாப்பிறப்பும்



பிறந்திழைத்தேன்..." எனக்குறிப்பிடுவார். பழந்தமிழ் இலக்கியமான திருக்குறள் இதனை "ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமைக்கும் ஏமாப்புடைத்து" எனக்குறிப்பிடுகிறது. எனவேதான் இந்துக்களின் மெய்ஞான சிந்தனைகளே! நவீன விஞ்ஞானத்தின் முன்னோடியெனில் மிகையன்று.

மரபணுவூடாக கடத்தப்படும் பரம்பரை நோய்கள் சிலவற்றை, மரபணுமாற்றம் செய்வதன்மூலம் இல்லாதொழிக்கு முடியும் என அண்மையில் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். உதாரணமாக நீரிழிவு நோய்குரிய மரபணவை மாற்றம் செய்வதன் மூலம் இந்நோயைக் குணப்படுத்தலாம் எனக் கூறப்படுகிறது.

ஆனால் எந்தப் பரம்பரை நோய்களையும் யோகப் பயிற்சி, தியானப்பயிற்சி மூலம் முற்றாகக் குணப்படுத்தமுடியும் என இந்து சமய மெய்ஞானிகள் அன்றே கூறிவைத் துள்ளனர். இப்பயிற்சிகளின்மூலம் மரபணுக் களில் மாற்றம் ஏற்பட்டு, ஒரு குறிப்பிட்ட காலத்தின்பின், குறிப்பிட்ட பரம்பரை நோய் இல்லாது ஒழிகிறது எனத் திருமூலர் தனது திருமந்திரம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

யோகப்பயிற்சியின் மூலம் எவ்வாறு எமது உடலில் மரபணு மாற்றம் நிகழ்கிறது என்ற ஐயம் பலருக்கு ஏற்படலாம். எமது உடல் ஒரு இரசாயன கூடம். எமது எண்ணங்களும், செயல்களும், உணவுப்பழக்கங்களும் உடலில் பலமாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

மனித உடலின் அடிப்படைத் தத்துவம் குறிப்பாக மனித மனத்தில் எழும் நல்ல எண்ணங்களுக்கு அபார சக்தி உண்டு. எனவேதான் பாரதி, "நினைவு நல்லது வேண்டும் நெருங்கிய பொருள் கைபட வேண்டும்" எனக்குறிப்பிட்டுள்ளார். எமது நல்லெண்ணங்களினால் உடலில் இரசாயன மாற்றங்கள் நிகழ்கின்றன. இந்த மாற்றம் எமது பரம்பரை மரபணுவிலும் மாற்றத்தைச் ஏற்படுத்தவல்லன.

சில மனிதர்களின் உடலிலே பலம் எரிகிறது எனவும், சிலர் பழைய பிறப்புக்கள் பற்றிக் கூறுகிறார்கள் எனவும், நாம் அன்றாடம் அறியும் செய்திகள் இதனை நிருபிக்கின்றன. இந்த இரசாயன மாற்றத்திற்காகவே யோகாப் பயிற்சி, தியானப் பயிற்சி செய்கிறோம். இதனையே இன்றைய மரபணு விஞ்ஞானமும் விளக்குகிறது.

[முற்றும்]


N.P.ஸ்ரீந்திரன்
ஆசிரிய ஆலோசகர்,
வலிகாமம் கல்வி வலயம்.




# நிலமெல்லாம் இரத்தம் 48

**பா.ராகவன்**

**அந்த** வருடம் கலீ:.பாவாக இருந்த நூருத்தின் மஹ்மூத் என்பவர் இறந்துபோனார். வழக்கப்படி அவரது வாரிசான மலீஷா என்கிற சிறுவன் இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் சக்கரவர்த்தியாக ஆக்கப்பட்டான். சிறுவன் என்று சொல்வது கொஞ்சம் அதிகப்படி. சிறுவனுக்கு இளைஞனுக்கும் இடைப்பட்டதொரு பொடியன் என்று வைத்துக் கொள்ளலாம். வயதோ, அனுபவமோ ஏதுமற்றவன். குமுஷ்டஜின் என்றொரு குறுநில மன்னன், இவனுக்கு வழிகாட்டியாக உடனிருந்தான். குறுநிலத்துக்கு அவன் மன்னனே ஒழிய, சாம்ராஜ்ஜியத்துக்கு தளபதி மாதிரி.

இளைஞனான கலீ:.பாவை எப்போது ஒழித்துக்கட்டி, தான் சக்கரவர்த்தியாவது என்கிற கனவுடன் அதற்கான செயற்திட்டங்களைத் தீட்டிக்கொண்டு இருந்தவன் அவன்.

அந்தச் சமயம் கலீ:.பாவின் பிரதிநிதியாக எகிப்தை ஆண்டு கொண்டிருந்தவர் பெயர் சலாவுதீன். சரித்திரத்தில் எப்போதாவது உதிக்கும் சில நல்ல ஆத்மாக்களுள் ஒருவர். ஐயோ, சாம்ராஜ்ஜியம் இப்படி நாசமாகிறதே என்கிற கவலை கொண்டவர். மத்திய அரசுக்கு விசுவாசமானவர். ஒரு முயற்சி செய்துபார்க்கலாம், தலைநகருக்குப் போய் கலீ:பாவைச் சந்தித்து நிலவரத்தை எடுத்துச் சொல்லி கிருத்தவர்களுக்கு எதிரான யுத்தத்தை முடுக்கி விடலாம் என்று நினைத்தார்.



சுல்தானை சலாவுதீன் சந்தித்துவிட்டால் தன்னுடைய அரிசி, பருப்புகள் வேகாமல் போய்விடுமே என்று அஞ்சிய குமுஷ்டஜின், அவர் புறப்பட்டு வரும் செய்தி கிடைத்ததும் சுல்தானைக் கிளப்பிக்கொண்டு வேறொரு இடத்துக்குப் போய் விட்டார். சலாவுதீன் விடாமல் சுல்தான் எங்கெல்லாம் அழைத்துப் போகப்படுகிறாரோ, அங்கெல்லாம் பயணம் மேற்கொண்டார்.

ஒரு கட்டத்தில் குமுஷ்டஜின்னுக்கு எதிராக யுத்தம் செய்யவும் தயாராகி, வெறுப்பில் தனியொரு மன்னனாகவே தாம் முடிசூடிக் கொண்டுவிடலாமா என்று யோசிக்கிற அளவுக்கே போனார் சலாவுதீன்.

இதற்கொரு காரணம்கூட இருந்தது. இந்த சலாவுதீன் ஒரு பெரிய வீரர். கலீ:.பாவின் பிரதிநிதியாக எகிப்தை ஆண்டு கொண்டிருந்தவர் என்றபோதும், தம் சுயபலத்தால் லிபியாவின் ஒரு பகுதி, ஏமன் ஹிஜாஸ் போன்ற இடங்களைக் கிருத்தவர்களிடமிருந்து வென்று இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தில் இணைத்திருந்தவர் அவர். பலவீனமான நான்கைந்து பகுதிகளை வெற்றிகொள்ள முடிந்த தன்னால், கவனம் குவித்தால் பலம் பொருந்திய ஜெருசலேத்தையும் வெல்ல முடியும் என்று நினைத்தார். கிருத்தவர்கள் பிடியில் ஜெருசலேம் இருந்தது அவருக்குச் சகிக்க முடியாததாக இருந்தது.

ஒரு மரியாதை கருதியே அவர் இதற்காக சக்கரவர்த்தியின் உத்தரவு கேட்டுப் போயிருந்தார்.

ஆனால் சக்கரவர்த்தி, இன்னொருவரின் கைப்பாவையாக இருந்ததால் வேறு வழியின்றி யத்தத்துக்குத் தயாராகவேண்டியிருக்கும் என்று அறிவித்தார்.

நல்லவேளையாக அப்படியொரு யுத்தம் ஏற்படவில்லை. பயந்து போன கலீ:.பா, உடனடியாக சலாவுதீனைத் தனியொரு சுல்தானாக அங்கீகரித்து (அதாவது, குறுநில மன்னன்) அவர் அப்போது ஆண்டுகொண்டிருந்த பகுதிகளை அவரே ஆளலாம், சக்கரவர்த்தியின் குறுக்கீடுகள் இருக்காது என்று சொல்லிவிட்டார். (இப்படியும் இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம் சிதறுண்டது வேறு விஷயம்.)

கி.பி.1182 ஆம் ஆண்டு தமது பத்தொன்பதாவது வயதில் கலீ:.பா மலீஷா மரணமடைந்தார். அது வரை சலாவுதீன் பொறுமை காத்திருந்தார். மலீக்ஷா மரணம் அடைந்துவிட்ட செய்தி கிடைத்ததுமே தமது படைகளைத் திரட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டார். கிட்டத்தட்ட மத்திய ஆசியா முழுவதையும் கபளீகரம் செய்யத் தொடங்கியது அவரது இராணுவம். இன்னும் ஓரிரண்டு இடங்களைப் பிடித்துவிட்டால் அவர்தான் கலீ:.பா என்கிற நிலை. ஏராளமான சிற்றரசர்களும் பிராந்திய கவர்னர்களும் சலாவுதீனுடன் போர் செய்ய விரும்பாமல், தாமே முன்வந்து அவருக்கு அடிபணிவதாக எழுதிக் கொடுத்துவிட்டுப்போனார்கள்.

சலாவுதீன் வீரர்தான். அதில் சந்தேகமில்லை. ஒட்டுமொத்த மத்திய ஆசியாவையும் கைப்பற்றுவதென்பதும் சாதாரண விஷயமில்லை. ஆனால் நமக்குத் தெரிந்த அலெக்சாண்டர் போலவோ, ஔரங்கசீப் போலவோ மாவீரனாக இவரை சரித்திரம் ஓரிடத்திலும் சொல்லவில்லை. ஆனால், அன்றைய மத்திய ஆசியாவெங்கும் ஆண்டு கொண்டிருந்த மன்னர் களிடையே, 'சலாவுதீன் அச்சம்' என்பது ஒருதவிர்க்க முடியாத நோயாகப் பரவியிருந்தது இதன் அடிப்படைக் காரணமாகிறது. இதனடைப்படையில்தான் அவர் போகிற இடமெல்லாம் அவருக்கு அடிபணிந்தனர்.

1187 ஆம் ஆண்டு அந்த யுத்தம் ஆரம்பமானது. டைபிரியஸ் என்கிற இடத்தில் நடந்த யுத்தம், சிலுவைப் போர்களின் வரிசையில் மிகக் கொரூரமாக நடந்த யுத்தங்கள் என்று சில சொல்லப்படுவதுண்டு. அவற்றுள் ஒன்று இது. கிட்டத்தட்ட பத்தாயிரம் கிருத்தவ வீரர்கள் இந்தப் போரில் இறந்து போனார்கள். சலாவுதீனின் படை அதுவரை அடக்கி வைத்திருந்த ஆத்திரம் முழுவதையும் இந்த யுத்தத்தில் வெளிப்படுத்தியது. அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். சிரியாவுடன் தொடங்கும் இந்த யுத்தம் கண்டிப்பாக ஜெருசலேத்தில் போய்த்தான் முடியும். அப்படித்தான் ஆனது.

டால்மெய்ஸ், நப்லஸ், ரமல்லா, சீசர்லா, பெய்ரூட், ஜா:.பா உள்ளிட்ட அன்றைய சிரியாவின் பல நகரங்களைக் கைப்பற்றி முன்னேறிய முஸ்லிம்களின் படை, சரியாக ஜெருசலேத்தின் வாசலில் வந்துநின்றது.

அன்றைக்கு ஜெருசலேத்தில் மொத்தம் அறுபதாயிரம் கிருத்தவ வீரர்கள் இருந்தார்கள். பல்வேறு தேசங்களிலிருந்து ஜெருசலேம் வந்து வசிக்கத்தொடங்கியிருந்த கிருத்தவர்களின் எண்ணிக்கையோ கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் தவிர, சில பத்தாயிரம் உள்ளூர்வாசிகள். ஒரு யுத்தம் என்று ஆரம்பமானால் எப்படியும் இலட்சக் கணக்கில்தான் உயிரிழப்பு இருக்கும் என்று திட்ட வட்டமாகத் தெரிந்தது.

ஒட்டுமொத்த முஸ்லிம் இராணுவமும் யுத்த உத்தரவுக்காகத் தினவெடுத்துக் காத்துக் கிடந்த அந்தக் கடைசிக்கணத்தில் சுல்தான் சலாவுதீன், யாருமே எதிர்பாராவிதமாக ஒரு காரியம் செய்தார். ஜெருசலேம் மக்களுக்கு அவர் ஓர் அறிவிப்பு வெளியிட்டார்.

"அன்புக்குரிய ஜெருசலேம் நகரின் பெருமக்களே! ஜெருசலேம் ஒரு புனிதபூமி என்பதை உங்களைப் போலவே நானும் அறிவேன். ஒரு யுத்தத்தின் மூலம் அந்த மண்ணில் இரத்தம் சிந்தப்படுவதை நான் விரும்பவில்லை. நீங்களாக விரும்பி கோட்டையை ஒப்படைத்து விடும்படி கேட்டுக்கொள்கின்றேன். அப்படிச் செய்வீர்களானால், என் மொத்த சொத்தில் ஒரு பகுதியையும் நீங்கள் சாகுபடி செய்வதற்குத் தேவையான நிலத்தையும் நான் உங்களுக்கு அளித்துவிட்டு வந்த வழியே போய்விடுவேன். யுத்தம்தான் தீர்வு என்று நீங்கள் முடிவு செய்வீர்களானால், விளைவுகளுக்கான பொறுப்பு என்னுடையதல்ல என்பதை இப்போதே தெரிவித்து விடுகிறேன்."

(தொடரும்...)

## குழந்தைக்கே குழந்தையா?

பெருவியன் நாட்டைச் சேர்ந்த ஒரு லீனா மெடீனா எனும் பெண் குழந்தை கருவுற்று குழந்தை பெற்றமையே இந்த செய்தி. குறித்த இச்சம்பவம் மே மாதம் 14 ம் நாள் 1939 ம் ஆண்டு இடம்பெற்றுள்ளது.



இச்சம்பவம் இடம்பெறும்போது சிறுமிக்கு 5 வயதும் 7 மாதங்களும் 21 நாட்களுமாக கணக்கிடப் பட்டுள்ளது. குழந்தை 5 வயதாக இருக்கும்போது வயிற்றில் கட்டிதான் வளர்வதாக நினைத்து மருத்துவமனையை அணுகியுள்ளார்கள் பெற்றோர்கள். அங்கு லீனாவை சோதித்த டாக்டர்களுக்கு அதிர்ச்சி, குழந்தை 7மாதக் கர்ப்பமாக இருந்தது. பூப்பெய்த வேண்டிய வயதில் ஒரு குழந்தை 7 மாதக் கர்ப்பமாக இருந்தது மருத்துவ உலகையே அதிரவைத்தது. இது வரலாற்றிலும் இடம்பிடித்தது. ஊடகங்கள் போட்டி போட்டுக் கொண்டி செய்தியை பரப்பியது. இக்குழந்தையின விசித்திர சம்பவத்தினை அந்நாட்டு அரசு புத்தகமாகவும் வெளியிட்டுள்ளது. இதனை ஆராய மாபெரும் மருத்துவக்குழுவும் முன்னின்றது.

குறித்த சிறுமி செப்டெம்பர 27 ஆம் திகதி 1933 ம ஆண்டு பிறந்துள்ளார். தனது 5 வயதில் கர்ப்பமடைந்துள்ளார். மே மாதம் 14 ஆம் நாள் 1939 ஆம் ஆண்டு அன்று அழகிய ஆரோக்கியமான ஒரு ஆண் குழந்தையை பெற்றுள்ளார. இவரது குழந்தை பிறக்கும்போது அதன் எடை 2700 கிராமாக இருந்துள்ளது. மருத்துவ வரலாற்றில மிகககுறைந்த வயதில் கருவுற்று குழந்தை பெற்ற பெண்ணாக இக்குழந்தை (பெண்) இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விசித்திர காதல்!

**பெயாமொன** என்ற நாட்டில 1911 ஆம் ஆண்டு ஏப்ரல் 26ம் திகதி பிறநதவர 'பெரசில்லா ரோமன்' என்கின்ற பெண். இவர் அக்காலகட்டத்தில் 'குரங்குப் பெண்' என அனைவராலும் அறியப்பட்டவர் அழைக்கப்பட்டவர். காரணம். இவரது உடல்முழுவதும் உரோமங்களால் மூடப்பட்டிருந்தது. ஒரு பெண்மைக்



குரிய அடையாளங்கள் அற்று முகத்திலும் மீசை மற்றும் தாடி வளர்நதிருந்தது. சிறுவயதில இருந்து இவருக்கு அதீத உரோம வளர்ச்சி இருப் பதைக் கண்ட பெற்றோர்கள் இவரை குணப்படுத்த முடியுமா என அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்திற்கு பயணம் மேற்கொண்டார்கள். அங்கு இவரை பரிசோதித்த டாக்டர்கள் ஆறு மாதங்கள் தங்கியிருக்க வேண்டும் என குறிப்பிட்டார்கள்: இறுதியில் வைத்தியர்களால் இவரை முற்றாக குணப்படுத்த முடியவில்லை.

எனினும் நம்பிக்கை இழந்த இவரது தந்தை இவருக்கு மூன்று வயதாக இருக்கும் போது சாகச வித்தை காட்டும் ஒருவரிடம் குழந்தையை ஒப்படைத்தார். பின்னர் இவருக்கு 6 வயதாகும்போது தந்தை இறந்துவிட சர்கஹ் வித்தைக்காரர்கள் இவரை வளர்க்கத்தொடங்கியுள்ளார்கள்.

அங்கு குரங்குப் பெண்ணாக வித்தை காட்டி பிழைப்பு நடத்தி வந்தார் இப்பெண். இதன் மூலம் குரங்குப்பெண்ணாக இவர் பிரபல்யமடைந்தார்.

குரங்குப்பெண் காதல் **வயப்பட்டாள்** காலங்கள் ஓடியது இவரது வாழ்வில சற்று வசந்தம் வீசத்தொடங்கியது. அங்கு தன்னுடன் சர்கஷ் விதைதைகாட்டி அமெரிககாவைச சேர்நத ஒரு இளைஞனுடன காதல் மலர்நதது. குறிந்த இளைஞனும் சாதாரண ஒருவர அல்ல என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. சரி வாஙக அடுதத அதிரசசிககு உஙகளை அழைத்து செல்கிறோம்.

### 'முதலை மனிதன்' அறிமுகம்

அமெரிக்காவின் புளோறிடா மாநிலத்தில ஒகஸட மாதம 23- 1914ம ஆணடு பிறநதார. 'எம்மிட் பெயானோ என்பவர். இவர அமெரிககாவில சர்கஸ் வித்தை காட்டி வநதார. இவரது தாயும் தநதையும இவர பிறநத பின்னர் திருமண பநதத்தை முறிதது்கொணடதால இவர சர்கஸ்தான் வாழக்கை என இருந்தார். இவரது உடலில் தோல இயறகைககு மாறாக முதலைததோல போன்று செதில்களாக காணப்பட்டது. எனவே இவர அககாலகட்டத்தில் அனைவராலும் 'முதலை மனிதன்' என அழைக்கப்பட்டார்.

### முதலை மனிதன்– குரங்கு பெண் திருமணம்

முதலை மனிதனுக்கும் குரங்குப்பெண் ணும் இடையில் மலர்ந்த காதல் திருமணத்தில் முடிந்தது. இதன் அடையாளமாக ஒரு வருடம் கழித்து பெர்சில்லா ரோமன் ஒரு பெண் குழந்தையை பிரசவித்தார். எனினும் அது நீண்ட நாட்கள் இவ்வுலகில் வாழ கொடுத்துவைக்கவில்லை. நோயால் குறித்த குழந்தை இறந்துபோனது.

### விசித்திர பிறவிகளின் பிரிவு

பின்னர் சர்கஸ் வித்தை காட்டியோ தமது வாழ்க்கையை நடத்திகொண்டிருந்த இநத விசித்திர யோடிகளின் வாழ்க்கையின் அத்தியாயம் முடியும் காலமும் வந்தது. 1995 இல் பெர்சில்லா இவ்வுலகிற்கு விடைகொடுத்தார. அதனை தொடர்ந்து 2001 இல் எம்மிட் பெயானோவும் இவ்வுலகை விட்டு பிரிந்தார்.

# போருக்குப் பின் புல(ன்)ம் பெயர்ந்தவர்களின் அரசியல்!

**லண்டனில் நடந்த 40 ஆவது இலக்கிய சந்திப்பு நடைபெற்ற கூட்ட மண்டபத்திற்கு உள்ளே நான் போய் சில நிமிடங்களில் ஒருவர் சிறிய புத்தகம்போல தயாரித் திருந்த பிரதிகளை கொண்டுவந்து ஒவ்வொருவராக விநியோகம் செய்துகொண்டிருந்தவர் ஒன்றை என்னிடமும் நீட்டினார். வாங்கிப் பார்த்தேன். முகப்பில் சாத்திரி ரயாகர மயான காண்டம் என்று தலைப்பிடப்பட்டிருந்தது பக்கங்களை புரட்டியபோதுதான் அது என்னையும், ராயாகரனையும் போட்டுத்தாக்குவதற்காக தயாரிக்கப்பட்ட பிரதிகள் என்று புரிந்தது. இன்றைய நிகழ்ச்சி சூடாகத்தான் இருக்குமென்று புரிந்தது. அதுபோலவே நான் பேசும் முறை வந்ததும் ஒரே கூச்சலும் குழப்பமுமாக சில நிமிடங்கள் கழிந்தது. அதைப் பற்றியும் எனது உரைக்குப் பின்னரான விவாதத்தின்போது கேள்வி - பதில்களை தனியான ஒரு பதிவாக இடுகிறேன். இந்த கூச்சல், குழப்பங்கள் கட்டுப்பாட்டிற்குள் வந்ததும், எனது கையில் இருந்த பிரதியை காட்டி சாத்திரி மயான காண்டம் என்று தலைப்பு கொடுத்திருக்கிறார்கள். எனவே சாத்திரியை அரிச்சந்திரன் என்று ஏற்றுக் கொண்டமைக்கு நன்றி தெரிவித்தபடி எனது உரையை தொடங்கினேன். கீழே எனது உரையின் முழு வடிவம்.**

– சௌரிபால் ஸ்ரீ சாத்திரியார்

அனைவருக்கும் வணக்கம்!

**லண்டனில்** இப்படி ஒரு நிகழ்வு நடக்க இருப்பதாக அறிந்ததும் நண்பர் பௌசர் அவர்களிடம் நானும் நிகழ்வில் கலந்துகொள்ளலாமா எனக் கேட்டிருந்தேன். காரணம் புலம்பெயர் வாழ்வில் இப்படியான நிகழ்வுகளில் எதிலுமே நான் கலந்து கொள்ளாது இதுவரை விலகியே இருந்திருக் கிறேன். அதற்கான தேவைகளும் இருந்தது. நான் கேட்டதுமே உடனடியாக ஓ...ஓ...ஓ... தாராளமாக கலந்துகொள்ளுங்கள். ஆனால் போருக்குப் பின் புலம்பெயர்ந்து வாழும் எமது சமூகத்தின் அரசியல் பற்றி 20 நிமிடம் கட்டாயம் ஒரு உரை ஒன்றை நிகழ்த்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அப்பதான்... அடடடா... சொந்தச் செலவிலை சூனியம் வைச்சிட்டமே என்று தெரிஞ்சிது. ஏனென்றால் நான் பத்திரிகைகளிலை, இணையங்களிலை ஏதாவது கதை, கட்டுரை எண்டு எழுதிற ஆள். என்னட்டை ஒரு பேப்பரையும் பேனையையும் அல்லது ஒரு கணினியை தந்தால் மடமடவெண்டு ஏதாவது எழுதி தந்திடுவன். ஆனால் இப்பிடி கொஞ்சப் பேருக்கு முன்னாலை கதைக்கவேணும்... அதுவும் அரசியல்... உருப்பட்ட மாதிரித்தான்.

போரிற்குப் பின்னர் புலம்பெயர் வாழ். தமிழ் சமூகம் எப்படியான அரசியலை செய்யலாம்.

என்ன செய்யலாமென்று யோசித்துப் பார்த்தேன். மிக சாதாரணம் ஒரே வரியில் சொல்லிவிடலாம். இப்போது உள்ள சூழ் நிலையில் பொத்திக்கொண்டு போசாமல் இருப்பதுதான் சிறந்தது...

இல்லை அதைவிட வேறு எதையாவது புலம்பெயர் தேசத்தில் எதையாவது செய்ய வேண்டும் என நினைத்தால், ஐ.நா சபை வரை நடக்கலாம். அடுத்தது இந்த கங்கணம் ஸ்ரைல் பாடலை எடுத்துச் செய்து அதில் மகிந்த, சோனியா, மன்மோகன் சிங், வேணுமெண்டால் பான் கீ மூன் ஆகியவர்கள் சேர்ந்து ஆடுகிற மாதிரி கிராபிக் செய்து 'யூ ரியூப்'பில் தரவேற்றி இணையத்தில பரவவிடுவதோடு முகப் புத்தகத்தில் பதிவுசெய்து அப்படியே லைக்குகளை அள்ளலாம், யாகம் நடத்தலாம், தேவாலயத்தில் திருப்பலி பூசை கொடுக்கலாம்.

சாகும்வரை உண்ணாவிரதம் என்று அறிவித்துவிட்டு சில நாட்களின் பின்னர் ஒரு மனுவை யாரிடாவது கொடுத்துவிட்டு அப்படியே பேசாமல் போயிடலாம். உண்மையில் எனக்குத் தெரியாத ஒரு விடயத்தை இங்கு கேட்கிறேன். அடிக்கடி சாகும்வரை உண்ணாவிரதம் என்று அதிரடி அறிவிப்புக்கள் சிலரது படங்களோடு வெளியாகும். ஆனால் இந்த சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் என்று அறிமுக காலத்தில் இருந்து இன்றுவரை திலீபனைத் தவிர, கொண்ட கொள்கைகளுக் காகவே யாராவது உண்ணா விரதம் இருந்து உயிரை விட்டிருக்கிறார்களா???? யாருக்காவது தெரிந்தால் ஒரு பெயரை சொல்லுங்கள். பிறகு எதுக்கு சாகும்வரை உண்ணா விரதம் என்று தொடங்கி பிறகு அதை சத்தமேயில்லாமல் கைவிட்டு, சாகும்வரை உண்ணாவிரதம் என்றால் என்னவென்று செய்துகாட்டிய திலீபனை கொச்சைப்படுத்துகிறீர்கள். பேசாமல் அடையாள உண்ணாவிரதம் எண்டு அறிவியுங்கப்பா..

ஆனால் இவை எல்லாவற்றையும் ஏற்கனவே பலர் செய்துகொண்டிருக்கிறார்கள். அதன் பலாபலன்கள் என்ன என்பதும் அதனை செய்பவர்களுக்கும் தெரியும். ஆனாலும் அதனை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அதை அப்படியே விட்டு விடுவோம் அவர்கள் தொடரட்டும்.

ஆனால் இலங்கையில் வாழுகின்ற சிறுபான்மை இனங்களான தமிழ் மற்றும் தமிழ் பேசும் முஸ்லிம்கள் ஆகியோர் ஆக்கபூர்வமாக, நடைமுறைக்கு சாத்திய மான யதார்த்தமான அரசியல் எப்படிச் செய்யலாம் என்றுதான் பார்க்கவேண்டும். அதைச்செய்வது இலகு. ஆனால் அதனை செய்வதற்கு யார் யார் முன்வருவார்கள் என்பதுதான் இங்கு பிரச்சினை. இங்கு நான் தனியாக தமிழர்களை மட்டும் குறிப்பிடாமல் தமிழ் பேசும் முஸ்லிம்களையும் குறிப்பிட்ட தற்கு காரணம்; அவர்கள் தமிழர்களோடு சேர்ந்து தமிழ்க் கட்சிகளோடு இணைந்து வேலைசெய்து தங்கள் அரசியல் போராட்டங்களை தொடங்கவேண்டிய காலகட்டம் இன்று வந்துவிட்டது. என்பதற்குமப்பால் அதற்கான கட்டாயம் வந்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். இது இரண்டு இனங்களுக்குமான இறுதி சந்தர்ப்பம் என்றும் கூறலாம். ஏனெனில் கடந்த முப்பதாண்டு கால யுத்தத்தின் முடிவில் இலங்கையில் தமிழினம் தனது அனைத்து வளங்களையும் இழந்து. அதன் பலம் இழந்து பேரினவாத அரசுடன் பேசும் சக்தியையும் இழந்தது மட்டுமல்லாமல், அங்கு புலிகளின் முடிவு என்பது தமிழர்களின் அரசியல் எதிர்காலம் என்ன என்பது என்று தெரியாமல் பெரும் சூனியத் திற்குள் தள்ளப்பட்டு நிற்கின்றது. தமிழ் மக்களின் அடுத்தகட்ட நகர்வு அல்லது எதிர்காலம் என்ன என்பதே தெரியாமல் தங்களோடேயே அனைத்தையும் அழித்துக் கொண்டு தமிழர்களிற்கு இந்த வெற்றிடத்தை ஏற்படுத்தியதில் புலிகள் அமைப்பின் பங்கும் முக்கியமானது. இது அனைவருக்கும் தெரிந்த விடயம்தான்.

இப்படியாக தமிழ்த் தரப்பினை முழுமை யாக பலவீனப்படுத்தி முடித்துவிட்ட பேரின வாதம் அடுத்ததாக இப்பொழுது கைவைக்கத் தொடங்கியிருப்பது தமிழ்பேசும் முஸ்லிம்கள் மீதுதான். அதைப் பற்றி விபரமாக நான் இங்கு சொல்லத் தேவையில்லை.

இன்றைய இலத்திரனியல் உலகத்தில் விநாடிக்கு விநாடி செய்திகள் பரவிக் கொண்டுதான் இருக்கின்றன. எனவே கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகமானது சில சுயநல அரசியல்வாதிகளினதும், இலங்கை ஆட்சியாளர்களது சூழ்ச்சிகளாலும் குறுகிய நோக்கம் கொண்ட மதவாதிக-ளாலும் தவறாக வழிநடத்தப்பட்டதன் எதிரொலியாக அவர்களிற்கும் தமிழர்களிற்கும் இடையில் தோன்றிய முரண்பாடுகளால் இரு தரப்பிலுமே பழிவாங்கல்கள், கொலைகள் கொள்ளைகள், கிழக்கில் தமிழ் கிராமங்கள் மீதான தாக்குதல்கள், யாழ்ப்பாணத்தில் முஸ்லீம் களின் வெளியேற்றம் என இரு இனங்களிற் கிடையேயும் பாரியதொரு இடைவெளி தோன்றிவிட்டிருக்கின்றது. இந்த இடை வெளியை பயன்படுத்தி இலங்கை ஆட்சி யாளர்கள் தங்கள் நோக்கங்களை நிறை வேற்றிவிட்டிருந்ததோடு அவர்களிற்கு உறுதுணையாக நின்ற தமிழ் – முஸ்லிம் அரசியல்வாதிகளும் வசதி வாய்ப்புக்களை அனுபவித்துவிட்டார்கள்.

இப்பொழுது தமிழர் தரப்பு பலவீனப்பட்டு விட்டதன் பின்னர் தங்களிற்கு துணை நின்ற தமிழ் தரப்பின் தேவைகள் ஆட்சியாளர்களிற்கு அற்றுப் போய்விட்ட நிலையில் சிங்கள பேரினவாதம் தனது பார்வையை முஸ்லீம்கள் மீது திருப்பியிருக்கின்றது. இப்படியான நிலை யில் இதுவரை காலமும் ஆட்சியாளர்களிற்கு முண்டுகொடுத்து வந்த முஸ்லிம் தலைமைகள் ஆட்சியாளர்களை கண்டிக்கவும் முடியாமல், பாதிக்கப்பட்டவர்களை சமாதானப்படுத்து வதில் என்ன செய்வதென்று தெரியாமல் கைபிசைந்து நிற்கிறார்கள். எழுபதுகளில் தமிழ் அரசியல் தலைமைகளை நம்பாமல், தமிழ் இளைஞர்கள் எப்படி பேரினவாதத் திற்கு எதிராக போராடத் தொடங்கினார்களோ அதேபோல இன்று பேரினவாதத்திற்கு எதிராக தங்கள் அரசியல் தலைமைகள் எதுவும் செய்யாது என்று நம்பிய முஸ்லீம் சமூகம் தங்கள் எதிர்ப்புக்களை காட்டத் தொடங்கி விட்டது.



இங்கு நான் பௌத்த சிங்கள இனவாதி களை பேரினவாதிகள் என்று அழைப்பது எதனால் என்றால், தமிழ் சமூகமும் சிங்கள இனவாதத்திற்கு கொஞ்சமும் குறைவில்லாத அதேயளவு மூர்க்கத்தோடும் பழிவாங்கும் உணர்வுகளோடும் காலங்காலமாய் தமிழினத்தை வழிநடாத்தியவர்களால் வளர்க்கப்பட்டுள்ளது. அதற்கு சாதாரணமான அண்மைக் கால உதாரணம் ஒன்றையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 2009ஆம் ஆண்டு புலிகள் அமைப்பின் முடிவின் பின்னர் நடந்த கடந்த தேர்தலானது தமிழர்களிற்கு முக்கியமானதொரு தேர்தலாகவும், அந்தத் தேர்தல் முடிவுகளாவது தமிழர் அரசியல் சூனியத்தில் ஒரு ஒற்றையடி பாதையாவது காட்டிவிடும் என்கிற நம்பிக்கை பலரிற்கு இருந்தது, நான் உட்பட. அந்தத் தேர்தல் நெருங்கும்போது இலங்கையில் ஆட்சியில் இருந்த அரசியலிற்குள்ளும் மாற்றம் ஏற்படு கின்றது. புலிகளை அழித்து வெற்றிக்கொடி யேற்றிய இராணுவத்தளபதி பொன்சேகாவை உண்மையான சிங்கள வீரன் கெமுனுவின் வாரிசு என்று பதக்கம் குத்தி பாராட்டிய மகிந்தவிற்கும், பொன்சேகாவிற்கும் பங்கு பிரிப்பில் பிரச்சினை வந்துவிடுகிறது.

அங்கையும் பங்கு பிரிப்பாலைதான் பிரச்சினை.

இதனால் அவர் எதிரணிக்கு தாவி தேர்தல் வேட்பாளராகிறார். தமிழர் தரப்பில் புலிகள் அமைப்பு இருந்த காலத்தில் அவர்கள் ஆசீர் வாதம் பெற்று, தமிழர் தரப்பில் பலமாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்து போட்டியிடுவதா அல்லது யாருடன் கூட்டு சேருவது என்று ஆலோசனைகள் நடாத்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிங்கள இடதுசாரித் தலைவரான விக்கிரமபாகு கருணாரட்ண தனது தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக இலங்கை வாழ் தமிழர்களிற்கு பிரச்சினை உள்ளது. நான் ஆட்சிக்கு வந்தால் அவர்களும் இந்த நாட்டில் சகல உரிமை களோடும் வாழும் சுய நிர்ணய முறையிலான தீர்வைக் கொடுப்பேன் என்று அறிவிக்கிறார். தமிழ் தேசிய கூட்டமைப்பையும் தன்னோடு இணைந்து கொள்ளுமாறு அழைப்புவிட்டு பேச்சு வார்த்தைகளும் நடந்தது. அதே கால கட்டப் பகுதியில் விக்கிரமாபாகு அவர்களின் செவ்வியொன்றை பிரான்சில் இருந்து ஒலி பரப்பாகும் வானொலி ஒன்றிற்காக செவ்வி காணுவதற்காக அவரோடு தொடர்புகொண்டு அவரோடு உரையாடிக் கொண்டிருந்த போது, தமிழர் தரப்பு தலைமைகள் ஆதரவு தனக்கு எந்தளவு இருக்கும் என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் அவரிற்கு சொன்ன விடயம் என்னவென்றால், தமிழ் இனவாதம் என்பது சிங்கள இனவாதத்திற்கு சற்றும் குறைவில்லாத ஒன்று. எனவே ஒரு இனவாதம் இன்னொரு இனவாதத்துடன் தான் கைகுலுக்கிக் கொள்ள விரும்புமே தவிர, உங்களைப் போன்ற இடதுசாரிகளுடன் கைகுலுக்கும் என்பது சந்தேகமே. ஆனாலும் முயற்சித்து பார்க்கலாம் என்று கூறியிருந்தேன்.

அதேபோல தமிழர்களிற்கு பிரச்சினை இருக்கின்றது. அவர்களிற்கு சுய நிர்ணய அடிப்படையில் தீர்வு காணுவேன் என்று அறிவித்த விக்கிரமபாகுவை நிராகரித்து விட்டு, இந்த நாட்டில் எந்தப் பிரச்சினை யுமே இல்லை. அவர்களிற்கு எதுவுமே கொடுக்கத்தேவையில்லை என்று அறிவித்த பொன்சேகாவோடு கூட்டுச்சேர்ந்தார்கள். இங்கு ஒரு வரலாற்று உண்மை மையையும் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியம். 1956 ஆம் ஆண்டு பருத்தித்துறை தொகுதியில் பிகந்தையா எனும் கம்யூனிஸ்ட்டை நாடாளு மன்ற உறுப்பினாராய் தெரிவு செய்ததைத் தவிர வேறு எந்தொரு இடதுசாரியையும் தமிழ் மக்கள் தமது நீண்ட வரலாற்றில் தெரிவு செய்திருக்கவில்லை.

இங்கு சிங்களவர்களிடம் இனவாதமும் மதவாதமும், தமிழர்களிடோயே இனவாதம் இருக்கின்றது என்றில்லை, முஸ்லிம்கள் மதவாதத்தால் தூண்டப்படுகிறார்கள். இங்கு ஒரு ஆறுதல் தமிழர் தரப்பு இன்னமும் இலங்கையில் மதவாதத்தால் தூண்டப்பட வில்லை. பிறகு அவர்களிற்குள்ளேயே கிறிஸ்தவர்கள், இந்துக்கள் என்று மோதிக் கொள்ளத் தொடங்கிவிடுவார்கள். இங்கு தவறு எங்கு நிகழ்கிறதென்றால் அந்த மக்களை வழிநடாத்தும் தலைமைகளாலேயே இவர்கள் தவறாக வழிநடாத்தப்படுகிறார்கள். சரியான – சுயநலமற்ற தலைமைத்துவம் எங்கும் எந்த இனங்களிடமும் இல்லை.

சரி பல காலமாக வளர்க்கப்பட்ட இன வாதத்தைவிட்டு இப்பொழுதுள்ள நடை முறைக்கு வருவம். யுத்தம் முடிந்த பின்னர் புலிகள் அமைப்பில் இருந்த ஆயிரக்கணக் கான பெண் போராளிகளின் நிலை மிகமோச மாக இருக்கிறது. பாவம் அவர்கள். புலிகள் பலமாக இருந்த காலங்களில் தூக்கி தலையில் வைத்துக் கொண்டாடிய அதே சமூகத் தால் அதே உறவுகளால் புறக்கணிக்கப்படு கிறார்கள். அவர்களை முன்னை நாள் போராளிகள் என்று தூக்கி கொண்டாடச் சொல்லவில்லை. சாதரண ஒரு மனிதப் பிறவியாகவேனும் மதிக்கவில்லை தமிழ் சமூகம். இப்போ அண்மைக் காலத்திலும் அல்ஜசீரா தொலைக் காட்சியினர் முன்னை நாள் பெண் போராளிகளைப் பற்றி ஒரு விவரணம் தயாரித் திருந்தார்கள்.

(தொடரும்...)

# அமெரிக்கா - ஈராக்

# குண்டுகள் வெடிக்கின்றன?!





பொஸ்ரன் மரதன் ஓட்ட மைதானத்தில் போட்டியாளர்கள் இறுதிக் கோட்டை அண்மித்த வேளையில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் மூவர் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக உள்ளூர் பொலிஸ் அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

உலகத்திலேயே பழமைமிக்கதும் மதிப்புக்குரியதுமான மரதன் ஓட்டம் நடந்துகொண்டிருந்த மைதானம் உடைந்த கண்ணாடித்துண்டுகளும் புகைமண்டலமுமாக காணப்பட்டதாக செய்தியாளர்கள் கூறினர். இந்த ஓட்டத்தில் 27ஆயிரம் போட்டியாளர்கள் பங்கேற்றுள்ளனர்.

மேலும் 2 வெடிக்கக்கூடிய குண்டுகள் இறுதிக்கோட்டுக்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அறியப்படுகின்றது.

சம்பவம் குறித்து அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு தெரிவிக்கப்பட்டதாயும் அவர் காயமடைந்தவர்களுக்கு தேவையான உதவிகளை செய்யும்படி மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளாரெனவும் அறியப்படுகின்றது. முக்கிய இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.

பொஸ்ரனில் இடம்பெற்ற குண்டு வெடிப்பானது மிகவும் பயங்கரமான சம்பவம். இந்தக் குண்டுவெடிப்புப் பற்றி பொலிஸ் ஆணையாளர் டேவிஸ் கூறுகையில், மூன்று குண்டுகள் வெடிக்கப்பட்டிருக்கின்றன எனவும், ஆனால் இவை வெடிப்பதற்கு முன்னர் எந்தவிதமான பயமுறுத்தல் சம்பவங்களும் நடக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் குறிப்பிட்ட அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், உள்ளூர் பொலிஸ் அதிகாரிகள் எங்கெல்லாம் இதுபற்றிய தகவல் பெறமுடியுமோ அங்கெல்லாம் தகவல்களைச் சேகரிக்கின்றனர் எனவும் தெரிவித்திருக்கின்றார். அத்துடன் மரதன் ஓட்டம் முடிவடைகின்ற இடத்தில் இரு குண்டுகளும், ஜேன் கெனடி நூல் நிலையத்திலும் ஒரு குண்டுமாக மொத்தமாக மூன்று குண்டுகள் வெடித்திருப்பதாகத் தெரிவித்தார்.

அமெரிக்காவில் பெரும் அதிர்ச்சி அலையை உருவாக்கிய இந்த குண்டு வெடிப்பு குறித்து உள்ளூர் பொலிஸ் ஒத்துழைப்புடன் எப்.பி.ஐ. தீவிர விசாரணை நடத்திவருகிறார்கள். அதில் முதற்கட்ட விசாரணையில், தீவிரவாதிகள் பயன்படுத்தியது குக்கர் வெடிகுண்டு என்பதை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

பால்பேரிங், ஆணிகள் ஆகியவை கொண்டு இந்த குக்கர் குண்டை தயாரித்து கறுப்புநிற நைலோன் பைகளில் வைத்து எடுத்துச்சென்று மரதன் பந்தயம் நிறைவடையும் பகுதியில் வைத்து வெடிக்க செய்துள்ளனர் என்பது தெரிய வந்தது.

இந்நிலையில் சம்பவம் நடந்த போயில்ஸ்டன் தெருவில் உள்ள சி.சி. டிவிக்களில் பதிவாகியுள்ள வீடியோக்களை வைத்து இரண்டு நபர்கள் மீது எப்.பி.ஐக்கு சந்தேகம் ஏற்பட்டது.

ஒரு கடையில் வைத்திருந்த கமெராவில் பதிவான வீடியோ காட்சி எப்பி.ஐ. பொலிஸாரிடம் சிக்கியது. அதில் 2ஆவது குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் ஒரு நபர் கைத்தொலைபேசி கொண்டு நிற்கும் காட்சி பதிவாகியுள்ளது.

சற்றுநேரத்தில் குண்டுவெடிக்க, மக்கள் சிதறிஓட, அந்த நபர் மட்டும் மற்றவர்களுக்கு மாறுபட்டு எதிர்த்திசை நோக்கி ஓடும் காட்சியும் பதிவாகி இருந்தது. இந்நிலையில்தான் இதில் தொடர்புடைய ஒரு தீவிரவாதி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளான். பின்னர் மற்றைய சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்திய - அமெரிக்க எலும்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணரான டொக்டர் விவேக் பொஸ்டன் குண்டுவெடிப்பின்மூலம் அமெரிக்க மக்களின் மனதில் நாயகனாகி விட்டார். 3 பேர் மரணமடைந்ததுடன் 180 பேர் படுகாயமடைந்தனர். இதில் காயமடைந்தவர்களுக்கு முதலுதவி செய்து உதவி இருக்கிறார் டொக்டர் பொஸ்டனில் உள்ள மருத்துவமனையில் பணியாற்றி வருகின்ற ஷாவும், அவருடன் பணிபுரிபவர்களும். முதலில் பெரும் சத்தம் கேட்டு, என்ன நடந்ததென புரியாமல் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர். ஆனால் அவர்கள் சென்றடையும் முன்னரே இரண்டாவது குண்டும் வெடித்துவிட்டது. ஷாவின் குடும்பத்தினர் அனைவருமே குண்டுவெடிப்பு நடைபெற்ற பகுதியில்தான் இருந்துள்ளனர். எனவே, சம்பவ இடத்தை நோக்கி விரைந்துள்ளார்.

இது குறித்து ஷா கூறுகையில், மக்கள் ஒரு காலை அல்லது இரண்டு காலையும் இழந்து அதிர்ச்சிகரமான காயங்களோடு காணப்பட்டனர். நான் இதற்கு முன்னர் இவ்வளவு காயமடைந்தவர்களை இதுபோன்று ஒருசேர கண்டதில்லை. உடனடி மருத்துவ உதவி தேவைப்படுவோர் யார் என்றும் யாருக்காவது அதிகப்படியான இரத்த இழப்பு ஏற்பட்டுள்ளதா எனவும் சோதித்தேன்.

சிறிது நேரத்திலேயே தேவையான மருத்துவ அதிகாரிகள் வந்து காயம் பட்டவர்களுக்கான மருத்துவ தேவைகளை கவனிக்கத் தொடங்கிவிட்டனர். பின்னர் நான் எனது குடும்பத்தினரைத் தேட ஆரம்பித்தேன். கூட்டத்தில் அவர்களுடைய முகம் எங்காவது தெரிகிறதா என்று பார்த்தேன். நல்ல வேளையாக எனது குடும்பத்தினர் பாதுகாப்பாகவே இருந்தனர என்று தெரிவித்துள்ளார்.

## பொஸ்டன் நகர பல்கலைக்கழகத்தில் மர்ம மனிதன் துப்பாக்கி சூடு

அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் உலகப்புகழ் பெற்ற மாசாச்சூசெட்ஸ் பல்கலைக்கழகத்தில் ஆயிரக்கணக்கான மாணவ - மாணவிகள் படித்துவருகின்றனர். இந்நிலையில் பல்கலைக்கழகத்தினுள் நுழைந்த மர்ம மனிதன் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டதினால் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஏற்கனவே, குண்டுவெடிப்பு சம்பவத்தால் அமைதியிழந்திருக்கும் பொஸ்டன் நகரில் மீண்டும் நடைபெற்றிருக்கும் தாக்குதல் சம்பவம் மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. சம்பவம் பற்றிய தகவல் அறிந்த பொலிசார் பல்கலைக்கழக வளாகத்தை சுற்றி வளைத்து மர்ம மனிதனை பிடிக்க தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

வளாகத்தினுள் இருக்கும் அனைவரும் செல்போன்களை அணைத்து வைக்கும்படி பொலிசார் வேண்டுகோள்விடுத்தனர். வகுப்பை விட்டு வெளியே வரவேண்டாம் என்று மாணவர்களை எச்சரித்தனர். பல்கலைக்கழக வளாகத்தின் மேல் ஹெலிகொப்டர்களும் தேடுதல் வேட்டையில் ஈடுபடுத்தப்பட்டது.

## ஒபாமாவின் கடிதத்தில் வீஷப் பொருள்

சமீபத்தில் போஸ்டன் நகரில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு பிறகு பாதுகாப்பு ஏற்பாடுகள் இருமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் அதிபயங்கர 'ரிசின்' (ஆமணக்கு செடியின் கழிவுகளில் தயாரிப்பது) என்னும் விஷப்பொருள் தடவி இருப்பதை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ரிசின் ரவைகள் காற்றில் கலந்து சுவாசப்பைக்குள் சென்றால் அதிபயங்கர நோய்த் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த கடிதங்களை அனுப்பிய நபரை பிடிக்க அமெரிக்க உளவுத் துறை பொலிசார் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர்.

## உரத்தொழிற்சாலையில் பயங்கர வெடி விபத்து

அமெரிககாவின டெகசாஸ மாகாணததில வாகோ நகருக்கு அருகிலுள்ள உரத் தொழிற்சாலையில் ஏபரல் 18 அதிகாலை ஏறபடட பயஙகர வெடி விபததில 70 பேர பலியானதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

இதில் ஏறபடட தீ அருகில இருநத பல கட்டடஙகளுக்கும், வீடுகளுக்கும் மளமளவெனப் பரவியுள்ளது. மேலும் இந்த கட்டடஙகளினுள் பலர் சிக்கி இருநததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தகவல் அறிந்ததும் அங்கு விரைந்து சென்ற தீயணைபபுத துறையினர் தீயை அணைக்க போராடினர். இப்பணியில் 6 ஹெலி கொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டன. இந்த விபத்தில் 70 பேர் பலியாகியுள்ளனர். 100க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்களை மீட்கும் பணியில் தீயணைப்பு வீரரகளும், பாதுகாப்பு படையினரும் தீவிர முயற்சி மேற்கொண்டனர்.

இது தற்செயலாக நிகழ்ந்த விபத்தா அல்லது தீவிரவாத செயலா என்று விசாரணை நடத்தப்பட்டுவருகின்றது. இந்த விபத்தில் தொழிற்சாலைக்கு அருகில் இருந்த மருத்துவமனை ஒன்றும் பலத்த சேதமடைந்துள்ளது. இதனால் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

## ஈராக்கில் குண்டுவெடிப்பு

ஈராக்கில் ஏப்ரல் 15, திகதி நடந்த குண்டுவெடிப்புகளில் குறைந்தது 55 மக்கள் உயிரிழந்தனர். அதே நாளின் பிற்பகுதியில் அமெரிக்காவில் போஸ்டன் நகரில் மராத்தான் ஓட்டப் பந்தய நிகழ்வில் 2 குண்டுகள் வெடித்ததில் 3 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்க இராணுவம் ஈராக்கிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு நடக்கவிருந்த

→

தொகுப்பு - வேணுகிருஷ்ணா





புலிகளின் வீழ்ச்சி! இறுதி நாட்கள்...

புலிகளின் வீழ்ச்சித் தொடர் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இந்தவாரம் இடம்பெறவில்லை என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.



# புலிகளின் வதை முகாமில் மணியம்

வதை 58

ஆனால் தாமோதரம் பிள்ளை புலிகளின் கையில் வேறு காரணங்கள் காரணமாகச் சிக்கி, பின்னர் புலிகளால் அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. ஆனால் பிற்காலத்தில் வெளி வந்த தகவல்களைப் பார்க்கையில், இவ்விருவருக்கும் தீண்டாமைக்கு எதிரான போராட்ட காலத்திலேயே தாழ்த்தப்பட்ட மக்களின் போராளி களால் மரண தண்டனை நிறை வேற்றப் பல தடவைகள் முயற்சி கள் நடந்ததாகவும் அது கைகூடாமல் போய்விட்டதாகவும் அறிய வருகிறது.

இதில் முக்கியமான விடய என்னவெனில், தீண்டாமை ஒழிப்புப் போராட்ட காலத்தில் எதிரும் புதிருமாக இருந்த தாமோதரம்பிள்ளையும் நானும் இப்பொழுது புலிகளின் ஒரே சிறைக் கூண்டுக்குள் கைதி களாக இருக்கின்றோம். இங்கே எங்கள் இருவருக்குமிடையிலான தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் சம்பந்தமான முரண்பாடு பின்னுக்குத் தள்ளப்பட்டு, இருவரும் ஒரே பொது எதிரி யான புலிகளின் கைதிகளாக இருக்கின்றோம். ஒரு சமுதாயப் பிரச்சினை சம்பந்தமான விடயத்தில் எதிரும் புதிருமாக இருந்த நாம் இருவரும், இப்பொழுது ஒரே அதிகாரத்தின் கைதிகளாக மாற்றப்பட்டிருப் பதைத்தான், பாசிசம் சமூகத் தின் எல்லாவிதமான இதர முரண்பாடுகளையும் பின்னுக்குத் தள்ளி, தனக்கும் மக்களின் எல்லாப் பிரிவினருக்குமிடை யான முரண்பாடு என்ற பிரதான எல்லைக்கோட்டை வகுத்துக் கொள்ளும் என்ற ஜோர்ஜ் டிமிட்ரோவின் கருத்து வலியுறுத் துகிறது போலும்.

துரையப்பா வழக்கு சம்பந்தமாக தாமோதரம்பிள்ளையை மட்டும் புலிகள் கைது செய்யவில்லை. சுன்னாகத்தைச் சேர்ந்த முருகேசு என்ற ஒரு பொலிஸ்காரரையும் கைது செய்திருந்தனர். அவருக்கு பின்னர் என்ன நடந்தது என்று தெரியவில்லை. இவர்களை விட முக்கியமாக யாழ்.மாநகர சபையில் கரையூர் பகுதி வட்டாரத்திலிருந்து நீண்ட காலம் உறுப்பினராகவும், ஒருமுறை பிரதி முதல்வராகவும் இருந்தவரும், துரையப்பாவின் மிகநெருங்கிய சகாவுமான எம்.எஸ்.பேரின்பநாயகத்தையும் புலிகள் கைதுசெய்து எமக்கு அடுத்த அறையில் வைத்திருந்தனர். அவருக்கும் தாமோதரம்பிள்ளைக்கு மரண தண்டனை நிறைவேற்றப் பட்ட நேரத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாகப் பின்னர் அறிந்தேன்.

இவர்கள் தவிர எமது வதை முகாமுக்குள் பாண்டியன் என்றொருவர் நான் அங்கு செல்லும்போதே நீண்டகாலக் கைதியாக இருந்தார். இவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். புலிகளின் ஆரம்பகால திறமைமிக்க படகோட்டிகளில் ஒருவர். புலிகளின் வள்ளங்களின் இயந்திரங்களைப் பாதுகாப்பாக வைக்கும் ஒரு வீட்டிலிருந்த விதவைப் பெண்ணுடன் பாலியல் தொடர்பு கொண்டிருந்ததாகக் கைதுசெய்யப்பட்ட அவரும், அவரது இன்னொரு சகாவும் மிக நீண்டகாலமாக முடிவு தெரியா மல் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருந்தனர். ஆரம்பத்தில் அவர்களை வல்வெட்டித்துறை சந்தியில் வைத்து பகிரங்கமாக சுட்டு மரண தண்டனை நிறைவேற்ற புலிகள் தீர்மானித்திருந்ததாகவும், ஆனால் வல்வெட்டித்துறை மக்கள் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால், ஆயுள் தண்டனை வழங்கப்பட்டதாகவும் பாண்டியனே என்னிடம் கூறினார். அவர் புலிகளின் கடும் விசுவாசியாக ஒருகாலத்தில் இருந்திருந்தாலும், பின்னர் நாம் சிறைக்குள் அந்தரங்க விடயங்களை அலசும் எமது 'உள் வட்டத்தில்' ஒரு நம்பிக்கையான நண்பராக இருந்தார்.

இவர் தவிர கிளிநொச்சியில் புலிகளின் நிதிப் பொறுப்பாளராக இருந்த செந்தில் என்பவரும் அங்கு ஒரு கைதியாக இருந்தார். புலிகளுக்கிடையிலேயே ஏற்பட்ட பதவி மோதல் காரணமாக, புலிகளின் தலைமையிடம் செல்வாக்கு உள்ளவர்களால் இந்திய வம்சாவழியைச் சேர்ந்த இந்த செந்தில் இங்கு இழுத்து வரப்பட்டிருந்தார். இயக்க நிதியை மோசடி செய்தார், பெண்களுடன் ஒழுங்கீனமாக நடந்தார் என்ற குற்றச்சாட்டுகள் அவர்மீது சுமத்தப்பட்டிருந்தன. அந்தக் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ளும்படி அவர் கடுமையாகச் சித்திரவதை

**பிரபாகரனும் அவரது சீடப்பிள்ளைகளும் கிறிஸ்தவ அமைப்புகளுடன் இவ்வளவு தந்திரோபாயமாக நடக்கக் கூடிய விவேகமானவர்கள் அல்ல.**

**கிறிஸ்தவ மதத்தில் கைவைத்தால் மேற்கு நாடுகளின் தயவை இழக்க வேண்டிவரும் என, புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் 'தேசியத் தலைவருக்கு' மிகவும் ஆணித்தரமாக எடுத்துரைத்ததின் காரணமாகவே, அந்த மதத்தினர் மீது புலிகள் 'பயபக்தியுடன்' நடந்துகொண்டதாக, ஒரு புலி உறுப்பினன் மூலமாகவே எனது சிறை வாழ்க்கையின் போது அறிந்து கொண்டேன்.**

செய்யப்பட்டார். அவர் கைகள் கால்களில் இருந்த எலும்புகள் 'சூப்' வைப்பதற்கு நொருக்குவது போல நொருக்கப்பட்டன. கிளி நொச்சியிலிருந்து பல பொய்ச் சாட்சிகளையும் கொண்டுவந்து குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முயன்றனர். இருந்தும் அவர் உறுதியாக நின்று குற்றச்சாட்டு களை மறுத்ததினால் அவரை ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது.

மயிலிட்டியிலிருந்து தங்கலிங்கம் என்றொருவரையும் கைதுசெய்து வந்து சித்திரவதை செய்தனர். இவ்வளவிற்கும் அவர் புலிகளின் சிற்றூரவைத் தலைவராகவும் இருந்தவர். திருமணம் செய்து கொள்ளாத அவர், ஊர் மக்களின் பிரச்சினைகளுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்து சேவையாற்றிக் கொண்டிருந்த ஒருவர். அதே ஊரில் புலிகளின் புலனாய்வுப் பிரிவில் செயற்பட்டுக் கொண்டிருந்த பச்சைக்கிளி என்பவருக்கும் (இவரை எனக்கும் தெரியும். கிட்டு, திலீபன் போன்றோரைச் சந்திப்பதற்காக இவர் யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்னால் உள்ள எனது கடை வாசலில் வந்து காவல் இருந்ததால் சிறிது அறிமு-கமும் உண்டு) தங்கலிங்கத்துக்கும் இடையில் முரண்பாடு வந்ததால், எந்தவிதமான பாரதூரமான குற்றமும் செய்யாத தங்கலிங்கம் பச்சைக்கிளியின் 'உபயத்தில்' எங்களுடன் கம்பி எண்ணிக் கொண்டிருந்தார்.

ஒரு கத்தோலிக்கப் பாதிரியாரின் வாகனச் சாரதியாக இருந்த செபமாலை என்ற ஒருவரும் புலிகளால் பிடித்து வரப்பட்டிருந்தார். அவரது மனைவியின் அக்காவின் மகளை புலிகள் தமது இயக்கத்துக்குப் பலவந்தமாகப் பிடித்துச் சென்றிருந்தனர். சிறிதுகாலம் புலிகளுடன் இருந்த அந்தப் பிள்ளை, சந்தர்ப்பம் ஒன்று கிடைத்த நேரத்தில் அங்கிருந்து தப்பியோடி, அந்தப் பிள்ளையின் சிறிய தாயாரான செபமாலையின், கிளிநொச்சி கோணாவிலில் உள்ள வீட்டில் மறைந்திருக்கையில் புலிகளால் மீண்டும் கைதுசெய்யப் பட்டிருக்கின்றார். செபமாலை அந்தப் பிள்ளையை புலிகள் இயக்கத்தைவிட்டுக் கடத்திச் சென்றதுடன், தனது கள்ளக் காதலியாகவும் வைத்திருந்தார் என்பதுதான் அவர் மீதான புலி களின் குற்றச்சாட்டு.

அந்தக் குற்றச்சாட்டை ஒப்புக் கொள்ளும்படி செபமாலை உடம்பு முழுவதும் இரும்புக் கம்பியால் புலிகளால் அடிக்கப்பட்டார். சற்று பருத்த சரீரம் கொண்ட அவரை, எனது விசாரணை நடந்து கொண்டிருக்கையில் புலிகள் அடித்து நொருக்கியதை எனது கண்களால் பார்த்தேன். இரண்டு மூன்று பேர் சேர்ந்து அவரை இரும்புக் கம்பியால் அடிக்க, அவர் தரையில் உருண்ட வாறு கதறிக் கொண்டிருந்தார். ஆனால் புலிகளது குற்றச்சாட்டில் பாதியைத்தான் – அதாவது இயக்கத்திலிருந்து ஓடி வந்தவரை ஒழித்து வைத்திருந்தது என்பதை மட்டும் – அவர் ஒப்புக்கொண்டார்.

பின்னர் செபமாலையினரின் குடும்பத்தவர்கள் அவர் சாரதியாகப் பணிபுரிந்த பாதிரியாரை அணுகியதன் காரணமாக சில தினங்களிலேயே அவர் விடுதலை செய்யப்பட்டார். அதற்காக அவர் குற்றவாளி என எழுதப்பட்ட முதல் விசாரணை அறிக்கை கிழித்தெறியப்பட்டு, புதிய அறிக்கையொன்றை புலிகள் எழுதியதாக அவர் இரகசியமாக எங்களிடம் கூறினார். அவரை விடுதலை செய்யும்படி புலிகளின் மேலிடம் கூறினாலும், அவரது உடம்பில் அடிகாயங்கள் இருந்ததால், கொஞ்ச நாட்கள் அங்கு வைத்திருந்து நோக்கள், வீக்கங்கள் சுகமான பின்னரே அவரை விடுதலை செய்தனர்.

இந்த விடயத்தில் புலிகளுக்கு கிறிஸ்தவ மத குருக்களுக்கு மீது அன்றும் இன்றும் இருக்கும் 'மரி யாதை' ஆச்சரியகரமானது. இது சம்பந்தமாக நான் இரண்டு மூன்று விடயங்களை அவதானித்துள்ளேன். இந்த செபமாலையின் விடயத்தைத் தவிர, எனக்குத் தெரிய வேறு ஒரு சம்பவமும் நடந்தது. கண்டி வீதியில் முகமாலைக்கு அருகில் இத்தாவில் என்ற இடத்தில், ஒரு பாதிரியார் ஒரு தென்னந்தோட்டம் அமைத்து அங்கு அநாதைச் சிறுவர்கள் சிலரைப் பராமரித்து வந்தார். அவர்களில் சிலரை புலிகள் தமது படையணிக்குக் கடத்திச் சென்றுவிட்டனர். பாதிரியார் உடனடியாகவே அப்பகுதிப் புலிப் பொறுப்பாளரிடம் சென்று அந்தச் சிறுவர்களை விடுவிக்கும்படி கோரினார். தாங்கள் அப்படி எந்தச் சிறுவர்களையும் பிடித்துச் செல்லவில்லை என புலிகள் மறுத்துவிட்டனர்.

அந்த பாதிரியார் விடவில்லை. அந்தச் சிறுவர்களை விடும்படி கோரி இத்தாவில் சனசமூக நிலையத்துக்கு முன்னால் கண்டி வீதி ஓரத்தில் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்து விட்டார். அதைக்கண்ட புலிகள் திகைத்துவிட்டனர். உடனே ஓடோடிச் சென்று தாம் பிடித்துச் சென்ற அந்த அநாதைச் சிறுவர் களைக் கொண்டுவந்து பாதிரி யாரிடம் ஒப்படைக்க வேண்டி வந்துவிட்டது. இந்த மாதிரி ஒரு சம்பவம் எங்காவது ஒரு சைவ அநாதைச் சிறுவர் இல்லத்தில் நடந்து, யாராவது ஒரு ஐயர் உண்ணாவிரதம் இருந்தால் என்ன நடந்திருக்கும்? வாகரையில் ஜனாதிபதி மகிந்தவுக்கு மாலை போட்ட குருக்களுக்கு நடந்ததுதான் நடந்திருக்கும்.

அதுமட்டுமல்ல, புலிகள் வட மாகாணத்தில், குறிப்பாக எனது பளைப் பிரதேசத்தில் இருந்த தனியாருக்குச் சொந்தமான தென்னந் தோட்டங்கள் எல்லாவற்றையும் பலவந்தமாக அபகரித்து வைத்திருந்தனர். அவ்வாறு அபகரித்த தென்னம் காணிகளின் தொகை நாவற் குழியிலிருந்து இயக்கச்சி வரை பத்தாயிரம் ஏக்காகள் என, அவற்றுக்குப் பொறுப்பாக இருந்த றோமன் என்ற புலி உறுப்பினன் சிறைக்குள் வைத்து ஒரு சமயம் எனக்குக் கூறினான். (அவன் சிறைக்கு ஏன் கொண்டு வரப்பட்டான் என்பதைப் பின்னர் கூறுவேன்) இந்தத் தென்னந் தோட்டங்களில் தனியாருடையது மட்டுமின்றி, இந்தியாவிலுள்ள சிதம்பரம் கோவில், யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் என்பனவற்றுக்கு தரும நன்கொடையாக எழுதப் பட்டிருந்த காணிகளும் அடங்கும். அந்தக் காணிகளைக்கூட புலிகள் விட்டு வைக்கவில்லை. ஆனால் அதேநேரத்தில் முகமாலையிலும் வேறு சில இடங்களிலும் கிறிஸ்தவ மிசனறிகளுக்குச் சொந்தமாக இருந்த ஏக்கர் கணக்கான காணிகளில் புலிகள் கை வைக்கவே இல்லை.

அதுமட்டுமல்ல, இந்திய அமைதிப்படை இருந்தகாலத்தில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின்போது, புலிகள் நேரடியாகப் போட்டியிடாமல் வே.பாலகுமாரனின் ஈரோஸ் இயக்கத்தைப் போட்டியிட வைத்துவிட்டுப் பின்னர் அவர்களையும் பதவி விலக வைத்ததை அனைவரும் அறிவர். அந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மக்கள் அதிகமாக வாழும் நாவாந்துறை, குருநகர், பாசையூர் போன்ற இடங்களில் இருந்த பங்குத் தந்தைகளும், அருட் தந்தைகளும், அருட் சகோதரிகளும் வெளிப்படை யாகவே வீடு வீடாகச் சென்று ஈரோஸ் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும்படி கோரியது எனக்குத் தெரியும். ஈரோஸ் சுயமாகத் தேர்தலில் நின்றிருந் தால் அது நடந்திருக்காது. புலிகளின் பினாமியாக அவர்கள் நின்றதாலேயே அருட் சகோதரர்களின் 'அருள்' கிடைத்தது.

கிறிஸ்தவ திருச்சபைகளின் புலிகளுக்குச் சார்பான இந்தப் போக்கு புரிந்துகொள்ள முடியாததல்ல. இன்று வெளிப் படையாகவே மன்னார் ஆயர் யோசப்பு ராயப்பு போன்றவர்கள் தமிழ் தேசியத்தின் தீவிர ஆதரவாளர்களாகக் (அவர் வெள்ளை அங்கி அணிந்த புலி எனவும் பலராலும் விமர்சிக்கப்பட்டவர்) களத்தில் குதித்திருப்பதிலிருந்தே இதைப் புரிந்துகொள்ள முடியும். பிரபாகரனும் அவரது சீடப்பிள்ளைகளும் கிறிஸ்தவ அமைப்புகளுடன் இவ்வளவு தந்திரோபாயமாக நடக்கக் கூடிய விவேகமானவர்கள் அல்ல. கிறிஸ்தவ மதத்தில் கைவைத்தால் மேற்கு நாடு களின் தயவை இழக்க வேண்டி வரும் என, புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் 'தேசியத் தலைவருக்கு' மிகவும் ஆணித்தரமாக எடுத்துரைத்ததின் காரணமாகவே, அந்த மதத்தினர் மீது புலிகள் 'பயபக்தியுடன்' நடந்து கொண்டதாக, 'ஒரு புலி உறுப்பினன் மூலமாகவே எனது சிறை வாழ்க்கையின் போது அறிந்து கொண்டேன்.



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வாரம் ஒரு திருக்குறள்



பொறையுடைமை

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

தீங்கு செய்தவரைப் பொறுக்காமல் வருத்தினவர்க்கு ஒருநாள் இன்பமே; பொறுத்தவர்க்கு உலகம் அழியும் வரைக்கும் புகழ் உண்டு.

குறள்:156

## குரங்கு வாங்கி கொடுத்த தண்டனை



உழைக்காமல் உண்ண வேண்டும் என்ற ஆசை பரமார்த்த குருவுக்கு ஏற்பட்டது. ஒரு குரங்கைப் பிடித்து வந்து, அதற்குப் பயிற்சி கொடுத்து எல்லா பொருள்களையும் திருடிக் கொண்டுவர கற்றுத் கொடுத்தார்கள்

"குருவே! உங்கள் வேட்டி எல்லாம் கிழிந்துவிட்டது. அதனால் கட்டிக் கொள்வதற்கு நல்ல பட்டுத் துணியாகத் திருடி வரச் சொல்லுங்கள்" என்றனர் சீடர்கள்.

பரமார்த்தரும், துணி திருடி வருவதற்குக் குரங்கை தூதனிப்பினார். அந்நாட்டு அரண்மனைக்குள் நுழைந்தது குரங்கு.

அரண்மனைக் குளத்தில் குளித்துக்கொண்டு இருந்தான் அரசன். படிக்கட்டுகளில் அவனது பட்டுத்துணிகளும், வைரக் கிரீடமும் வைக்கப்பட்டிருந்தன. யாருக்கும் தெரியாமல் அவற்றைத் தூக்கிக்கொண்டது, குரங்கு.

பட்டுத் துணிகளையும், வைரக் கிரீடத்தையும் பார்த்த குருவும் சீடர்களும் வியப்பு அடைந்தனர்.

"குரங்கே! சீக்கிரமே உனக்குக் கோயில் கட்டிக் கும்பிடுகிறோம்!" என்றான் மண்டு.

பட்டு வேட்டியை குருவுக்குக் கட்டிவிட்டான், மூடன். மகுடத்தை அவர் தலையில் சூட்டினான், முட்டாள்.


"இப்போது பார்த்தால் முடிசூடிய மன்னரைப் போல் இருக்கிறீர்கள்" என்று புகழ்ந்தான் மட்டி. மீதி இருந்த வேட்டிகளை சீடர்கள் கட்டிக் கொண்டனர்.

"வாருங்கள்! இந்த அரச கோலத்திலேயே ஊர்வலம் போய்வருவோம்!" என்று புறப்பட்டார், பரமார்த்தர்.

தெருவில் இறங்கிய மறு நிமிடமே, அரச காவலாளிகள் குருவையும் சீடர்களையும் கைது செய்தனர். அரசனின் பொருள்களைத் திருடிய குற்றத்திற்காகப் பத்து நாள் சிறைத்தண்டனை விதக்கப்பட்டது.

"குருவே! மனிதர்களால்தான் நமக்குத் தொல்லை என்று நினைத்தோம். கேவலம் ஒரு குரங்குகூட நமக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டதே!" என்று புலம்பினார்கள் சீடர்கள்.

## பழைய புத்தக வாசனைக்கு என்ன காரணம்?



பழைய புத்தகங்களுக்கென்று தனியாக வாசனை இருக்கும். புத்தகப் புழு மனிதர்களுக்கு அந்த வாசனை மிகவும் பிடிக்கும். புத்தகம் எத்தனைக்கெத்தனை பழையதோ அத்தனைக்கத்தனை அதன் வாசம் அதிகமாக இருக்கும்.

கிட்டத்தட்ட 100 வகையான, காற்றில் கலக்கும் எண்ணெய்ப் பொருள்கள் காகிதங்களில் உள்ளன. காகிதம் பைன் மரத்திலிருந்து செய்திருந்தால் அதிலுள்ள ரோசின் என்ற பொருள்மூலம் அதிக வாசனையாக இருக்கும்.

புத்தக வாசனைக்கு கிட்டத்தட்ட 15 வாசனை எண்ணெய்கள் காரணம் என்று தெரிகிறது. தகுந்த கருவியின் மூலம் அவற்றின் அளவை அளந்து புத்தகம் எவ்வளவு பழையது, எவ்வளவு நைந்து கொண்டிருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து விடலாம் என்று விஞ்ஞானியர் குழு கண்டு பிடித்திருக்கிறது.

## நெகட்டிவில் ஏன் அடையாளம் தெரிவதில்லை?



பிலிம் நெகட்டிவ்களில் காணப்படும் முகத்தை நம்மால் சரியாக அடையாளம் தெரிந்து கொள்ள முடிவதில்லை. பிரபலமானவர்களின் முகங்கள்கூட அடையாளம் காண்பது சிரமமாக இருக்கிறது. எம்.ஐ.டி.யைச் சேர்ந்த சின்கா என்பவர் ஒரு விளக்கத்தைத் தருகிறார். பொதுவாக நெற்றி, கன்னம் ஆகிய இடத்தைவிட கண்களின் பகுதி கொஞ்சம் இருட்டாகத்தான் இருக்கும். இதற்கு பழகிவிட்ட நமது மூளையானது போட்டோ நெகட்டிவில் கண்கள் பகுதி வெளிச்சமாக இருப்பதைப் பார்த்துத் திணறுகிறது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 06.05.2013

வர்ணம் தீட்டும் போட்டி இல. ௯௮௯
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 987

பரிசுக்குரியவர்:
கு.அஸ்மிகா,
வரணி இயற்றாலை, வரணி.

பாராட்டுக்குரியவர்கள்

01. தி.அனுசா, வேப்பங்குளம், வவுனியா.
02. A.ரவிராஜ், அஜிலி, காரைநகர்.
03. கு.செந்தூரி, குருநகர், யாழ்ப்பாணம்.
04. எம்.இர்பான், பிரதான வீதி, தர்ஹாநகர்.
05. த.சௌமியா, மாதகல் கிழக்கு, மாதகல்.
07. தெ.சாருஜன், ஓடாவியர் வீதி, ஏறாவூர் –02
08. இ.சைந்தன், கோவில் வீதி, திருகோணமலை.

## குண்டு துளைக்காத கார்கள்

தீவிரவாதிகளால் ஆபத்து என்று கருதப்படுகிற உலகத் தலைவர்களுக்காக குண்டு துளைக்க முடியாத கார்கள் தயாரிக்கப்படுகின்றன. இவை எப்படி அந்தத் தலைவர்களைப் பாதுகாக்கின்றன என்பது தெரியுமா? இந்தக் கார்களின் கண்ணாடிகள் 'கெவ்லார்' எனப்படும் இரசாயனப் பொருள் கலந்து கனமாக தயாரிக்கப்படுகின்றன. இந்தக் கண்ணாடியின் மேல் குண்டுபடும்போது அதன் வேகம் குறைந்து வழுக்கிக் கொண்டு போய் ஏதாவது ஒரு பக்கம் விழுந்துவிடும்.



இந்தக் கண்ணாடியைத் தவிர காரில் பயணிகள் உட்காரும் இடத்தைச் சுற்றிலும் 10 மில்லிமீற்றர் கனத்துக்கு இரும்புத் தகடுகளும் வைக்கப்படும். இந்த இரும்புத் தகடுகளும் துப்பாக்கித் தோட்டாக்களை உள்ளே அனுப்பாது.

அதேபோல் யாராவது காரைப் பின் தொடர்ந்து வந்தால் காரை மறைக்கும் விதத்தில் வெண்மையான புகை மண்டலத்தை எழுப்பி எதிரிகளை குழுப்பிவிடும் வசதியும் இதில் உள்ளது.

குண்டு துளைக்காத கார்களைத் தயாரிப்பதில் முதலிடம் வகிப்பது இத்தாலிய நாடு. வருஷத்துக்கு 2000 கார்கள் வரை தயாரிக்கிறது. குண்டு துளைக்காத காரின் எடை சாதாரண காரின் எடையைக் காட்டிலும் 500 கிலோ அதிகம் விலையோ நான்கு மடங்கு அதிகம்.

## உடற்பாகங்கள் உயிர் வாழும் நேரம்

கண் - 31 நிமிடம்
மூளை - 10 நிமிடம்
கால் - 4 மணித்தியாலம்
தசை - 5 நாட்கள்
இதயம் - சில விநாடிகள்



## தகவல் களஞ்சியம்

- சிலந்திகள் ஒரு வார காலம் வரை உணவு இல்லாமல் வாழ்கின்றன.
- மண்புழுவிற்கு 5 ஜோடி இதயங்கள் உள்ளன.
- மண்புழு தோல்மூலம் சுவாசிக்கும்.
- தேனியால் பச்சை, நீலம், ஊதா நிறங்களை பிரித்தறிய முடியும்.
- பூச்சி இனங்களில் தும்பியின் கண்கள் கூர்மையானவை.
- பட்டாம்பூச்சிக்கு நுரையீரல் இல்லை. அதன் வயிற்றுப் பகுதியில் உள்ள 'ஸ்பிராக்கிள்' என்னும் துளைகள் வழியாக சுவாசிக்கின்றன.
- ஆண், பெண் இரண்டின் இனப்பெருக்க உறுப்புகளும் நத்தையில் காணப்படுகிறது. இதனால் அவை ஹெர்மப்ரோடைட்ஸ் என்று அழைக்கப்படுகிறது.
- யானையின் துதிக்கை ஒரு லட்சம் தசைகளால் ஆனது. அதன் இதயம் நிமிடத்திற்கு 28 தடவை மட்டுமே துடிக்கின்றன.
- பூசணிக்கொடியின் வேர்கள் 2.4 கி.மீ. நீளம்வரை வளரும்.
- நத்தைக்கு 25 ஆயிரம் பற்கள் உண்டு.

எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

154

**மூன்று** மாத காலம்வரை பூலானும், மீராவும் யாருக்கும் சந்தேகம் வராதபடி நாட்களைக் கடத்திவிட்டனர்.

பூலானும், மீராவும் கடைத் தெருவுக்கு சென்று வ்ந்தபோது, எதிரேவந்த ஒருத்தன் மீராமேல் வேண்டுமென்றே மோதிக் கொண்டு சென்றான்.

பூலானுக்குச் சட்டென்று கோபம் வந்தது. மீரா வேகமாக பூலானின் மணிக்கட்டில் பிடித்து

பூலானுடன் தகவல்களை பரிமாறிக்கொண்டிருந்தான்.

மூன்று மாதத்தின் பின்னர் அனைவரும் ஒன்றுகூட வேண்டும் என்று மான்சிங்கைவிட்டு பிரியமுன்னர் பூலான் கூறியிருந்தாள், தங்கள் கோஷ்டி ஆட்களுக்கு மான்சிங் அத்தகவலை தெரிவித்திருந்தான்.

எங்கே கூடுவது? என்ற தகவலை மட்டும் பின்னர் தெரியப்படுத்துவதாக கூறியிருந்தான்.

மான்சிங்கின் ஆள் பூலானிடம் வந்துசேர்ந்தான். எந்த இடத்தில் மறுபடி ஒன்றுகூடுவது என்பதை பூலானிடம் கேட்டு வரும்படி மான்சிங் அவனை அனுப்பிவைத்திருந்தான்.

பூலானிடம் இருந்துவரும் தகவலுக்காக மான்சிங் காத்திருந்தான்.

ஆனால் மான்சிங் அனுப்பிய ஆளுடன் பூலானும் மீராவும் மான்சிங் இருக்கும் இடத்துக்கே சென்றுவிட்டனர்.

பூலானைக் கண்டதும் மான்சிங் திக்குமுக்காடிப் போனான். பூலானை எதிர்பார்க்கவே இல்லை.

கலெளி கிராமத்தில் மறுபடி கூடுவது என்று தங்கள் ஆட்களுக்குத் தகவல் அனுப்பச் சொன்னாள் பூலான்.

மறுபடி காக்கி உடைக்கு மாறினாள். துப்பாக்கி தோளில் தொங்கிற்று. "இப்போதுதான் திருப்தியாக இருக்கிறது" என்றாள்.

பாபாவின் பின்னர் உத்தரப் பிரதேசக் கொள்ளைக் கோஷ்டிகளை கட்டியாளக் கூடியவன், தான் ஒருவன் மட்டுமே என்ற மல்கான் சிங் நினைத்திருந்தான்.

ஆனால், இப்போது அந்த இடத்தைப் பூலான் பிடித்துவிடுவாள் போல இருந்தது.

மல்கான்சிங்கின் பொறாமைக்கு எண்ணெய் வார்ப்பது போன்று வந்து சேர்ந்தார் ஒரு அரசியல்வாதி.

அந்த அரசியல்வா்தி தேர்தலில் வெற்றி பெறுவதற்கும் மல்கான்தான் உதவினான்.

மல்கானுக்குப் பயந்து அந்தப் பிரதேச மக்கள் அவன் கூறிய நபரையே வெற்றிபெற வைப்பார்கள்.

அந்த வெற்றிக்குப் பரிசாக வெளிநாட்டிலிருந்து இறப்பர் படகொன்றை இறக்குமதி செய்து கொடுத்திருந்தார் அந்த அரச யல் வாதி.

பொலிசாரிடம் மல்கானின் ஆட்கள் மாட்டிக்கொண்டால், உடனே தலையிட்டு வெளியே எடுத்துவிடுவதும் அவர்தான்.

மல்கான் சிங்குக்கு அரசியல் பின்பலம் இருந்தமையால், அந்தப் பிரதேச பொலிசாரும் அவன் ஆட்களை நெருங்கவே பயந்தனர்.

மல்கான் சிங்கிடம் ஒரு உதவி கேட்டு வந்திருந்தார் அரசியல்வாதி.

பூலான் தேவியை பிடிக்க முடியாமையால் காங்கிரஸ் ஆட்சியை எதிர்க்கட்சிகள் அர்ச்சனை செய்கின்றன.

உயர்ந்த சாதிக்காரர்களும்

# கொள்ளை ராணி பூலான்தேவி

## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு



கலெளி கிராமத்தில் பூலான் கோஷ்டியினர் ஒன்றுகூடும் செய்தி எட்டக்கூடாத இடம் ஒன்றுக்கும் எட்டியது. மல்கான் சிங். கொள்ளை ராஜன் என்று அழைக்கப்படுபவன்.

அவனது குழுவில் எழுநூறுக்கு மேற்பட்ட ஆட்கள் இருந்தனர்.

பாபாவுக்கு அடுத்தபடியாகக் கொள்ளைக் கோஷ்டிகளுக்குள் பிரபலமும், மரியாதையும் பெற்றிருந்தான் மல்கான் சிங்.

பூலானின் பெயர் தன்னைவிடப் பிரபலமாவதால், மல்கான் சிங்குககு உள்ளூரப் பொறாமையாக இருந்தது.

சிறு குழுவை வைத்துக் கொண்டு, அதுவும் ஒரு பெண் சம்பல் பள்ளத்தாக்கின் ராணியென்று பெயர் எடுத்துவிட்டாள்.

பத்திரிகைகளைப் பிரித்தால் பூலான். வானொலியைத் திறந்தால் பூலான்.

ஏனைய கொள்ளைக் கோஷ்டிகளும் பூலானின் பெயரைக் கேட்டால் பயம் கொள்ளத் தொடங்கியிருந்தன என்பதையும் மல்கான்சிங் அறிந்திருந்தான்.

பூலான்மீது மல்கான்சிங்பொறாமை கொண்டதற்கு இன்னொரு காரணமும் இருந்தது.

ஒரு அழுதது அழுதியதால்தான் பூலான் நிதானமானாள்.

பூலான் நின்று தன்னை நோக்கி திரும்பி முறைத்ததை அந்தப் போக்கிரியும் கண்டுவிட்டான்.

விகாரமான சிரிப்புடன் எட்ட நின்றபடியே: "ஏதோ பூலான்தேவி என்ற நினைப்பு, இந்த முறைப்பு முறைக்கிறியே, போங்கடி..." அலட்சியமாய் கூறிக்கொண்டு போய்விட்டான்.

பூலானும், மீராவும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டனர்.

பொலிசாரின் தேடுதல் வேட்டைகள் படிப்படியாக ஓய்ந்தன. பூலானுக்கு நகர வாழ்க்கையில் சலிப்புத் தட்டிவிட்டது.

தனிக்காட்டு ராணிபோல திரிந்துவிட்டு நகரில் பணிந்தும், பயந்தும் நடமாடுவது வெறுப்பாக இருந்தது.

முன்னரே கூறிவைத்தது போல மான்சிங் ஒரு ஆளை அனுப்பி, அடிக்கடி



காங்கிரஸ் கட்சிமீதும், ஆட்சிமீதும் கடும் சலிப்புக் கொண்டிருக்கிறார்கள்.

பூலானால் கொல்லப்பட்டதங்கள் சாதிக்காரர்களையிட்டு அர சாங்கம் கரிசனை காட்டவில்லை என்பது அவர்களது குற்றச்சாட்டு.

இப்படியே போனால் அடுத்த தேர்தலில் வாக்குக் கேட்டு செல்லவே முடியாது. நிலைமை மோசமாகிவிடும்.

அதனால் பூலான் விவகாரத்தில் அரசியலும் புகுந்தது.

மல்கான் சிங்கிடம் உள்ள உறவைப் பயன்படுத்தி, பூலானைத் தீர்த்துக்கட்டுமாறு அந்த அரசியல்வாதிக்கு மேலிட உத்தரவு கிடைத்திருந்தது.

அந்த உத்தரவுப்படி காரியத்தை முடித்துக்கொடுத்தால் கட்சியில் செல்வாக்குப் பெறலாம் என்பதால், சுறுசுறுப்பானார் அரசியல்வாதி.

"பூலானை பிணமாக ஒப்படை. உனக்கு தேவையான பணம் கிடைக்கும். உனக்குப் போட்டியும் இல்லாமல்போகும். என்ன சொல்கிறாய்.?"

ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள். மல்கான் உடன்பட்டான்.

பூலானை ஒழித்துக்கட்டும் பொறுப்பை தனக்கு நம்பிக்கையான ஆளான சோப்ரான் என்பவனிடம் ஒப்படைத்தான்.


சோப்ரான் இலேசுப்பட்டவனல்ல. தங்கள் ஆட்களில் ஒருத்தனைச் சுட்டுக்கொன்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை, பொலிஸ் நிலையத்துக்குள்ளேயே புகுந்து சுட்டுக் கொன்றவன்.

அதிலிருந்து அவன் பேர் பிரபலம் பெற்றிருந்தது. ஈவிரக்கமற்ற கொலைக்காரன். பூலான் கோஷ்டியினர் எங்கே இருக்கின்றனர்? என்ற தகவலை திரட்ட ஆரம்பித்தனர் மல்கான்சிங் ஆட்கள். அப்போதுதான் பூலானும் அவள் ஆட்களும் கலெளி என்ற கிராமத்தில் ஒன்று கூடப் போவதாகத் தகவல் எட்டியது.

திருப்பங்கள் தொடரும்...

மருத்துவம்

## மனவளர்ச்சிக் குறைபாட்டுக்குக் காரணம் அப்பா?



பெற்றோரின் உயிரணு அல்லது கருமுட்டை செல்களில் ஏற்படும் திடீர்மாற்றங்கள், குழந்தைக்கு 'ஆட்டிசம்' என்ற மனவளர்ச்சிக் குறைபாடு அபாயத்தை அதிகரிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிலும், தாயைவிட தந்தையே இந்த குறைபாட்டைத் தமது குழந்தைக்கு ஏற்படுத்தும் வாய்ப்பு அதிகம் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இது தொடர்பாக மூன்று பெரிய அளவிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது, முட்டை அல்லது உயிரணுவின் டி.என்.ஏ.வில் காணப்படும் குறைபாடுகள் எவ்வாறு ஆட்டிச அபாயத்தை ஏற்படுத்துகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது.

ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட 7 பேரில் ஒருவர் இவ்வாறுதான் அந்தப் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார். அமெரிக்காவின் வாஷிங்டன் பல்கலைக்கழக ஆய்வாளர் குழு மேற்கொண்ட ஓர் ஆய்வில், அண்டத்தைவிட உயிரணுவே முக்கிய காரணம் என்று தெரியவந்தது.

'டீ நோவோ' திடீர்மாற்றம் என்று அழைக்கப்படும் நான்கு மரபணு மாற்றங்களை எடுத்துக்கொண்டால், அவற்றில் மூன்று, உயிரணுவில் ஆரம்பித்திருப்பது தெரியவந்திருக்கிறது. ஒன்று மட்டும் முட்டையில் தோன்றியிருக்கிறது.

ஆய்வாளர்கள் தங்களின் இந்த ஆய்வின்போது 209 குடும்பங்களைச் சேர்ந்த ஆட்டிச பாதிப்புக்கு உள்ளான குழந்தைகள், அவர்களது பெற்றோரின் டி.என்.ஏ.வை ஆராய்ந்தனர். இந்தக் குடும்பங்களில், குழந்தை மட்டுமே ஆட்டிச பாதிப்புக்கு உள்ளானது என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல, ஆட்டிச பாதிப்பு ஏதும் இல்லாத 50 குழந்தைகளையும் ஆய்வு செய்தனர்.

ஆய்வாளர்கள், 248 'டீ நோவோ' திடீர்மாற்றங்களில் 60, ஆட்டிச பாதிப்புக்குக் காரணமாக அமைந்திருக்கலாம் என்று கருதுகின்றனர். இவர்களின் ஆய்வு முடிவின்படி, மூன்று ஜீன்கள் இந்த 'டீ நோவோ' திடீர்மாற்றங்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

ஆட்டிச பாதிப்பில் நூற்றுக்கணக்கான ஜீன்கள் தொடர்புடையதாக இருக்கலாம், நாம் ஏற்கனவே நினைத்ததைவிட இது "மிகவும் சிக்கலான விஷயம் என்றும் விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## வயிற்றுக்கான பயிற்சி!

முதலில் விரிப்பில் மல்லாந்து படுத்துக் கொள்ள வேண்டும். இரண்டு கைகளையும் உடலின் பக்கத்தில் தளர்ந்த நிலையில் வைக்கவும். தலை,கைகள்,கால்கள் மற்றும் உடல் முழுவதும் மிகவும் தளர்ச்சியான நிலையில் வைக்கவும்.

பிறகு மூச்சை இழுத்துக் கொண்டே தலையை தூக்காமல் கைகளைக்கொண்டு தரையை அழுத்தாமல் செய்யவும். கால் கட்டை விரல்களை சேர்த்து வைத்து மேலே தூக்கவும். ரொம்பவும் மேலே தூக்கிவிடக் கூடாது. திருப்பி கால்களை கீழே இறக்கும் போது மூச்சை வெளியேவிட்டுக் கொண்டே மெதுவாக இறக்கவும். குதிக்கால்களை எக்காரணத்தைக் கொண்டும் தரையை தொடக் கூடாது.

அப்படி தொட்டுவிட்டால் பயிற்சி முடிந்துவிடும். இப்படி ஒரு நாளைக்கு 25 முறை செய்யவேண்டும். புதியவர்கள் 10 முறை செய்தால்போதும். நன்கு பயிற்சி பெற்றபிறகு 50 முறைகூட செய்யலாம். ஹெரண்யா நோய் உள்ளவர்களும், வயிற்றில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களும் இப்பயிற்சியை மேற்கொள்ளக்கூடாது.


கர்ப்பிணிகள் முதல் மூன்று மாத கர்ப்பம் வரையில் மட்டுமே இப்பயிற்சியை செய்தல்வேண்டும். ஆரம்ப நாட்களில் வயிறு, முதுகெலும்பு, தொடை போன்ற இடங்களில் வலி எடுக்கும். வலியை பொருட்படுத்தாமல் தொடர்ந்து பயிற்சியைப் பழகி வந்தால், படிப்படியாக வலி குறையும், பயிற்சியும் கைகூடும்.

**இந்த பயிற்சியின்மூலம் ஏற்படும் பலன்கள்**

இந்த பயிற்சி முழுக்க முழுக்க வயிற்றுக்காகவே உள்ள பயிற்சி இப்பயிற்சியை தொடர்ச்சியாக செய்துவந்தால் தொந்தி படிப்படியாக குறைவதை காணலாம்.

பெருங்குடல், சிறுகுடல் அனைத்தும் தூண்டப்பட்டு நன்கு வேலை செய்வதால் வயிறு மந்தமான நிலையில் பசியெடுக்காதவர்களுக்கும் பசி எடுக்கும்.

இடுப்பு தேவையில்லாத சுற்று சதை குறைந்து வலிமைபெறும். முதுகெலும்பும் வலிமை பெறும். தொடைப் பகுதியும் வலிமை பெறும்.







# ஐஸ்வர்யா இயக்கத்தில் கௌதம் பிரபு

மணிரத்னம் இயக்கத்தில் சமீபத்தில் வெளிவந்த படம் கடல். இப்படத்தில் கதாநாயகனாக நடித்தவர் பிரபல நடிகரின் மகன் கௌதம். இப்படம் பெரிதாக பேசப்படவில்லை. இருந்தாலும் தற்போது 'வை ராஜா வை' என்ற படத்தில் நடிப்பதற்கு கௌதம் கார்த்திக் ஒப்பந்தம் ஆகி உள்ளார்.

இப்படத்தை எ.ஜி.எஸ்.என்டர்டெய்ன்மென்ட் நிறுவனம் தயாரிக்கிறது. யுவன் சங்கர் ராஜா இசையமைக்க, வேல்ராஜ் ஒளிப்பதிவு செய்கிறார்.

தனுஷ், ஸ்ருதிஹாசன் ஜோடியாக நடித்த படம் 3. இப்படத்தை இயக்கிய தனுஷின் மனைவி ஐஸ்வர்யாதான் இப்படத்தை இயக்குகிறார். இவருக்கு இது இரண்டாவது படமாகும். இவர்களைத் தவிர மற்ற கலைஞர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுவருகிறார்கள்.



# மீண்டும் திரையுலகில் வடிவேல்!

இரண்டு ஆண்டு இடைவேளைக்குப்பிறகு வடிவேலு நடிக்கும் புதிய படம் தெனாலிராமன். இப்படத்தை போட்டாபோட்டி டைரக்டர் யுவராஜ் இயக்குகிறார். ஏ.ஜி.எஸ் எண்டர்டெயின்மெண்ட் சார்பில் கல்பாத்தி அகோரம் இப்படத்தை தயாரிக்கிறார். இம்சை அரசன் 23-ம் புலிகேசி போன்று இப்படத்திலும் இரண்டு வேடங்களில் நடிக்கிறார் வடிவேலு. அதனால், தனது உடம்பிலும், முகத்திலும் எந்த முதிர்ச்சியும் தென்படக்கூடாது என்பதற்காக இப்போது டயட்ஸை கடைபிடித்து உடம்பையும் பராமரித்து வருகிறார்.

இந்த படத்தில் வடிவேலுவுக்கு ஜோடியாக ஒரு பிரபல நடிகையைத்தான் நடிக்க வைப்பது என்பதில் உறுதியாக இருந்தார் இயக்குனர் யுவராஜ். அப்படி அவர் பல நடிகைகளிடம் பேச்சுவார்த்தை நடத்தியதில் இப்போது அஜீத்துடன் பில்லா-2 படத்தில் நடித்த பார்வதி ஓமணக்குட்டன் வடிவேலுவுக்கு ஜோடியாக நடிக்க ஒப்புதல் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. இருந்தும் இன்னும் அதிகாரப்பூர்வமாக சொல்லவில்லை. அதேசமயம் இன்னொரு ஹீரோயினி தேடும் படலமும் தொடங்கியுள்ளது.




# இந்தி
# இயக்குகி

கமல்- ஷங்கர் இணைந்த மு
இரண்டுவிதமான கெட்டப்பில் நடி
கவுண்டமணி- செந்தில் உள்ளிட்ட
பெரிய அளவில் வெற்றி பெற்றது
கெட்டப் பெரிய அளவில் பேசப்ப
வைத்து ஷங்கர் படம் இயக்குவ
நிலையில், இந்தியன் படத்தின்
வைத்தே ஷங்கர் இயக்கப்போவதாக செய்திகள் வெ
முதல் பாகத்தில் இரண்டு வேடங்களிலும் கமலே நடித்திருந்தார். ஆனால்
தாத்தாவாக மட்டுமே கமல் நடிக்கிறாராம். இளமையான கமலாக சூர்யா நடிக்க
இயக்கி வரும் ஷங்கர், இதுசம்பந்தமாக கமல், சூர்யாவிடம் பேசி வருகிறாராம்
விஸ்வரூபம்-2 படவேலைகள் முடிந்ததும் இந்தியன்-2 படவேலைகள் தொடங்கு
தெரிகிறது.

# தமிழில் நடிக்க ஆசை!

தமிழ் எனக்குத் தெரியும் என்றாலும் தமிழில் நடிக்க என்னை யாரும் அழைக்கவில்லை என்று நடிகையும் இந்திப் பட இயக்குனர் அனுராக் காஷ்யப்பின் மனைவியுமான கல்கி கோஷ்லான் கூறினார். இந்திப் படங்களில் நடித்துவரும் கல்கி ஊட்டி அருகே உள்ள கல்லட்டியில் பிரெஞ்ச் பெற்றோருக்குப் பிறந்தவர். பள்ளிப்படிப்பை ஊட்டியில் முடித்த கல்கி, லண்டனில் கல்லூரி படிப்பை முடித்துவிட்டு இந்தி படங்களில் நடித்துவருகிறார். தேவ்டி, சைத்தான், த கேர்ள் இன் யெல்லோ பூட்ஸ் உட்பட பல படங்களில் நடித்துள்ளார். அவர் கூறியதாவது: எனது பெயரை பலர் பல்வேறு விதமாக கூறிவருகின்றனர். கல்கி கோஷ்லான்தான் சரியானது. எனக்கு தமிழ் தெரியும். தமிழ்ப் படங்களில் நடிக்க ஆசையாக இருக்கிறது. ஆனால் சோகமான விஷயம் என்னவென்றால் தமிழில் நடிக்க என்னை யாரும் அழைக்கவில்லை. சிறுவயதில் இருந்து நடிக்கவேண்டும் என்ற ஆசை இருந்தது. அது முடியா விட்டால் மனநல மருத்து வராக ஆக நினைத்தேன். நடிகையாகவே ஆகிவிட்டேன்.





# திருமணம் செய்தேனா?

நான் யாரையும் திருமணம் செய்யவில்லை என்று சுபா புஞ்சா கூறினார். தமிழில், மச்சி, திருடிய இதயத்தை, சண்முகா, ஒரு பொண்ணு ஒரு பையன் உட்பட சில படங்களில் நடித்தவர் கன்னட நடிகை சுபா புஞ்சா. இவர் கன்னட நடிகர் விஜய்யை திருமணம் செய்துகொண்டு செட்டில் ஆகிவிட்டதாகச் செய்திகள் வெளியாயின. இதனால் அவர், சினிமாவில் நடிக்கமாட்டார் என்று கூறப்பட்டது. இந்நிலையில் அவர் கன்னடத்தில் நடித்துள்ள பராரி என்ற படம் நேற்று ரிலீஸ் ஆனது.

இதுபற்றி அவர் கூறியதாவது: விஜய்யுடன் சேர்ந்து நடித்ததால் என்னை பற்றி வதந்திகள் வந்தது. அவருடன் சேர்ந்து நடிப்பதில்லை என்று ஏற்கனவே அறிவித்துவிட்டேன். இப்போதும் அந்த நிலைதான். நான் யாரையும் திருமணம் செய்யவில்லை. எனது கனவு காதலனை கண்டுபிடித்துவிட்டால் கண்டிப்பாகக் காதலிப்பேன். இன்னும் நான்கு வருடத்துக்கு திருமணம் செய்யும் திட்டம் இல்லை.



# பெற்றோர்களைக் கவனித்து அவர்களுக்கு உதவியாக இருங்கள்!

**ரசிகர்களுக்கு அஜித் வேண்டுகோள்!**

நடிகர் அஜீத் பிறந்த நாள் மே1 ஆம் திகதி வருகிறது. ரசிகர்கள் அவரது பிறந்தநாளை ஆடம்பரமாக கொண்டாட ஏற்பாடு செய்துவந்தனர்.

போஸ்டர்கள் அச்சிட்டு நகரமெங்கும் ஒட்டுவதற்கும் முக்கிய பகுதிகளில் கட்-அவுட்கள் வைக்கவும் ஆயத்தமாயினர்.

இந்த தகவல் அஜீத்துக்கு தெரிய வந்ததும் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகளை ரத்து செய்யும்படி ரசிகர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வழக்கமாக தனது பிறந்த நாளை அஜீத் கொண்டாடுவது இல்லை. ரசிகர்களிடமும் தன் பிறந்த நாளை கொண்டாட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு உள்ளார். அதற்கு பதில் பெற்றோர்களை கவனித்து அவர்களுக்கு உதவியாக இருங்கள் என்று


அதுபோல் மே 1-ஆம் தி
பிறந்தநாள் கொண்டாட்டம்
வேண்டாம் என்று வற்புறுத்தி
இதையடுத்து ரசிகர்கள் போ
அச்சடிப்பதை நிறுத்திவிட்ட
தயார்செய்வதையும் கைவிட்

இதுகுறித்து அஜீத் கூறும்
கட்-அவுட் பேனர்கள் வைக்க
அச்சடிக்கவும் ரசிகர்கள் ப
செய்ய வேண்டாம்.

அந்த பணத்தை ஏழைக
அவர்களுக்கு உணவளிக்க
என்று கேட்டுக் கொண்டு உ
தனக்காக ஆடம்பர செலவுக
தடுக்கவே ரசிகர் மன்றத்தை
என்பது குறிப்பிடத்தக்கது.



சுற்றுலா



உயிருக்கு உயிராக

## ...தியன்-2 ...றார் ஷங்கர்!

...தல் படம் இந்தியன். இப்படத்தில் கமல்
...த்தார். மனீஷாகொய்ராலா, சுகன்யா,
... பலர் நடித்திருந்த அந்த படம்
... குறிப்பாக கமலின் இந்தியன் தாத்தா
...ட்டது. ஆனால் அதன்பிறகு கமலை
...தற்கான சூழல் அமையவில்லை. இந்த
...இரண்டாம் பாகத்தை மீண்டும் கமலை
...ளியாகியுள்ளன.
...இந்த இரண்டாம் பாகத்தில் இந்தியன்
...றாராம். தற்போது 'ஐ' படத்தை
... கமலின்
...ம் என்று

## குடித்துவிட்டு ஆடும் குத்தாட்ட காட்சிகள் வேண்டாம்; எஸ்.வி.சேகர்

மிதுன்- மான்ஸி ஜோடியாக நடிக்கும் படம் மடிசார் மாமி. ரஞ்சித்போஸ் இயக்குகிறார். இப்படத்தின் பாடல் சி.டி. வெளியீட்டு விழா வடபழனி பிரசாத் லேப் திரையரங்கில் நடந்தது. இதில் நடிகர் எஸ்.வி.சேகர் பங்கேற்று பேசியதாவது:- மடிசார் மாமி படத்தில் டாஸ்மாக் கடையில் சிலர் குத்தாட்டம் ஆடுவதுபோல் பாடல் காட்சி உள்ளது. டாஸ்மாக் போர்டையும் அடிக்கடி காட்டுகிறார்கள். மதுக்கடையை ஏன் இப்படி விளம்பரப்படுத்துகிறார்கள். இப்படியெல்லாம் குடிப்பழக்கத்தை ஊக்குவித்தால் எப்படி நம்மை மதிப்பார்கள்.

சினிமாக்காரர்களுக்கு வீடுதர மறுப்பதாக கூறப்படுகிறது. இப்படி குடித்துவிட்டு குத்தாட்டம் போடும் காட்சிகள் வைத்தால் எப்படித்தருவார்கள். எனவே இதுபோன்ற காட்சிகளை படங்களில் வைக்கவேண்டாம். மடிசார் மாமி படம் டிரெய்லரில் படக்குழுவினரின் உழைப்பு தெரிகிறது. நன்றாக ஓடவேண்டும் என வாழ்த்துகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

டைரக்டர் முக்தாசீனி வாசன் விழாவில் பேசும்போது, படத்தின் கதாநாயகி மான்ஸி நெற்றிப்பொட்டு வைக்காமல் வந்ததை கண்டித்தார். மடிசார் மாமி என்று படத்துக்கு தலைப்பு வைத்துள்ளனர். ஆனால் படத்தின் கதாநாயகி நெற்றில் பொட்டு இல்லை. எங்கள் ஊரில் பொட்டு வைக்காத பெண்களை விதவை என்பார்கள் என்று பேசினார்.

இயக்குனர் ரஞ்சித் போஸ் பேசும்போது, படத்துக்கு மடிசார் மாமி மதனமாமா என பெயர் வைத்து இருந்தோம். ஆனால் தணிக்கை குழு மதன மாமா என்பதை நீக்கிவிட்டது என்றார். தயாரிப்பாளர்கள் விவேக்தீக்ஷித், சுஷாந்த் காட்ரு ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.



தீக்குளிக்கும் பச்சை மாறன்



...ம் கூறியுள்ளார்.
...கதி அன்று
...திலும் ஈடுபட
... உள்ளார்.
...ஸ்டர்கள்
...ர். கட்-அவுட்கள்
...இவிட்டார்கள்.
...போது, எனக்கு
...வும் போஸ்டர்கள்
...த்தை செலவு

...ர் படிப்புக்கும்,
...ும் செலவிடுங்கள்
...ள்ளார். ரசிகர்கள்
...ள் செய்வதை
... கலைத்தார்

## ஆச்சரியத்தில் ஆழ்த்திய அழகன்!

அழகாக இருப்பவர்கள் புத்திசாலிகளாக இருக்கமாட்டார்கள் என்று பொதுவாக ஒரு கருத்து உண்டு. ஆனால் நேற்றைய நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி நிகழ்ச்சி பார்த்த பின்னர் அந்த கருத்து பொய்யாகிப்போனது.

விஜய் டிவியில் பிரகாஷ்ராஜ் நடத்தும் நீங்களும் வெல்லலாம் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக நடிகர் அரவிந்த் சாமி பங்கேற்றார். தளபதியில் கலெக்டராகவும், ரோஜாவில் அழகான கதாநாயகனாக வந்த அரவிந்த் சுவாமி, பம்பாய் படத்தில் பத்திரிக்கையாளனாக வந்தது 90 களில் பெரும்பாலான இளம் பெண்களை கவர்ந்தது. அவரை வெறும் நடிகராக மட்டுமே பார்த்து வந்தவர்கள் நேற்றைய நிகழ்ச்சியை பார்த்த உடன் அரவிந்த் சுவாமியின் மற்றொரு பக்கத்தை நிச்சயம் உணர்ந்திருப்பார்கள்.

# தேன் கிண்ணம்

## இறந்து போன ஆத்மாக்கள்



இரத்தப் பிணங்களின் நடுவில்
நவரச நாடகம் - இரத்தத்
துடிப்பிலே உணர்ந்திடும் காவியம்
துணியில்லா அம்மணமாய் பிறந்த
குழந்தைகள் நாம் வாழத்துடித்தோம்
குருதிக்குள் இறந்துபோன
ஆத்மாக்களானோம்.

கனவுகள் தினம் தொல்லை
ஆலமர நினைவுகள் ஆறுதலின்
பசுமை நினைவுகளின் எல்லை
உடலை உறைய வைக்கும்
உப்புக் காற்றின் உறவாடல்.

ஊமையாய் கண்ணீர் சிந்தும்
பாவையர்கள் அவலத்தின்
கோர வாழ்வின் துயரங்கள்
உயிரைப் பிழியும் பசி
எங்கே நிம்மதி?

கஞ்சிக்கு வரிசையில்
நின்றோம். விதியின்
வசத்தால் நடைபிணமானோம்
இன்று மனிதங்கள் புதைந்த
இறந்த ஆன்மாக்களில் ஊசலாடுகிறோம்
இதயத்தில் வலி சுமக்கும் மனிதர்களாய்.

முல்லையூர்
P.S. பரணி

## மனதுக்குள் ஈரமூறும் காலம்...

நேற்றுப் போலிருக்கிறது
நீண்டதான பள்ளி ஞாபகங்கள்

நவீனத்துவம்
பேச்சுக்குக்கூட எட்டியிராத
எம் யௌவனப் பருவத்தில்
கிரவல் வீதிப் பயணங்கள் தான்
அப்போதுகளில் நிறையப்
பிடித்திருந்தது
ஏன்? இப்போதும் தான்...

மிதிவண்டியில் சிட்டாய்ப் பறக்கும்
சிறார்கள் எதிர்ப்படுகையில்...
வசந்தனும் கபிலனும்
நானுமாய் சேர்ந்து
வயல்வெளி வரப்பின் மீது
வரிசையாய் நடந்து வரும் காட்சி
கண்முன்னே நிழலாடி நகர்கிறது
கூடவே - இழந்துபோன கபிலனின்
நட்பும் வலித்துக் கொள்கிறது...

பாடப் புத்தகம் ஓர் கையிலும்
'பனிச்சையுடன்' நாவல் மறுகையிலும்
கூழவருவோர்க்கும் கொடுத்துண்டு
அழுக்காக்கி வரும் ஆடை பார்த்து
அம்மாவின் திட்டல்களெல்லாம்
ஈரம் கசிகிறது இன்று
நினைக்கையிலும்...

பாடவேளை வாத்தியார்
பள்ளிக்கு அன்று வராவிட்டால்...
வசந்தன் ஆள்சேர்ப்பான்
நான் - அணித் தலைவனாவேன்
மகளிருக்கும் எமக்கும்
கிளித்தட்டில் காரசாரமாய்
கீழ் வகுப்பு மாணக்கரின்
கரகோஷத்தோடு
போட்டி யுத்தம் நடக்கும்...

மேனகாவின் பைக்குள்ளிருக்கும்
முற்றிய கறுத்தக் கொழும்பான்
அவளில்லா நேரம் பார்த்து
எங்களிடம் சிக்கிக் கொள்ள
பதினைந்து பேரும்
பிரித்துண்ணும் பாங்கு
அட்டா...!!

குட்டிக் குட்டிக் கனவுகள்
வெட்டிட முடியா உறவுகளாய்
சுட்டித்தனம் செய்த காலங்கள்...
அடிக்கடி மீள்வலம்
மனசுக்குள் வருகையில்...
ஏக்கத்தோடு என் பார்வை
ஓட்டோவில் புள்ளி போகும்
என் மகளின் மகன் மீது
வீழ்ந்து கொள்ளும் விழி கசிய!!

இராமசாமி ரமேஷ்
அளம்பில்.

## செப்பனிடப்படாத மனங்கள்



தினம் தினம் நவீனங்களால்
முன்னேறிக்கொண்டிருக்கும் உலகு
மனித வாழ்வில் சொகுசைத் தந்தும்
மனங்களை செப்பனிடத் தவறியது

பெண்ணுக்கு பாதுகாப்பு ஆண் என்பது
சிறியோருக்கு பாதுகாவல்
பெரியோரும் உறவுகளும் என்பதும்
இன்று பொய்த்துப் போன ஒரு நிலை.

தன் இச்சைக்காக பிய்த்து கசக்கி எறிந்து
அரிய வாழ்க்கையை சீரழித்து விடும்
வெறித்தனம் பெருகி நிற்கின்றது.

ஆறுபேர், ஏழுபேர் என்று சேர்ந்து
அனைவரும் சந்தர்ப்பத்தை சாதகமாக்கினர்
தடுப்பதற்கு ஒருவர் முனையவில்லை.

பால் புரைக்கேறியது குற்றமானது
அதற்குக் அத்தனை வருடம் சிறையிருந்தும்
மன்னிக்க முடியாத ஈவிரக்கமற்ற மனம்
உயிர் வதை பார்த்து உவகையுற்றது.

இங்கு சாதனைகள் தொடர்ந்து செல்ல
குற்றமாக்கப்பட்ட நியாயத் தராசுகள்

தன்னைச் சார்ந்த நினைவுச் சின்னங்கள்
தீவு முழுவதும் தொடர அவாவுறும் வேளை
மற்றவர் செயல்களை உணர்வுகளை
எள்ளி நகையாடும் முற்றும் துறந்தவர்கள்.

பன் நிறங்களில் பெய்துவரும் மழை
மீன் இறால்களையும் கொட்டிய அதிசயம்

மேற்கே உதிர்க்கப் பார்க்கும் தன்மதி
அழிவு நாளை அறிவிக்கும் சோதிடம்
இத்தனைக்கும் மத்தியில் கிரகங்களுக்கு
குடியேற முயற்சிக்கும் மனிதன்.

எம்.ஐ.எம்.அஷ்ரப்,
சாய்ந்தமருது -07

## குறைவில்லா பெருவாழ்வு

மனித நேயம் தேடிய
மானிடப் பயணம்
விதி வசத்தால்
வெளிக்கிட்ட இடத்திலேயே
நின்று விட்டது!

யுத்தத்தின் கோரம்
உறுதியுள்ள - ஒற்றுமையுள்ள
ஒரு சமூகத்தை,
எப்படி எப்படியெல்லாம்
இடர்பட வைத்துவிட்டது!

பொருத்தமான வாழ்வியல்
புகழ்மிக்க - வரலாற்றுத் தடங்கள்.
அறிவியல் அரசோட்சிய
தெரு முனைகள்
அத்தனையும் அழிந்து போயின
அநாதை யாகின! போரால்!

விட்ட குறை போய்
தொட்ட குறை தொடர்ந்து
வருவதால்
படுகின்ற துன்பங்கள்
பாதையை மறைக்கின்றன!
சந்நிதிகளும்
சதிசெய்வதால்
நிம்மதி பெருமூச்சுவிட
நிதர்சனங்கள்
வழிவிட மறுக்கின்றன!
வெடி முழங்கிய
போர்க் காலத்தில்
விழி பிதுங்கி நின்றவர்கள்,
இடி முழங்கும்
மழை காலத்தில்
வழி அடைத்து நின்றார்கள்.

நம்பிக்கையுடன்
போரை துரத்தியவர்கள்
அவ நம்பிக்கையுடனே
வாழ்வைத் துவக்குகிறார்கள்.

கடலில் தத்தளித்து
கானகத்தில் கொந்தளித்து
மானம் ஒன்றை மட்டும்
உடலோடு சுமந்தவர்கள்
திரை கடலோடி திரவியம்
தேடினாலும்
மறைவாக, மனதுக்குள்ளே
இரத்தமே வடிக்கிறார்கள்!

சிறைப் பட்டுப் போன
சிரிப்புகள்
கறைபட்டுப் போன
கனவுகள்
நிறைவாக தமிழர்க்கு
நீடிக்கும் நேரம் தான்
குறைவில்லா பெருவாழ்வு
கூடி தமிழர் பெற்றிடுவார்!

நா.ஜெயபாலன், சிலை.

## நிலவுக்கு ஒரு வேலியா?

நிம்மதியை தேடி தினம்
நிதானமாய் சிந்தித்தேன்
நினைவிலும் கனவிலும்
நிம்மதி இன்றி இங்கு
நிலைகுலைந்து போனதே
நினைவில் வருகிறது.

நினைக்க நினைக்க
நிஜமாய் சொன்ன அந்த
நிகழ்கால சொற்கள்
நிசப்தமின்றி வந்து
நினைவையே குலைக்கிறது.

நிழலாகத்தான் உனைச் சுற்றி
நிற்பதற்கு எத்தனிக்கிறேன்
நியாயங்கள் விலை பேசுகிறது
நினைத்தது நெகிழ்ந்தது.

நிம்மதியும் தொலைந்தது
நினைவுக்குச் சின்னம் வைக்கும்
நிலையைப் போல் எங்குரைக்க
நிலவுக்கும் ஒரு வேலியா?

ஏ.எல்.ஏ.பாபு,
திருகோணமலை.

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.

அத்தியாயம் 19

(35)



# சிங்கை மைந்தன்

## அமரசிம்மன்

“கனவுலகிலிருந்து நனவுலகிற்கு வந்தபோது கூடாரங்களில் எரியும் தீப்பந்தங்களின் ஒளி அவன் கண்களை கூசச் செய்தன. தூரத்தில் அங்கேயோ அருவிபாயும் ஓசை தன்முன்னே மார்புடன் அணைத்த கரங்களுடன் நிற்கும் மாடனைப் பார்த்தான். தன் இனிய கனவைக் கலைத்த அவன் மீது எரிச்சல் வந்தபோதும் கடமையின் கண்ணியமும் முன்னெழுந்ததும் புன் சிரிப்புடன் அவன் தோளைத் தட்டி அணைத்தவாறு கூடாரத்துக்குள் அழைத்துச் சென்றான். அவனுடைய தன்மையைக் குழப்பி விட்டேனோ என்ற பயஉணர்வுடன் மௌனமாய் நின்றான் மாடன்.

“என்ன பேச்சையே காணோம். ஏதும் பிரச்சினையா?” என்று கேட்டான் அமரசிம்மன்.

“தாங்கள் தனிமையில் குறுக்கிட்டு விட்டேன் போலும் மன்னிக்க வேண்டும் பிரபு” என்றான்.

“பைத்தியக்காரா. தனிமை மனிதனுக்கு பெரிய எதிரி என்று உனக்குத் தெரியாதா? இல்லாத கற்பனைகளைத் தோற்றுவித்து அவனையே பைத்தியமாக்கிவிடும்” என்று சிரித்தான்.

“இந்த இயற்கை சூழல் மனதில் இல்லாத கற்பனைகளை எல்லாம் தோற்றுவித்துவிடும் பிரபு”

“உண்மைதான் மாடா. ஈழத்திரு நாட்டின் இயற்கை அழகு எனக்கு சேரநாட்டினை நினைவூட்டிவிட்டது. அதைத் தொடர்ந்து...” என்று சிரித்தான்.

“அது சரி ஏதாவது செய்தி வந்ததா?” என்றான்.

“நாம் பாடிபோட்ட இடம் ஒற்றனுக்கு ஏற்கெனவே அறிவித்ததுதானே. எப்படியும் காலைக்குள் எமக்கு செய்தி வரலாம் பிரபு”

“அதுவரை நாம் நடந்து முடிந்த துறைமுகப் போரில் நிகழ்ந்த சுவாரஷ்யமான விடயங்கள் பற்றி சிறிது ஆராய்வோம். அங்கே நீ வெற்றிக்கொடி நாட்டிவிட்டு இறங்கியபோது ஈட்டி பாய்ந்து இறந்துவிட்டாய் என்று ஓர் செய்தி வந்தது. அந்தச் செய்தி அறிந்து நான் தூதனை கேள்வி கேட்டபோது மறுசெய்தி மகிழ்ச்சியாய் வந்தது. அங்கே நடந்தது என்ன? அதில் சம்பந்தப்பட்டவன் நீ. என்ன நடந்தது என்பது உனக்குத்தான் தெரியும் சொல்லேன் கேட்போம்” என்று சிரித்தான் அமரசிம்மன்.

“நான் அந்த இடத்தில் இறந்திருப்பேன் என்றுதான் எல்லோரும் நினைத்திருப்பார்கள். நல்லவேளையாக நான் தப்பிவிட்டேன். ஈட்டி எறிந்தவன் அளகக்கோனாரின் படையில் ஓர் விசுவாசமான ஊழியன்.காயம் பட்டு மயாங்கிக் கிடந்தவன் கீழே கிடந்தபடியே ஈட்டியை வீசியிருக்கின்றான் என்றால் அவன் எத்தகைய பலசாலியாக இருக்க வேண்டும். அவன் வைத்த குறி தவறாமல் ஆளை முடித்திருக்கும். நான் நின்ற இடத்தில் வேறு ஒருவன் நின்றிருந்தால் கூடற்கொள்ளைக் கலங்களில் நாம் பெற்ற பயிற்சி துரிதமாகச் செயற்படும் முறைகள் தான் என்னைத் தப்ப வைத்தது. நான் இறங்கிய வேகம் ஒரு நொடிப் பொழுது பிந்தியிருந்தால் நான் தொலைந்திருப்பேன். மேல் நோக்கி வந்த ஈட்டி முனை எனது தோள் புயத்தின் மேலங்கியைக் கிழித்து விட்ட நிலையில் நானும் பிடித்த பிடியை விட்டு கீழே குதித்து விட்டேன். தூரத்தில் நின்று பார்த்தவர்கள் நான் ஈட்டிக்கு இரையாகியிருப்பதாகத்தான் நினைத்திருப்பார்கள். ஈட்டி எறிந்தவனை எமது வீரர்கள் கண்டதுண்டமாக வெட்டி எறிந்துவிட்டனர் பிரபு. அதுதான் எனக்கு வருத்தம்” என்றான்.

“உன்னைக் கொன்றவனை அவர்கள் கொன்றதில் வருத்தம் என்ன இருக்கு?”

“நான் தான் இறக்கவில்லையே”

“அது அவர்களுக்கு உடன் தெரிந்திருக்காதே”

“உண்மைதான் பிரபு. ஆனால் அவனைப் பிடித்து வந்தால் சில விடயங்களை அவன்மூலம் அறிந்துகொள்ளும் வாய்ப்பு உண்டல்லவா?”

“அதுவும் சரிதான். ஆனால் களத்தில் நிற்கும்போது சிந்தித்து செயலாற்ற முடியாது. சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு சில விடயங்களைச் செயற்படுத்தத்தான் வேண்டி ஏற்படுகின்றது. அப்படி இதுவும் ஓர் தற்செயல் நிகழ்வு. நீ தப்பி வந்ததே எனக்குச் சந்தோசம்.” என்று கூறிக் கொண்டிருக்கும் போது காவல்வீரன் ஒருவன் வந்து கூடார வாசலில் தூதன் வந்திருப்பதாகக் குரல் கொடுத்தான்.

“அவனை உள்ளே அனுப்பி வை” என்று கூறிய அமரசிம்மன் தூதனின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தான்.

சில நொடிப் பொழுதில் உள்ளே வந்த தூதனைப் பார்த்து ஆச்சரியமடைந்தான் அமரசிம்மன். தாடி, மீசையுடன் சாதாரண உடையில் ஓர் குடியானவனைப் போல தோன்றிய தூதன் வணக்கம் கூறிவிட்டு உள் அங்கிக்குள் மறைத்து வைத்திருந்த செய்தி மடலை எடுத்து அவனிடம் கையளித்தான்.

உபதளபதி அனுப்பிய குறிப்புக்களைப் பார்த்து சிரித்துக்கொண்டே மாடனின் முதுகில் தட்டி. “நான் எதிர்பார்த்தபடியே தான் உபதளபதிகள் செயற்பட்டிருக்கின்றார்கள். இதோ நாம் செல்லும் பாதைகள் கூட இக்குறிப்பில் வரையப்பட்டிருக்கின்றது. அளகக்கோனார் புத்திசாலிதான். ஆனாலும் அவன் எமது பலத்தை, விவேகத்தை அதாவது அவனுடைய எதிரியின் நிலைப்பாட்டைக் குறைத்தும் மதிப்பிட்டு விட்டான். இப்போது கொஞ்சம் உஷாரப்பட்டு விட்டான். இதோ பார் இந்த வெளி ஓர் சமபூமி. இங்கே ஓர் பாரிய மோதல் நடைபெறலாம் என உபதளபதிகள் எதிர்பார்க்கின்றனர். அவர்களது எதிர்பார்ப்பு சரியானதே. ஆனால் எமது வருகையை அவன் எதிர்பார்த்திருக்க முடியாது. நீர் கொழும்புத் துறையில் இறங்கிய உங்கள் படைப் பிரிவைத்தான் அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆகவே தான் அளகக்கோனாரின் முட்டாள்தனமான எதிர்பார்ப்பால் அவன் தனக்குத்தானே குழிதோண்டிக் கொண்டுவிட்டான் என்று குறிப்பிட்டுள்ளனர். அது சரி நீ ஏன் சாதாரண குடியானவன் போல் வந்தாய்?” என்று தூதனைப் பார்த்துக் கேட்டான்.

“பிரபு! அளகக்கோனாருக்கு விசுவாசமான வீரர்கள் சந்தேகத்துக்கிடமாக உள்ளவர்களை மறித்து சோதனை செய்கிறார்கள். அதனால்தான் நான் இப்படி வந்தேன்.”

“வழியில் உன்னை யாரும் எதுவும் கேட்வில்லையா?”

(தொடரும்...)

3 ஆவது ஆண்டில்...

தினமுரசு

நாளிதழ்

தினம்தோறும்
கல்விமுரசு
இணைப்பு

இப்போது நீங்கள் அறிய விரும்பும்
அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

ரூ.10/=
மட்டுமே

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - ‘பரமர் சங்கமம்”, “மெய்தான் பாருங்கோ” “பதிவிறக்கப்பெட்டகம்”

A/L, O/L மற்றும் புலமைப்
பரிசில் மாணவர்களுக்கான
மாதிரி வினாத்தாள்கள் - விடைகளுடன்
தினமும்
சனி, ஞாயிற்றுக்கிழமைகள்
க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான
அலகு ரீதியான குறிப்புகள்,
மாதிரி வினாக்களும்
விடைகளும் வெளியாகின்றன!




# பெண்களுக்கான உடை அழகு!



உடை என்பது அனைவருக்கும் முக்கியமான ஒரு விஷயம். அதை நாம் எந்த விதத்தில் பயன்படுத்துகிறோம் என்பதை பொறுத்து நம் மீதான வசீகரத்தை கூட்டமுடியும். இது ஆண்கள் பெண்கள் இருவருக்குமே பொருந்தும்.

**குண்டாக இருப்பவர்கள்**

உடை விசயத்தில் முக்கியமான ஒன்று அனைவரும் நம் உடல்வாகிற்கு எது பொருந்துமோ அந்தவகையான உடைகளையே தேர்வு செய்ய வேண்டும். ஆசைப்படுகிறோம் என்பதற்காக பொருத்தமில்லாத உடைகளை அணிந்து மற்றவர்கள் கிண்டலடிக்கும்படி நடந்து கொள்ளக்கூடாது. சரியான உடைகளை தேர்வு செய்வதன்மூலம் மற்றவர்களிடம் நன்மதிப்பைப் பெறமுடியும்.

குண்டாக இருப்பவர்கள் கண்டிப்பாக மிகவும் வழுவழுப்பான உடைகளை தேர்வு செய்யவே கூடாது. காரணம் அவ்வகையான உடைகள் உடலோடு ஒட்டி உடல் பாகங்களை வெளிப்படையாக காட்டும். குறிப்பாக மார்பு, இடுப்பு மற்றும் பின்புறம், இது பார்ப்பவர்களுக்கு ஒரு வெறுப்பையே தரும். இவ்வகையான ஆடைகளை முற்றிலும் தவிர்த்துவிடுதல் நலம். எனக்கு இந்த மாதிரி துணிதான் பிடிக்கும் என்றால் இருப்பதிலேயே குறைந்தளவு வழுவழுப்பான உடைகளை தேர்வுசெய்யுங்கள். கொட்டன் வகை உடைகள் சிறந்தது.

**குள்ளமாக குண்டாக இருப்பவர்கள்**

இவர்களும் வழுவழுப்பான உடைகளை கண்டிப்பாக தவிர்த்தே ஆகவேண்டும் வேறு வழியே இல்லை. இவ்வகை உடைகள் இன்னும் உயரம் குறைந்தவர்களாக காட்டும். பெண்களுக்கு மிக முக்கியமான அம்சம் குறிப்பாக குள்ளமாக இருப்பவர்களுக்கு ஷோல்டர் அகலமாக இருப்பது, உங்கள் ஷோல்டர் அகலமாக இருக்க வேண்டியது அவசியம். ஒரு சிலரை பார்த்தால் அவர்களுக்கு ஷோல்டர் அகலம் குறைவாக இருக்கும், அவர்களுக்கு இருக்கும் ஒரே வழி கொட்டன் புடைவைகள்தான். இவைகள்தான் உங்கள் சோல்டரை மறைத்து அகலப்படுத்தி காட்டும். அதோடு கொட்டன் புடைவை என்பதால் சதை பகுதிகளை அப்பட்டமாக காட்டாது.

*பெண்கள் சுடிதார் அணியும்போது கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் தொள தொளன்னு அணியக் கூடாது. குறிப்பாக குள்ளமாக குண்டாக உள்ளவர்கள், அதேபோல ரொம்ப இறுக்கமாகவும். இடுப்பு பகுதியில் அளவு குறைத்து ஓரளவாவது ஸ்ட்ரக்சர் கொண்டுவரும்படி இருக்கவேண்டும். ரொம்ப இறுக்கமாகவும் இருந்தால் பின்புறம் அசிங்கமாக தெரியும்.

ஒல்லியாக இருப்பவர்கள் சுடிதார் அணியும்போது கையின் அளவு ரொம்ப குறைவாக வைக்கக் கூடாது. இது உங்களின் நீண்ட கைகளை (ஒல்லியாக இருப்பதால்) இன்னும் நீண்டதாக காட்டும். தேர்வு செய்யும் உடை திக்கான உடையாக பார்த்துக்கொள்வது நல்லது.

**பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-365**

**கேள்வி: பெண்களின் எந்த உரிமைகளுக்காக கிளாரா போராடினார்?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 06.05.2013**

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 365
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 363 இற்கான விடை :- அவர்கள் பலவீனமாக இருப்பது, கவனக்குறைவுடன் நடந்துகொள்வது, கருமுட்டை வளர்ச்சியடையாமல் இருப்பது.

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- வ.நிருபா, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

365

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

தே.அ. அட்டை இல : ..............................

விடை : ..............................

..............................

கையொப்பம் : ..............................

# பெண்களுக்காக

## 60 ஆண்டு காலம் போராடிய பெண்மணி!



**பெண்** உரிமைகளுக்காகப் போராடியவர்களில் மிக முக்கிய மானவர். முற்போக்கான தொலை நோக்கு சிந்தனையும் துணிச்சலும் இவருடைய சிறப்புக் குணங்கள். பெண்கள் போராட்ட வரலாற்றின் நெடும் பயணத்தில் இவரது பங்களிப்பு 60 ஆண்டுகள்.

1857, ஜுலை, 5 ஜெர்மனியின் ஒரு கிராமத்தில் பிறந்தார் கிளாரா. அப்பா காட்டி ஃபிரைட், பள்ளி ஆசிரியர். அம்மா ஜோசபின் விடேல், அக்காலத்திலேயே பெண் உரிமையில் அக்கறை கொண்டவர். அதனால் கிளாராவுக்கு இளம் வயதில் இருந்தே பெண் உரிமைப் போராட்டங்களில் ஆர்வம் இருந்தது.

பள்ளிக்கல்வியை முடித்த கிளாரா, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் 4 ஆண்டுகள் படித்தார். அவருடைய ஆசிரியரே பெண்கள் இயக்கத்தின் தலைவராக இருந்தார் அவர் மூலம் பல விஷயங்களை அறிந்துகொண்டார் கிளாரா.

ரஷ்யா, போலந்து நாடுகளில் இருந்து குடிபெயர்ந்த மாணவர்கள், புரட்சிகர சோசலிஸ அமைப்பை உருவாக்கி, செயற்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் ஓசிப் ஜெட்கின். இவருடைய புதுமையான யோசனைகளும் கட்டுரைகளும் அப்போது மிகவும் பிரபலமாக இருந்தன. மார்க்சிய சித்தாந்தங்களை அவர்மூலம் நன்கு கற்று அறிந்தார் கிளாரா. இருவருக்கும் நல்ல புரிதல் ஏற்பட்டு இணைந்தார்கள்.

1870ல் ஜெர்மானிய சோசலிஸ இயக்கத்தில் தீவிரமாக பணி புரிந்தார் கிளாரா. 1878ல் ஜெர்மனியில் சோசலிஸ்ட்டுகளுக்கு எதிராகத் தடைகொண்டு வந்தார் பிஸ்மார்க். அதன்பின் ஜெர்மானிய ஜனநாயக கட்சியில் சேர்ந்து வேலை செய்தார் கிளாரா. சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தி, ஓசிப் ஜெட்கினை வெளியேற்றியது ஜெர்மனி. ஜெட்கினுடன் கிளாராவும் பாரிஸ் வந்துசேர்ந்தானர்.

ரஷ்யத் தோழர்கள் குடும்பம் நடத்த உதவிசெய்தனர். 2 ஆண் குழந்தைகள் பிறந்தனர். இருவரும் குடும்பப் பொறுப்புகளைப் பகிர்ந்துகொண்டு, சமூகப் போராட்டங்களிலும் பங்கேற்றனர். சில காலத்தில் ஓசிப் ஜெட்கினுக்கு பக்கவாதம் ஏற்பட்டு, படுக்கையில் விழுந்தார். குழந்தைகள், கணவர், சமூகப் போராட்டங்கள் என கிளாராவுக்கு அது கடுமையான காலகட்டம். 1889ல் தன் அன்பு மனைவியை விட்டு, மறைந்துபோனார் ஜெட்கின்.

அந்த ஆண்டு 2வது சர்வதேச மகளிர் மாநாடு பாரிஸில் நடைபெற்றது. அங்கு பெண் தொழிலாளர்களின் பிரச்சினைகள், பெண்களுக்கான உரிமைகளை ஆணித்தரமாக எடுத்துரைத்தார் கிளாரா. "உரிமைக்காக பெண் தொழிலாளர்கள் எந்தவித இன்னல்களையும் தாங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். போராட்டத்தின் முடிவில், பெண்களே தங்கள் உரிமைகளை எடுத்துக்கொண்டு திறம்படச் செயல்படுவார்கள்" என்று சூளுரைத்தார். அவரது பேச்சு உலகம் முழுவதும் செயற்பட்டு வந்த பெண்கள் இயக்கங்களுக்கு உத்வேகமூட்டியது.

அப்போதைய காலகட்டத்தில் கிளாரா அங்கம்வகித்த கட்சியிலும் கூட பெண் உரிமைகள் குறித்து முரண்பாடுகள் நிலவின. "சொத்து, தகுதியின் அடிப்படையில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படவேண்டும்" என்பது பலரின் கருத்தாக இருந்தது. கிளாராவோ "வயதுவந்த பெண்கள் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கவேண்டும்" என்று உறுதியாகக் கூறினார். "வேலை, சம்பளம், உரிமைகள் அனைத்தும் ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கும் கிடைக்க வேண்டும்" என்றார்.

1890ல் ஜெர்மனியில் சோசலிஸ்ட் மீதான தடை நீங்கியது. கிளாரா நாடு திரும்பினார். தோழி ரோசா லக்சம்பர்க்குடன் சேர்ந்து போராட்டங்களைச் சந்தித்தார். 1892ல் 'சமத்துவம்' பத்திரிகையின் ஆசிரியரானார். 2 ஆயிரம் பிரதிகளில் தொடங்கிய சமத்துவம் இதழ் 1914ல் 1 லட்சத்து 25 ஆயிரம் பிரதிகள் விற்பனையானது. 25 ஆண்டுகள் அதன் ஆசிரியராக இருந்தார் கிளாரா.

"சமூகத்தில் எப்படிப் பெண்களுக்குச் சம உரிமை வேண்டுமோ, அதேபோல குடும்பத்திலும் உரிமை கிடைக்க வேண்டும். ஆணும் பெண்ணும் விரும்பி ஏற்ற இல்லறத்தில் இருவருக்கும் சம அளவில் பொறுப்பு இருக்கிறது. குழந்தை பிறப்பைவிட குழந்தை வளர்ப்பில் அதிக கவனம் தேவை. ஆண், பெண் பேதம் இன்றி, குழந்தைகளை வளர்க்கவேண்டும். அவர்களுக்கு நாமே அதற்கான உதாரணமாகத் திகழவேண்டும்.

பிறந்ததில் இருந்து இப்படி வளர்க்கப்படும் குழந்தைகள் பிற்காலத்தில் நல்ல புரிதலோடு சமூகத்தில் வாழ்வார்கள். விவாகரத்து, கருக்கலைப்பு, மறுமணம் என்பதெல்லாம் அவரவர் சொந்த விருப்பங்கள். இவற்றிலும் ஆணுக்கு இருக்கும் அத்தனை உரிமைகளும் பெண்ணுக்கும் வழங்க வேண்டும்" என்றார் கிளாரா. தன்னைப் புரிந்துகொண்ட, தன்னைவிட வயதில் மிகவும் இளையவரான ஃபிரெடரிக் ஜுண்டாலை திருமணம் செய்துகொண்டு, குழந்தைகளோடு வசித்தார்.

1914ல் ஜெர்மனி போரில் பங்கேற்றது. அதுவரை அரசாங்கத்தை எதிர்த்துவந்த சமூக ஜனநாயக கட்சி, தங்கள் கொள்கைகளைத் தள்ளி வைத்துவிட்டு, போர்ச்சூழலில் சொந்த நாட்டுக்கு ஆதரவு அளித்தது. இந்தச் செயலை கிளாரா வன்மையாகக் கண்டித்தார். "போர் என்பது மனித குலத்துக்கு எதிரானது. ஆட்சியாளர்களின் ஆணவ விளையாட்டுக்குச் சாதாரண மக்கள் பலியாவதா? போர் உட்பட எந்தச் சூழலும் ஒரு கொள்கையை மாற்ற முடியாது" என்று சொந்த கட்சியினரையும் ஆட்சியாளர்களையும் சேர்த்து எதிர்த்தார் கிளாரா.

கோபம்கொண்ட அரசாங்கம் அவரைச் சிறையில் தள்ளியது. பலத்த எதிர்ப்புக்குப் பிறகு, கிளாரா விடுவிக்கப்பட்டார். 1917 ரஷ்ய புரட்சிக்குப் பிறகு, ரஷ்யாவில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. அரசியலில் பெண்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைத்தது. ரஷ்யப் புரட்சியாளர் லெனினுடன் நிறைய விவாதம் செய்து, கருத்துகளைப் பட்டைத் தீட்டிக் கொண்டார். கிளாராவின் போராட்டத்தின் மூலம் ஜெர்மன் அரசில் பெண்கள் உறுப்பினர்களானார்கள். 1902ல் ஜெர்மன் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் கிளாரா. பல்வேறு நாடுகளில் இருந்த பெண்ணுரிமை இயக்கங்களின் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார்.

1924ல் ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் குடியேறினார் கிளாரா. தொடர்ந்து போராட்டங்களில் பங்கேற்றார். எழுதினார். பேசினார். "பெண் உரிமைகளுக்கான போராட்டத்தை, அடுத்துவரும் பெண்கள் தொடர்வார்கள்... என்றாவது ஒருநாள் பெண் சுதந்திரம், சமத்துவம், பிரதிநிதித்துவத்தை எட்டுவார்கள்" என்ற நம்பிக்கைகளில், 1933ல், 76ஆவது வயதில் ஓய்வெடுத்துக்கொண்டார் கிளாரா ஜெட்கின்.

# வேலைக்கு போகும் கர்ப்பிணியா?



இப்போது பெண்கள் கால் பதிக்காத துறைகளே இல்லை என்று சொல்லலாம். பெண்கள் வேலைக்க போவது நல்ல விஷயம். ஆனால் அதே நேரத்தில் வேலைக்கு போகும் பெண்கள் உணவு விசயத்தில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

கர்ப்பமாக இருக்கும் பெண்கள் காலையில் வேலைக்கு செல்லும் அவசரத்தில் ஒழுங்காக சாப்பிடாமல் போய்விடுவார்கள். இவ்வாறு வேலைக்குப்போகும் அவசரத்தில் வயிற்றில் உள்ள குழந்தையை சரியாக கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது.

ஏனெனில் வயிற்றில் இருக்கும் கருவுக்கு, அவ்வப்போது ஏதாவது தீனி கொடுத்தே ஆகவேண்டும். தரைகளில் டைல்ஸ் என்றால் அதிக கவனத்துடன் மெதுவாக நடங்கள். அவசரப்பட்டு நடந்துபின்னர் வழுக்கி விழுந்தால் சிக்கல்தான். அலுவலகத்தில் தரைத்தளம் என்றால் சிக்கல் இல்லை.

அதுவே மாடிப்படி என்றால், கூடுதல் கவனம் தேவை. மாடிப்படி ஏறினால் கருவில் உள்ள குழந்தைக்கு அழுத்தம் அதிகமாகும். எனவே கூடுமானவரை லிப்ட் உபயோகியுங்கள். வேலை நேரத்தில் இடையிடையே சத்தான பழங்கள், காய்கறி சாலட்களை சாப்பிடலாம், ஜ/ஸ் பருகலாம். இது பணியின் சோர்வை போக்குவதோடு குழந்தைக்கும், கர்ப்பிணிக்குமான சரிவிகித சத்துக்களை நிலைநிறுத்தும். கோப்பியில் உள்ள காஃபின், கரு குழந்தைக்கு ஆகாது. இதை தவிர்த்து ஆரோக்கிய பானங்களை பருகலாம்.



ஈராக்கின் குண்டுவெடிப்பு செய்திகளை கண்டு கொள்ளாத உலகம் போஸ்டன் குண்டுவெடிப்பிற்கு ஒப்பாரி வைக்கிறது. அமெரிக்க அதிபர் ஒபாமா முதல் உலக ஊடகங்கள்வரை தனிச்சிறப்பாக போஸ்டன் குண்டுவெடிப்பின் மீது அனுதாபமும், கண்டனமும் தெரிவிக்கின்றனர். இந்திய பிரதமர் மன்மோகன் சிங், போஸ்டன் குண்டுவெடிப்புகளை கண்டித்து ஒபாமாவுக்கு கடிதம் எழுதியிருக்கிறார். ஈராக் மக்களைப் பற்றி கவலைப்படவோ, கண்ணீர்விடவோ யாருமில்லை. அவர்கள் குண்டுவெடிப்பில் சாக விதிக்கப்பட்டவர்களா?, அமெரிக்கர்களுக்கு என்றால் இரத்தம், மற்றவர்களுக்கு என்றால் தக்காளிச்சாறா? அமெரிக்கர்கள் மட்டுமல்ல ஈராக்கியர்களும் மனிதர்களே.

முதல் தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்பு இந்த கொடூரத் தாக்குதல்கள் நடந்திருக்கின்றன.

சதாம் ஹுசைன் தலைமையிலான அப்போதைய ஈராக் அரசாங்கம் பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பதாக குற்றஞ்சாட்டி, ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுத்து கடந்த 10 ஆண்டுகளாக ஈராக்கை ஆக்கிரமித்திருந்தது.

போருக்கு முன்பு அமெரிக்காவும், பிரிட்டனும் பேரழிவு ஆயுதங்கள் பற்றிய ஆதாரங்களை போலியாக தயாரித்தார்கள் என்பதும், ஈராக்கில் அத்தகைய ஆயுதங்கள் எதுவும் கண்டறியப்படவில்லை என்பதும் பின்னர் நிருபணமாயின. அமெரிக்காவின் போரினாலும் தொடர்ந்த ஆக்கிரமிப்பினாலும் கடந்த 10 ஆண்டுகளில் குழந்தைகள், பெண்கள் உட்பட இலட்சக்கணக்கான (1.1 இலட்சம் முதல் 1.2 இலட்சம் வரை) அப்பாவி ஈராக்கிய மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

அமெரிக்க படையெடுப்பின் 10ஆம் ஆண்டு நிறைவை குறிக்கும் மார்ச 1ஆம் திகதி நாடு முழுவதும் நடந்த குண்டுவெடிப்புகளில் 65 பேர் கொல்லப்பட்டிருந்தனர். தொடர்ந்த வன்முறை சம்பவங்களில் சிக்கி, மாநிலத் தேர்தல்களில் போட்டியிடவிருந்த வேட்பாளர்களில் குறைந்தது 14 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

சன்னி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் அன்பர் மாநிலம், சதாம் உசைனின் சொந்த ஊரான திக்ரித், எண்ணெய் வளம் மிகுந்த கிரகுக மாநிலம், ஷியாக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் தெற்கு ஈராக்கிய நகரங்கள் என்று நாடு முழுவதும் தாக்குதல்கள் நடந்திருக்கின்றன.

கமாலியா என்ற கிழக்கு புறநகர் பகுதியில் நடந்த தாக்குதலில் பேருந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார் வெடித்ததில் 4 பேர் கொல்லப்பட்டனர், 13 பேர் காயமடைந்தனர். ஜன்னல்கள் நொறுங்கி விழுந்து குழந்தைகள் பயத்தில் அலறினார்கள் என்றார் அருகிலுள்ள பள்ளியின் ஆசிரியரான காசிம் சாத். குண்டுவெடிப்பு நடந்த இடத்துக்கு வந்துசேர்ந்த பாதுகாப்புப் படையினர் வானத்தை நோக்கிச்சுட்டனர். கவிழ்க்கப்பட்ட காய்கறி வண்டிகள் இரத்தம் படிந்து கிடந்தன. கடை முகப்புகள் நொறுங்கி போயிருந்தன.

கடும் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ள பக்தாத் பன்னாட்டு விமான நிலையத்தின் நுழைவாயிலில் உள்ள கார் நிறுத்தத்தில் 2 வெடிகுண்டுகள் வெடித்ததில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

இரவு நெருங்கும்வேளையில் கிழக்கு நகரப் பகுதியான ஹபிபியாவில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு கார் வெடித்ததில் 10 பேர் கொல்லப்பட்டனர். தலைநகரில் கமிலா, ஷு'ர்தா, பலாடியத், மற்றும் உம்-அல்-மாலிப் பகுதிகளில் மற்ற தாக்குதல்கள் நிகழ்ந்தன.

மூன்று குண்டுகள் அவை வெடிப்பதற்கு முன்பே நீக்கப்பட்டுவிட்டதாக ஈராக்கின் இராணுவ மேஜர் ஜெனரல் ஹசன்-அல்-பய்தானி தெரிவித்திருக்கிறார்.

பல இனத்தவர்கள் வாழும் கிர்குக் நகரில் அரபுக்கள் வாழும் பகுதியில் ஒன்று, குர்துகள் வாழும் பகுதியில் ஒன்று, துருக்கியர்கள் வாழும் பகுதியில் ஒன்று என்று மூன்று கார் வெடிகுண்டுகள் ஒரே நேரத்தில் வெடித்ததில் 4 பேர் கொல்லப்பட்டனர். நகருக்கு வெளியே வெடித்த மூன்று குண்டுகள்மூலம் 5 பேர் கொல்லப்பட்டனர்.

### ஈராக்கை குண்டுகள் வெடிக்கும் நாடாக மாற்றியது யார்?

ஷியா, சன்னி பிரிவுகளை தூண்டிவிட்டு மோதவிட்டு ஈராக்கை எப்போதும் மோதல்களில் வாழும் நாடாக வைத்திருப்பது அமெரிக்காதான் என்று முஸ்லிம் தலைவர்கள் கொதிக்கின்றனர். தனது மேலாதிக்கத்தை தக்கவைப்பதற்கு இத்தகைய உள்நாட்டு மோதல்களை தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது அமெரிக்காவிற்கு புதிதல்ல.

ஈராக்கில் ஒரே நாளில் 55 பேரை பலி கொண்ட குண்டுவெடிப்புகள் நடந்த அதே நாளின் பிற்பகுதியில் அமெரிக்காவில் போஸ்டன் நகரில் மராத்தான் ஓட்டப்பந்தய நிகழ்வில் 2 குண்டுகள் வெடித்ததில் 3 பேர் உயிரிழந்தனர், பலர் காயமடைந்தனர். இந்த குண்டுவெடிப்புகளை நடத்தியது யார் என்று தெரியவில்லை. அமெரிக்காவில் நடந்த சமீபத்திய துப்பாக்கிச் சூடுகளை வைத்துப் பார்க்கும்போது இது வெள்ளை நிறவெறியர்களாலோ இல்லை. அமெரிக்க வாழ்க்கையால் சீர்குலைந்த வெள்ளையர்களாலே நடத்தப்பட்டு இருக்கலாம். இல்லை அல்-குவைதாவாகக் கூட இருக்கட்டும். அல்-குவைதாவும்கூட அமெரிக்காவின் தயாரிப்புதானே!


ஈராக்கின் குண்டுவெடிப்பு செய்திகளை கண்டுகொள்ளாத உலகம் போஸ்டன் குண்டுவெடிப்பிற்கு ஒப்பாரி வைக்கிறது. அமெரிக்க அதிபர் ஒபாமா முதல் உலக ஊடகங்கள்வரை தனிச்சிறப்பாக பாஸ்டன் குண்டுவெடிப்பின் மீது அனுதாபமும், கண்டனமும் தெரிவிக்கின்றனர். இந்திய பிரதமர் மன்மோகன் சிங், போஸ்டன் குண்டுவெடிப்புகளை கண்டித்து ஒபாமாவுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

ஈராக் மக்களைப் பற்றி கவலைப்படவோ, கண்ணீர்விடவோ யாருமில்லை. அவர்கள் குண்டுவெடிப்பில் சாக விதிக்கப்பட்டவர்களா?, அமெரிக்கர்களுக்கு என்றால் இரத்தம், மற்றவர்களுக்கு என்றால் தக்காளிச்சாறா? அமெரிக்கர்கள் மட்டுமல்ல ஈராக்கியர்களும் மனிதர்களே.

பொன்விழா ஆண்டில்

# ஒஸ்மானியாக் கல்லூரி

## துள்ளித் திரிந்த பள்ளியின் பசுமையான நினைவுகள்...



**யாழ்.ஒஸ்மானியாக்** கல்லூரியின் பழைய மாணவனான முன்னாள் உயர்தர மாணவ மன்றத் தலைவர் என்ற முறையில் என் கல்லூரியின் ஆரம்பகால வளர்ச்சியைப் பற்றி எழுதுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இக்கட்டுரையை எழுதத் தொடங்கும்போதே ஒஸ்மானியா கல்லூரியில் என் பள்ளித் தோழர்களுடன் துள்ளித்திரிந்த அந்த இனிய பள்ளிப் பருவத்தின் பசுமையான நினைவுகளே என் மனதில் ஓடிக்கொண்டிருந்தன.

'யாழ்ப்பாணம் என்று சொன்னால் தேன் சுவை ஊறும்' என்ற கூற்றுக்கிணங்க யாழூர் மக்கள் கல்வியிலும் மேலோங்கிக் காணப்பட்டார்கள். எட்டாம் வகுப்புவரை கல்வி புகட்டும் பணியில் யாழ். மஸ்ற உத்தீன் பாடசாலை (புதுப்பள்ளி), முஹம்மதியா கலவன் பாடசாலை (அல்லாபிச்சை மாமா பள்ளி), வண்மேற்கு முஸ்லிம் கலவன் பாடசாலை (மன்ப - உல் உலூம மத்ரஸா) ஆகிய நற்சேவை புரிந்தன. இப்படியான கனிஷ்ட பாடசாலைகளில் கல்விகற்ற மாணவர்கள் மேற்படிப்பைத் தொடர்வதற்காக யாழ். வைத்தீஸ்வரா, யாழ்.மத்திய கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி போன்ற பாடசாலைகளுக்கு சென்றனர். எனினும் அக்காலத்தில் வசதி குறைந்தவர்கள் கனிஷ்ட பாடசாலைகளில் இருந்து மேற்படிப்பைத் தொடர முடியாமல் படிப்பை விட்டு விட்டு வேறு தொழில்களை நாடுபவர்களாக இருந்தனர். இது முஸ்லிம் சமுதாயத்திற்கு கவலைக்குரிய விடயமாகவே இருந்தது.

இக்காலகட்டத்தில் இலங்கையின் தேசிய வீரரும் சிறந்த கல்விமானும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபருமாகிய அல்ஹாஜ் Dr.T.B ஜாயா அவர்களின் தலைமையிலான குழு 1938 ஆண்டிலும், 1942ஆம் ஆண்டிலும் விஜயம் செய்தது. யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் மேற்படிப்பைத் தொடர்வதற்கான ஒரு பாடசாலையை உருவாக்கவேண்டும் என்பதை இக்குழுவினர் மக்கள் மத்தியில் வலியுறுத்தினர். யாழ். முஸ்லிம் மாணவர்கள் கல்வியில் தலைசிறந்து விளங்கவேண்டுமென்பதே ரி.பி.ஜாயா அவர்களின் குறிக்கோளாக இருந்தது. அதனால் யாழ்ப்பாணத்திலும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் கிளையொன்று நிறுவப்படவேண்டும் என்பதில் அக்கறை செலுத்தினர். எதிர்காலத்தில் முஸ்லிம் சமுதாயம் கல்வியில் மேலோங்கிக் காணப்படவேண்டும் என்றும் அதற்கான அடித்தளத்தை காலதாமதமின்றி ஆரம்பிக்கும்படியும் எடுத்துக்கூறிவிட்டுச் சென்றார்.

அதன்பின் யாழ்.முஸ்லிம் மக்கள் விழித்துக்கொண்டனர். எப்படியாவது எமது பிரதேசத்தில் முஸ்லிம் கல்விக்கூடம் ஒன்று நிறுவப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். அதற்காக அல்லும் பகலும் பாடுபட்டார்கள். அந்தக் காலத்தின் வேகத்தில் பல்வேறு பிரதானிகளும் குழுக்கள் அமைத்துக் கருத்துக்கள் வெளியிட்டார்கள். மகஜர்களை முன் வைத்தார்கள். ஊர் மக்களிடமும் வேறு நிறுவனங்களிலும் அரசியல் பிரமுகர்களிடமிருந்தும் பணம் திரட்ட முடிவுசெய்தார்கள். அந்தக் காலத்தில் பெரிய தனவந்தரான வி.எம்.எம்.எஸ். அப்துல் காதர் ஹாஜியார் அவர்கள் பணங்கொடுத்து உதவியது மட்டுமல்லாமல் இக்குழுவிற்கு தலைமை தாங்கினார். அவருடன் முன்னாள் யாழ்.மாநகர மேயர், வழக்கறிஞர் குவாஸி, ஏ.எம்.சுல்தான், கிராமசேவகர் எஸ்.ஏ.றஸீன் (எனது தாயாரின் பெரியப்பா) ஆகியோரும் அயராது பாடுபட்டனர்.

இவர்களின் தலைமையில் எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியிலும் பணம் திரட்டப்பட்டது. அப்போதைய யாழ்ப்பாணத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜீ.ஜீ.பொன்னம்பலம், கியூ.ஸி. அவர்கள் அரசாங்கம் வாயிலாக ஒரு பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கிக்கொடுத்திருந்தார். இவ்வாறாக திரட்டப்பட்ட நிதியில் இருந்து யாழ். நகரத்து முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்த 'ராப்ஸ்' வீதியில் காணித்துண்டொன்றை வாங்கினார்கள். (ஜின்னா மைதானத்திற்கு முன்பாக)

1959 ஆம் ஆண்ட மே மாதம் 03 ஆம் திகதி டி.பி.ஜாயா அவர்கள் அத்திவாரக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து வி.எம்.எம். அபூசாலி ஹாஜியார் அவர்களின் முயற்சியினால் 'ராப்ஸ்' வீதி என்று நாமம் பூண்டிருந்த நேரிய சாலை மாநகராட்சி மன்றத்தினரால் 'முஸ்லிம் கல்லூரி வீதி' என்ற புதிய பெயரைப் பெற்றது.

**முன்னாள் உயர்தர மாணவர் மன்றத் தலைவர்,**
**அல்ஹாஜ் M.F.M.இக்பால்**

(தொடரும்...)

# மட்டக்களப்பிலும் தலைதூக்குகிறது விபச்சாரக் கலாசாரம்!



**தொழில்நுட்ப** வளர்ச்சியும், போக்குவரத்து மற்றும் ஏனைய வசதிகளும் அதிகரிக்க அதிகரிக்க பொருளாதார மேம்பாடு உயர வேண்டும் என்பது தேவையாக இருந்தாலும் குற்றச்செயல்களும், வீணான விடயங்களும் அதிகரித்து வருவதனையே காணமுடிகிறது.

அந்தவகையில் விபச்சாரச் செயற்பாடுகள் குறித்தும் அதனால் ஏற்பட்டுவரும் வீணான பிரச்சினைகள் குறித்தும் ஆராயலாம்.

ஏப்ரல் மாத முதல் வாரத்தில் மட்டக்களப்பிலுள்ள ஹோட்டல் ஒன்றில் விபச்சாரத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் 3 ஜோடிகள் கைது செய்யப்பட்டனர். சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட பெண்கள் மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன் ஹோட்டல் உரிமையாளர் மற்றும் ஹோட்டல் உதவியாளர் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டுமிருந்தனர்.

குறித்த ஹோட்டலை பொலிஸார் முற்றுகை இட்டபோது, மூன்று இனங்களையும் சேர்ந்த மூன்று பெண்களும், முக்கிய பதவிவகிக்கும் இரண்டு அதிகாரிகளும், இளைஞர் ஒருவரும், ஹோட்டல் உரிமையாளர் மற்றும் உதவியாளரும் கைதுசெய்யப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

விபச்சாரத்தில் ஈடுபட்ட பெண்களுடன் இருந்த அதிகாரிகளும், இளைஞரும் பொலிஸ் பிணையில் அன்றைய தினம் மாலையிலேயே விடுவிக்கப்பட்டிருந்தனர் என்பது இதில் குறித்துக்காட்டப்பட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வி.இந்திரனின் உத்தரவிற்கமைய நீதிமன்ற அனுமதியுடன் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கிஞ்சிலி குணசேகர தலைமையிலான குழுவினர் ஹோட்டலை முற்றுகையிட்டு அநாகரிகமான முறையில் இருந்த அறுவரையும் கைது செய்திருந்தனர் என்பது பொலிஸ் தவலாக இருந்தது.

கைது செய்யப்பட்ட பெண்களில் முஸ்லிம் பெண் காத்தான்குடியைச் சேர்ந்தவர் என்றும் சிங்களப் பெண் கந்தளாயைச் சேர்ந்தவர் என்றும் தமிழ்ப் பெண் பருத்திச்சேனையைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அதேநேரம், ஆண்களும் வெவ்வேறு இடங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

விபச்சாரம் என்பது கலாசார ரீதியில் பிழையானதொரு விடயமாகச் சொல்லப்படுகிறது. அதனை எல்லோரும் தவறானதாகவே பார்க்கின்றனர். ஆனாலும் அதனை வருமானத்துக்கானதொரு தொழிலாகக் கொள்ளும் நிலை பல இடங்களில் நீண்டகாலமாகவே இருந்து வருகிறது.

இதற்கு சிங்கள, முஸ்லிம், தமிழ் என்ற வேறுபாடுகள் இல்லாமலும் இருக்கின்றன. அந்தவகையில் மட்டக்களப்பில் இவ்வாறான செயற்பாடுகள் நீண்ட காலமாக பல இடங்களில் நடைபெற்று வருவதாகத் தகவல்கள் கசிந்திருந்த போதும், தற்போது வியாபார ரீதியில் நடைபெற்றுவரும் ஒரு இடம் சுற்றிவளைக்கப்பட்டு சோதனை இடப்பட்டுள்ளது. இதுபோன்ற பல இடங்கள் இன்னமும் இருக்கின்றன என்பதும் தகவல்.

இது விடுதிகளில் நடைபெறும் சம்பவங்களைக் குறித்தாலும் தனிப்பட்ட முறைகளிலும் இவ்வாறான விபச்சார நடவடிக்கைகள் நடைபெற்றுவருவதாகவும் தகவல்கள் இருக்கின்றன. அவ்வாறானதொரு சம்பவம் கடந்த வருடத்தில் மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் அமைந்திருந்த கடை ஒன்றில் நடைபெற்றிருந்தது. தெரிந்து நடைபெறும் இவ்வாறான சம்பவங்களைவிடவும் இரகசியமாக நடைபெறும் சம்பவங்களே அதிகமாகும்.

பொலிஸார் பாதுகாப்புக்கும், சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும் என்றிருக்கின்ற நிலையில், அந்தப் பொலிஸார் ஒரு சிலரின் தவறான நடவடிக்கைகளினால் இவ்வாறான பிழையான விடயங்கள் அதிகரிப்பதற்கு காரணமாகிவிடுகிறது.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் இருந்து போக்குவரத்துப் பிரச்சினை, தொடர்பாடல் பிரச்சினை என்பன இல்லாத நிலையில், பல இடங்களைச் சேர்ந்த பெண்களும் இவ்வாறான விபச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவர்களில் அநேகம் பேர் வறிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். அதேநேரம், பாதுகாப்பு போன்ற விடயங்களுக்காகவும் இவ்வாறான நடவடிக்கைகள் மிரட்டல் அடிப்படையில் நடைபெறுகின்றன என்பதும் தகவல்.

முன்னாள் பெண் போராளிகள் விபச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்ற தகவல் கடந்த வருடம் முதல் வெளியாகியிருந்த போதும் அவற்றினை உறுதிப்படுத்த முடியாத நிலை காணப்பட்டது. தொழில் பிரச்சினை, வருமானமின்மை போன்ற காரணங்களால் அவர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் நிறைவுபெற்ற பின்பு கொள்ளை, கொலை, விபச்சாரம் என குற்றச்செயல்களின் அதிகரிப்பு அதனால் கிடைத்திருக்கும் வசதியையே காட்டி நிற்கிறது. இருந்தாலும் முன்பிருந்த அச்சம், பயம் தற்போது இல்லாது போயிருக்கின்றமை இவற்றினை அதிகரித்திருக்கின்றது என்பதனையே காட்டுகின்றது.

கடந்த காலங்களில் யுத்தத்தினை காரணம் காட்டி பல குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்படா நிலை ஒன்று காணப்பட்டது. ஆனால் தற்போது நிலைமை மாறி எல்லா இடங்களிலும் சாதாரண நடைமுறை ஏற்பட்ட பின்பு அந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் குற்றச்செயல்கள் எல்லாவற்றையும் தடுத்து நிறுத்துவதற்கு பல்வேறுபட்ட மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவையும் இருக்கிறது.

சமாதானம் நிலவுகின்ற, சிவில் நிலை தோன்றி இருக்கின்ற பிரதேசங்களில் இவ்வாறான கொள்ளை, கோஷ்டி மோதல்கள், கற்பழிப்புகள், விபச்சாரங்கள், போன்ற குற்றச் செயல்கள் சாதாரணமானவைகளாகவே இருக்கின்றன. ஆனாலும் அவற்றினை நிறுத்திக் கொள்ள சமூகத்தினை ஆசுவாசப்படுத்தி நல்ல விடயங்கள் பற்றிய நடவடிக்கைகள் தேவையாக இருக்கின்றன.

அமைதியாக எப்பிரச்சினையும் இல்லாத பிரதேசங்கள் உலகத்தில் எங்கும் இல்லை என்றாலும், மட்டக்களப்பினைப் பொறுத்த வரையில், இவ்வாறான கலாச்சார சீர்கேடுகள்

**- பிரகஸ்பதி -**

நடைபெறாத வகையில் இருப்பதற்கு மற்றவர்கள் மீதான அக்கறையும் உருவாகியாகவேண்டும். ஏனெனில் யாரைப் பற்றியும் கவலைகொள்ளாத தன்மை நகரங்களில் ஏற்படுவது போன்று மட்டக்களப்பிலும் காணப்படுகிறது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் அதிகமாக இருந்த சுனாமி மற்றும் யுத்த காலத்தில் இவ்வாறான விபச்சாரத்துக்கென நடவடிக்கைகள் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிபவர்களால் மேற்கொள்ளப்பட்டதாகவும், அவ்வேளையில் பெருந்தொகையான கருக்கலைப்புக்கள் நடைபெற்றதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால் அவை ஓய்ந்துபோன நிலையில் தற்போது விடுதிகளுக்கு பரவியிருக்கிறது.

வடக்கு – கிழக்கு பிரதேசங்களில் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கையில் நடைபெறும் கலாசார சீர்கேட்டை ஏற்படுத்தும் செயற்பாடுகள் சந்தேகங்களை பலர் மீதும் ஏற்படுத்தும் என்பதும், பலரது உயிரிழப்புகளுக்கும் இடம்பெயர்வுகளுக்கும் காரணமாக இருக்கும் என்ற வகையிலும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களும் அவற்றுக்குத் தூண்டுபவர்களும் இவற்றினை நிறுத்திக் கொள்வது சிறப்பானதாக இருக்கும்.

வீதி ஒழுங்குப் பொலிஸார் வீதிக்கு வீதி நிறுத்தப்பட்டு கடமை வழங்கப்படுவது, வெறுமனே வாகனங்களை நிறுத்தி அனுமதிப்பத்திரங்கள் பரிசோதிப்பதும், சமிக்ஞைகள் இயக்கப்படவில்லை, போன்ற விடயங்களுக்காக தண்டம் விதிப்படுவதும்தான் என தற்போது வீதி ஒழுங்குப் பொலிஸாரின் வேலையாக இருக்கிறது. அதேநேரம், சில கையூட்டுக்குள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

இவர்கள் உண்மையில் தண்டங்களை விதித்து அரசாங்கத்துக்கு வருமானம் சேர்த்துக் கொடுப்பது மாத்திரம்தான் என எண்ணிக்கொண்டு செற்படுவதனால் பல நல்லவர்களைக் குற்றம் செய்யத் தூண்டும் நிலை களும் ஏற்படுகின்றன. அதில் மாற்றங்கள் தேவை. அது போன்று கொள்ளைகள் போன்ற குற்றச்செயல்கள் குறித்தும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் மக்களை சரியான முறையில் வழிநடத்துவதாக அமைந்திருக்க வேண்டும். அத்துடன் சரியான முறையில் சிவில் செயற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டு பொதுமக்கள் வழிப்படுத்தப்படுவதும் முக்கியமானதாகும்.

அந்தவகையில், விபச்சார நடவடிக்கைகள் குறித்துப் பேசினால் குற்றம் செய்பவர்கள் ஒரு தரப்பாக இல்லாமல் ஆண் – பெண் என்ற இரண்டு தரப்பாக இருக்கின்றனர். இவர்கள் இருவரும் இவற்றுக்கான தவிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது சிறப்பாக இருக்கும். இதில் குற்றம் செய்பவர்கள், பெண்களாக இருந்தாலும் அதற்குத் தூண்டுபவர்கள் ஆண்களாகவே இருக்கின்றனர் என்பது முக்கியமானதாகும்.

கடந்த கால யுத்தம், சூறாவளி மற்றும் சுனாமி போன்ற செயற்கை, இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுவருகின்ற இன்றைய சூழ்நிலையில் தொடர்ந்து கலாசாரப் பிரச்சினைகளும் ஏற்படுவது விபரீதங்களையே கொண்டுவரும்.

வறுமை – கலாசாரச் சீரழிவுக்கு வழிவகுக்கிறது என்றால் வருமானம் ஈட்டுவதற்காக வசதிபடைத்தவர்கள் அல்லது பணக்காரர்கள் செய்யும் வீணான பிழையான செயற்பாடுகளை நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கலாசாரப் பிரச்சினைகளை நிறுத்துவதற்கு அதிகாரத் தரப்பினர் நடவடிக்கை எடுக்கத் தவறும்பட்சத்தில் சமூகம்சார் அமைப்புக்கள் செயற்பாட்டில் இறங்கவேண்டும். சமூகம்சார் அமைப்புகளின் குறைந்திருக்கும் நடவடிக்கைகளும், கலாசார சீர்கேடுகளுக்குக் காரணம் என்றவகையில் அவற்றின் தேவையே தற்போது எழுந்திருக்கிறது என்பதே காலத்தின் கட்டாயமாகும்.

# மாடுகள் செத்து மடிகின்றன! சோகத்தில் பண்ணையாளர்கள்!!

**மட்டக்களப்பு** வேப்பவெட்டுவான். மாவடியோடைப் பகுதிகளில் இரத்தம் குடிக்கும் ஒருவகை சிறிய ஈக்களால் பல நூற்றுக்கணக்கான மாடுகள் தினமும் செத்துமடிவதாக பண்ணையாளர்கள் துயரம் வெளியிடுகின்றார்கள்.

மாடுகளில் மொய்க்கும் ஆயிரக்கணக்கான ஒரு வகைச் சிறிய ஈக்களே இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டு மாடுகளைச் கொல்வதாக பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முப்பது. நாற்பது மாடுகளைக் கொண்டிருக்கும் மாட்டுப் பண்ணையாளர்கள் ஒவ்வொருவரும் கடந்த ஓரிரு மாதங்களில் சுமார் பத்துத் தொடக்கம் 15 மாடுகளை தாங்கள் இழந்திருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

ஒட்டுமொத்தமாக சமீப மூன்று மாத காலப் பகுதிக்குள் ஈக்கடிகளால் சுமார் ஆயிரம் என்ற எண்ணிக்கையில் மாடுகள் செத்து மடிந்திருப்பதாக அவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

கறுப்பு நிறமுள்ள ஒரு வகைச் சிறிய ஈக்கள் மாடுகளின் உடம்பில் மொய்த்துக்கொண்டு இரத்தத்தை வேண்டிய மட்டும் உறிஞ்சிக் குடிக்கின்றன.

இதனால் பலவீனப்பட்டுப் போகும் மாடுகள் ஒரு சில நாட்களில் எலும்பும் தோலுமாகி மேய்ச்சலுக்கும் செல்வதில்லை. காடுகளுக்குள் புகுந்துகொண்டு செத்துமடிகின்றன.

மேற்படி ஈக்கடியால் இரத்தம் உறிஞ்சப்பட்ட மாடுகளின் தந்தங்களும், தாடைகளும், கண்களும் கழுத்துப் பகுதியும் வீக்கமடைவதாக மாட்டுப் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஈக்கடி தாங்கமுடியாமல் ஈக்களை விரட்டுவதற்காக மாடுகள் பகல் வேளைகளில் காடுகளுக்குள் ஓடிச் சென்று ஒழிந்துக்கொள்கின்றன.

கடி தாங்கமுடியாமல் கால்நடைகள் பற்றைக் காடுகளுக்குள் ஓடித் திரிந்து ஈக்களை விரட்டுகின்றன. அத்துடன் வெகுதூரத்திற்கும் ஓடித் தப்புகின்றன.

பகலில் ஈக்கடிக்குப் பயந்து இரவில் மாத்திரம் அவை மேய்ச்சலுக்கு வருவதனால் மாடுகள் தீவனம் இன்றி



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

பலவீனப்பட்டு செத்து மடிகின்றன என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். முதியான்கள் எனப்படும் காளைகள். நாகுகள் ஆகிய இளங்கன்றுகளே அதிகம் செத்துப்போவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

எருமை மாடுகளிலும் இந்தவித கறுப்பு ஈ மொய்த்துக் கொண்டு இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கின்ற போதிலும்கூட எருமை மாடுகள் சட்டென நீருக்குள் போய் அமிழ்ந்து விடுவதால் ஈக்கடித் தொல்லையிலிருந்து அவை இலாவகமாகத் தப்பி விடுகின்றன என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஈக்கடி ஆபத்துத் தொடருமானால் மீதமிருக்கும் ஒரு சில மாடுகளும் மிகக் குறுகிய நாட்களுக்குள் மாண்டு போய்விடக்கூடிய ஆபத்து இருப்பதாக அவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மிருக வைத்தியப் பகுதியினர் அக்கறை எடுக்கவில்லை என்றும் அவர்கள் ஒரு முறையே இன்னும் இந்த மேய்ச்சல் பகுதிக்கு வந்து பார்வையிடவில்லை என்றும் மாட்டுப்பட்டி வைத்திருப்போர் குறைப்படுகின்றனர்.

சாதாரணமாக ஈக்கடிகளால் செத்து மடியும் ஒவ்வொரு மாட்டினதும் தற்போதைய சந்தைப் பெறுமதி சுமார் 30 தொடக்கம் 40 ஆயிரம் ரூபாய் வரையில் இருக்கும் என்றும் அவர்கள் வேதனை வெளியிடுகின்றனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு கிழக்கிலே வரலாறு கண்டிராத பாரிய வெள்ளப் பெருக்கு மூன்று முறை ஏற்பட்டிருந்தது.

இது சரித்திரத்தில் நூற்றிப் பத்து வருடங்களின் பின்னர் ஏற்பட்ட தொடர்ச்சியான அடைமழையும் பாரிய வெள்ளமும் என்று கருதப்பட்டது.

2010 ஆம் ஆண்டு டிசெம்பர் 14 ஆம் திகதி பெய்யத் துவங்கிய அடைமழை 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி 03 ஆம் திகதி ஏற்பட்ட பெருவெள்ளத்துடனேயே ஓய்ந்துபோனது.

இந்த மூன்று மாத காலப்பகுதியிலும் மூன்றே மூன்று நாட்களே வானம் வெளுத்திருந்தது. இந்த அடைமழை பெருவெள்ளக் காலப்பகுதியில் இப்பகுதி விவசாயி களின் பெரும் எண்ணிக்கையிலான கால் நடைகள் மழையிலும் வெள்ளத்திலும் அடிபட்டுச் செத்துப் போயின.

ஈக்கடியால் இளங்கன்றுகள் செத்து மடிவதால் இனி பட்டி பெருகுவதற்கு இடமில்லாமல் போகும் என்பது அவர்களது மாறாத கவலையாகவுள்ளது.

நோய்வாய்ப்பட்ட மாடுகளால் இளங்கன்றுக்குப் பாலூட்ட முடியாமல் போவதால் இளங்கன்றுகளும் பரிதாபமாகச் செத்து மடிகின்றன. அதே வேளை ஈக்களின் தொல்லையில் இருந்து தப்புவதற்காக பகல்வேளையில் மாடுகள் காடுகளுக்குள் ஒழிந்திருந்து விட்டு இரவிலேயே மேய்ச்சலுக்கு வருகின்றன.

ஆக ஒட்டுமொத்தத்தில் மாடுகளையும் இழந்து. இளங்கன்றுகளையும் இழந்து பால் உற்பத்தியும் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஏழை விவசாயிகள் செய்வதறியாது தடுமாறிப் போய் நிற்கின்றார்கள்.

மிருக வைத்தியர்கள், கால்நடை அபிவிருத்திப் பிரிவு. மற்றும் மாகாண அமைச்சு அதிகாரிகள் ஏன் இந்த விடயத்தில் அக்கறையற்று இருக்கின்றார்கள் என்பது புரியாத புதிராக உள்ளது.

இன்ரகூலர் வாகனத்தில் செல்லக் கூடிய இத்தகைய அதிகாரிகள் குன்றும்குழியும் கல்லும் முள்ளும் நிறைந்த காட்டுப் பாதையில் ஒரு முறையேனும் பயணம் செய்து அங்குள்ள கால்நடை வளர்ப்பாளர்களின் துயரங்களை அறிய வாய்ப்பில்லாமல் போனது துரதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும்.

நூற்றுக்கணக்கான மாட்டுப் பட்டிகள் உள்ள வேப்பவெட்டுவான் மற்றும் மாவடி ஓடை போன்ற காட்டுப்பகுதிகளுக்கு நாம் சென்று பார்த்தபோது காடுகளுக்குள் செத்த மாடுகளின் எலும்புகள் கிடப்பதையும் துர்நாற்றம் வீசுவதையும் கண்டறியக் கூடியதாக இருந்தது.

தகர்ந்துபோன. பள்ளமும் படுகுழியும் நிறைந்த செப்பனிப்படாத வீதிகளில் கல்லிலும் முள்ளிலும் அவர்கள் தமது கைக்குழந்தைகளையும் காவிக்கொண்டு தலையில் மூட்டை முடிச்சுக்களோடு பல கிலோமீற்றர்கள் தூரத்தை நடந்து செல்ல வேண்டியிருக்கின்றது.

பரிதாபத்துக்குரிய அவர்களது வாழ்க்கையில் நாம் பார்வையாளர்களாக மட்டும் இருக்கின்றோம். பங்காளர்களாக எப்போது மாறப் போகின்றோம் என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

# யாதும் ஊரே யாவரும் கேளிர்...

**ஒன்று** பட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமையே மனித பலம். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பவை நம்மிடையே நிலவும் பிரசித்தமான பழமொழிகள். சமுதாய ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. மனிதர்களாக பிறந்த ஒவ்வொருவரும் மற்றவர்களோடு அன்பாகவும் ஒற்றுமையாகவும் வாழவேண்டும், ஒருவருக்கொருவர் உதவி – ஒத்தாசை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த இம் மணிமொழிகள் சமுதாய மேம்பாட்டின் ஆழத்தை எமக்கு உணர்த்துகின்றன.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்", "நன்றும் தீதும் பிறர் தரவாரா" என்று ஆரம்பிக்கின்ற புறநானூற்றுப் பாடல் உலக மாந்தர் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள் என்ற உரிமை உணர்வை காட்ட எழுந்தவையாகும். இவ்வாறு சமுதாய மேம்பாட்டோடு வாழ்ந்த தமிழினம் இன்று தம்முள் வேறுபட்டு, போட்டி, பொறாமை, பூசல் என்ற வேண்டாதசெயல்களை பிடித்துக்கொண்டு உழலுவதை எம்மால் அன்றாட வாழ்வில் காணக்கூடியதாகவே உள்ளது. எம்மத்தியிலே தினசரி எழுகின்ற தீராத இன, மத பிரச்சினைகள் இன்னல்களுக்கெல்லாம் காரணம் எம்மிடத்தே சமுதாய மேம்பாடு இல்லாமை ஆகும்.

ஒருவருக்கொருவர் கருத்து முரண்பாடுகள் கொள்வதும், நான்தான் உயர்ந்தவனாக இருக்கவேண்டும் என்று தற்பெருமை விரும்புவதுபோன்ற குணங்கள், நாம் மற்றவர்களுடன் பகைமை கொள்கின்றமையினாலேயே சமுதாய மேம்பாடு இல்லாதொழிக்கப் படுகிறது. மற்றவர்களும் தங்களைப் போல மனிதர்களே என்றும், தாம் எய்துகின்ற இன்பதுன்பங்கள் மற்றர்களுக்கும் ஏற்படுவது இயல்பே என்று நம்பி, பிறரையும் தம்மைப்போல நேசித்து வாழ்பவர்கள் ஒற்றுமை மனப் பாங்கு உள்ளவர்களாக இருப்பர்.

இதேபோன்று மக்களிடையே சமுதாய மேம்பாடு சிறந்து விளங்கும் இடத்தே மானுடநேயம் தழைத்தோங்கும். மானுடநேயத்துக்கு சிறந்த வழிகாட்டியாக நாம் தாயையே குறிப்பிடலாம். ஏனெனில் உலகிலே தோன்றும் அனைத்து உயிரினங்களுமே தாயிடத்திலேதான் உருவாகின்றன. இந்த வகையிலேதான் தாய் ஒருவருடைய முதல் கண்டெய்வம். பிள்ளைக்கு நோய் வந்தால் தான் பத்தியம் காத்து, கொட்டும் மழையும், கொழுத்தும் வெயிலும் எம்மில்படாது பாதுகாத்து வளர்ப்பவள் அம்மா. பள்ளிப் பருவம் வந்ததும் எம்மை பக்குவமாய் பாடசாலைக்கு அனுப்பி வைப்பவர் அம்மா.

இவ்வாறாக முதலில் எமக்கு மற்றவர்கள் மீது அன்பு செலுத்துவது என்பது பற்றி எமக்கு அறியத்தருபவள் தாய். இவ்வாறாக மானுட நேயம் பற்றி மேலும் சில தகவல்களை நோக்கினோம் எனில், உலகிலுள்ள மனிதகுலமானது, இந்த நூற்றாண்டில் படித்தறிய வேண்டிய விடயம் மானுடநேயம் அறிவது மாத்திர மல்ல; ஒவ்வொருவரும் தமது வாழ்வில் அதைக் கடைப்பிடிக்கவேண்டியதும் மக்களின் தேவையாகிறது. மனிதன் மனிதநேயம், மனிதஉரிமைகள், மனிதாபிமானம் போன்ற சொற்கள் ஓரளவுக்கு மனிதனுடைய பொது விழுமியத்தோடு ஒழுக்கம், பண்பாடுகள் சார்ந்த அம்சமாகும்.

மனிதகுலம் விஞ்ஞான வளர்ச்சியில் உன்னத நிலையடைந்து இன்று கணினிகளுக்கு மூளை இல்லை, இதயம் இல்லை என்றாலும் இயங்குகின்றன. ஒருவர் மற்றவர் வாழ்வுக்கு உதவுவது பற்றி எண்ணிப் பார்க்க இயலாது. நேரம் ஒதுக்க முடியாத காலத்தில் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கின்றது மனிதகுலம். மனிதர்களுக்கு எண்ணிப்பார்க்கும் இதயம் இருந்தும், உள்ளம் அமைந்தும் அவர்கள் ஏனைய மனிதர்கள் பற்றிக் கவலைப்படவில்லை என்றால் அவனுக்கும் விலங்குகளுக்கும், இயந்திரங்களுக்கும் என்ன வேறுபாடு இருக்கமுடியும் என்று எம்முள் கேள்வியை எழுப்பி கொள்ளவேண்டிய இக்கட்டான சூழ்நிலையிலே நாம் அனைவரும் இருக்கின்றோம்.

தனியாகவோ, கூட்டாகவோ இந்த இழிநிலைகளை மாற்ற வேண்டியது சமூகத்தின் கடமையாகும். இந்த நிலையிலே மக்களுக்கு மனிதநேயம் வழிதரும் மருந்தாகிறது. "ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் – மற்றையவன் செத்தாருள் வைக்கப்படும்" என்பது நாம் பெறுகின்ற கல்வியும், அதனால் சேகரிக்கப்படும் அறிவும் மற்றவர்களை அன்போடு நேசித்து உதவுதுதான் மனித நேயப் பண்பென குறிப்பிட்டுள்ளார் பொய்யாமொழிப் புலவர்.

பிறருக்கு உதவுதல், அன்பு பாராட்டுதல், மற்றவர் பசி தீர்த்தல், தாம் பெற்ற இன்பம் பிறருக்கு பெற வழிச் செய்தல் என்பவை மனித நேயம் காட்டும் அடிப்படை கூறு களாகும். மனிதநேயம் உள்ளவனே உயிருள்ள, அறிவுள்ள மனிதனாக கருதப்படுவான், மற்றவன் இருந்தும் இறந்தவனாகவும் அறிவு அற்றவனாகவும்தான் கருதப்படுவான்.

பதவி, போகம், வசதி, வளம் இவை எல்லாம் பலருக்குப் பிறப்பாலும் பலருக்கு வாய்ப்பாலும், சிலருக்கு உழைப்பாலும் வருகிறது. இந்த வாய்ப்பு கிடைக்காதவர்களும் மனிதர்கள்தான் என்று எண்ணிப் பார்த்து மதிக்கும் மனநிலை நம் மத்தியில் வளர வேண்டும். இந்த மனிதநேய பண்பு எங்களிடத்தே தோன்றுமானால் மனிதகுலமே நல்ல நாகரிகம் பெற்ற குலமாக மிளிரும். மனிதநேயமானது தமிழர் வரலாற்றிலே எழுந்த இதிகாச புராணங்கள், நீதிநூல்கள், சமயநூல்கள் எல்லாம் எடுத்துரைத்த சில சிந்தனைகளை நோக்கினோம் எனில்,

பாரிவள்ளல் முல்லைக்கொடிக்கு தன் தேரினையே படர்வதற்கு கொழு கொம்பாகக் கொடுத்ததும், பேகன் என்ற மன்னன் குளிரில் நடுங்கிய மயிலுக்கு விலையுயர்ந்த போர்வையை அளித்தான் என்பதனூடாக கருணையையும், தன்மகன் செலுத்தி வந்த தேரில் தற்செயலாக வந்த அடிப்படை பசுக்கன்றின் தாயின் அழுகுரல் பொறுக்க முடியாது மகனை தனது தேர்க்காலில் இட்டு நெரித்துக்கொன்ற மனுநீதிகண்ட சோழனின் இரக்கம் என்பவை எல்லாம் மனிதநேய செயற்பாடுகளாக எடுத்துக் காட்டப்படுகின்ற அதேநேரம் அதனை நம்வாழ்விலும் கடைப்பிடிக்கவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.



"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் அதற்காக இரங்கி தாமும் மனம்வாடிய வள்ளலார் முதல் மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர், புளோறென்ஸ் நைற்றிங் கேள், அன்னைத் தெரேசா- வரை எத்தனையோ உதாரணங்களை மனிதநேயத்தின் மாட்சியை சிந்திக்கும் பொழுது குறிப்பிடலாம். அன்பின் வழியது உயர்நிலை என்று கூறும் வள்ளுவர் பொருமான் அந்த அன்பானது மனித நேயமாக மாறவேண்டும் இல்லையென்றால் மனிதன் தன் வாழ்வின் அர்த்தத்தை இழந்துவிடுவான் என்று வலியுறுத்துகின்றார்.

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்றும் ஒற்றுமையால் வாழ்வதாலே உண்டு நன்மையே, வேற்றுமையை வளர்ப்பதனாலே விளைவும் தீமையே" என்று வரும் இனிய வார்த்தைகளில் பொதிந்துள்ள உண்மையினை மீண்டும் மீண்டும் சிந்திப்போமாக! ஒற்றுமையும், சந்தோஷமும், நல்லிணக்கமும் எம்மிடையே குடிகொள்ளுமெனில் எம்மை எந்தச் சக்தியாலும் வெற்றி கொள்ள முடியாது என்பதை எமது சமுதாயத்துக்கு உணர்த்துவோமானால் சமுதாய மேம்பாடு தழைத்தோங்கும்.



சதாசிவம் தர்ஷிகா,
குரூப் ஆலிடஎல.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 518

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | ■ | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | ■ |
| 13 | 14 | 15 | 16 | ■ | 18 |
| 19 | 20 | 21 | ■ | 23 | 24 |
| 25 | ■ | 27 | 28 | 29 | 30 |
| ■ | 32 | 33 | 34 | 35 | ■ |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **06.05.2013** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 518
தினமுரசு வாரமலர்.
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 516- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ப | 2 ர | 3 ப் | 4 பு | ■ | 6 மு |
| 7 ய | 8 வை | ■ | 10 ல் | 11 ர | 12 த |
| 13 ன் | ■ | 15 வோ | 16 ம | 17 ண | 18 லை |
| ■ | 20 தா | ■ | 22 ர | 23 தீ | ■ |
| 25 ப | 26 ம் | 27 ப | 28 ம் | 29 ர | ■ |
| 31 சி | 32 பு | 33 ம் | ■ | 35 ன் | 36 கா |

### இடமிருந்து வலம்

01. ஆராய்ச்சி அல்லது மூக்குத்தி.
04. ஒளி.
07. இது ஜெயிக்குமாம். (குழம்பியுள்ளது)
13. குபேரன்.
19. இது காட்டிலும் இருக்கும்; வீட்டிலும் இருக்கும். (குழம்பியுள்ளது)
23. கிளைகள் இல்லாமல் வளரும் மர வகைகளில் ஒன்று.
27. ஒருவருக்கு திறமைகள் இருக்கலாம். ஆனால் இது இருக்கக் கூடாது. (திரும்பியுள்ளது)
32. இலங்கையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட துறைமுகம் ஒன்று.

### மேலிருந்து கீழ்

01. எவருக்கும். எண்ணத்தாலோ. சொல்லாலோ. செயலாலோ தீமை செய்யாமல் இருப்பவனை இப்படி அழைக்கலாம்.
02. கட்டளை அல்லது உறுதிப்பத்திரம்.
04. கட்டுப்பாடு.
05. நீர் அல்லது கம்மியர் தொழில்.
09. இலை. (குழம்பியுள்ளது)
18. தானிய வகை ஒன்று. ( திரும்பியுள்ளது)
23. முல்லை நிலமக்கள். (குழம்பியுள்ளது)
28. விஸ்வாமித்திர முனிவர் இந்த வலிமைமிக்கவர்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 516 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**இ.சௌமியமூர்த்தி, மாதகல் கிழக்கு, மாதகல்.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. ம.சங்கவி, வேலணை தெற்கு, வேலணை.
02. தி.வேதிகா, தோப்பூர், வவுனியா.
03. ஜே.[illegible], வவுனிக்குளம்.
04. ச.வந்தனா, உப்புக்குளம், மன்னார்.
05. ம.பார்த்தீபன், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.
06. வி.மாளவிகா, சந்தை வீதி, கொடிகாமம்.
07. சி.மனிஷா, நுகுணுப்பிட்டிய.
08. ம.றெஜினா, வெள்ளவத்தை, கொழும்பு – 06
09. சி.ஆதர்ஷா, எட்டியாந்தோட்டை.
10. த.அம்பலவாணர், அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.



26

# வலிகளின் சன்மானம்


இராமசாமி ரமேஷ்,
அளம்பில்


**ஆம்! வலிகளையும், சுமைகளையும் தோல்விகளையும், அவமானங்களையும் சுமந்து - கடந்து வெற்றிக்காகப் போராடும் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துலகப் பயணம் இங்கே தொடர்கிறது.**

**கடலில்** நீண்டதூரம் வந்திருந்தான் நட்சத்திரன். இருள் கெளவி அடர்ந்த வனமாய் தெரிந்தது கடல் பரப்பு. வலையை போட்டான் தூரத்தே சில வெளிச்சத்துகள்கள் புலப்பட்டன. அவற்றைத் தவிர வேறேதும் மனித அரவம் காணப்படவில்லை. முன்புகளில் போல, இவன் இப்போதுகளில் வறுமை வாழ்க்கையை நினைத்து வருந்துவது கிடையாது! இன்று வருவதை நாளை வெல்லலாம் என்னும் அசட்டுத்தனமான நம்பிக்கை முளைத்திருந்தது.

வாழ்க்கைப் புத்தகத்தில் பல அனுபவப் பக்கங்களை புரட்டிவிட்ட பக்குவம் நிறைந் திருந்தது. அதுவே, இவனிடத்தில் ஆழமான சிந்தனைகளையும் முயற்சி விதைகளையும் விதைத்திருக்கிறது.



இன்னும் இருபது ஆயிரங்கள் தேடிவிட்டால், புத்தகத்தின் வெளியீட்டை சிறப்பாக முடித்து விடலாம். என் எழுத்துக்கள் நினைவு கூரப்படும் நாள் அந்த நாள்தான்! நட்சத்திரனுக்குள் எதிர்பார்ப்பு கள் அந்த நாளை ஆவலோடு தேடத்தொடங்கி யிருக்கின்றன. கடல் அமைதியை பறைசாற்றிக் கொண்டிருந்தது. படகின் அசைவில் நட்சத்திரன் தொலைந்திருந்தான். அடிக்கடி மனசுக்குள் மீன் பிடிபடவேண்டும் என்று எண்ணச் சிதறல்கள்.

மௌனிகா நட்சத்திரனின் நூலைச் சரிபார்த்து, பிழைதிருத்திக் கொண்டிருந்தாள். அவனது படைப்பினை நூலுருவில் பார்த்துவிட வேண்டும் எனும் வாஞ்சை இவளுக்குள்! ஏழ்மைக்குள்ளிருந்தும் போராட்டங்களுக்குள் இருந்தும் வெளிவரும் படைப்புக்கள் அதிகமாய் உண்மைகளைத்தான் உட்பொதிந்திருக்கும். வலிகளின் சன்மானத்தின் பின்னாலும் இப்படி எத்தனையோ போராட்டங்கள். நட்சத்திரன் எனும் ஒற்றை மனிதனின் பின்னால் நடக்கும் விதியின் விளையாட்டுக்கள் என ஏராளமாய் கொட்டிக் கிடக்கின்றன. அவை வெளிவருகின்ற போது நிச்சயமாய் பலராலும் பேசப்படும். இவனுக்கும் இதுதான் நல்ல சந்தர்ப்பம். மௌனிகா நூலை சரிபார்த்து முடித்திருந்தாள். இன்னும் நான்கைந்து நாட்களில் நூல், வெளியீட்டுக்குத் தயாராகிவிடும்.

வானம் திடீரென மிகையாகக் கறுத்துப் போனது. எங்கிருந்தோ முகில்கள் வந்து ஒன்றாகின. கருக்கட்டிய கார்மேகங்கள் மழைத்துளிகளை பிரசவிக்கத் தொடங்கின. காற்றும் அதிகமாக கொஞ்சம் வழமைக்கு மாறாய் வீச ஆரம்பித்தது. படகு புயலுக்குள் சிக்குண்ட சருகுபோல தள்ளாடியது. ஒரு தடவை நங்கூரத்தை இழுத்துப் பார்த்தான் நட்சத்திரன், அது கனதியாய் நிற்பதாக தோன்றியது. படகின் உட்புறமாக புகுந்து கொண்டான். சாரல் ஏற்கனவே இவனை நனைத்துவிட்டிருந்தது. உள்ளே கிடந்த சாரத்தினால் முகத்தை ஒற்றிக்கொண்டான். இன்னும் இன்னும் இருளும் மழையும் காற்றும் அதிகமாகிக் கொண்டேபோனது.

"என்னது... இண்டைக்கெண்டு இப்படிக் கிடக்கு...? உள்ளுக்குள் உச்சரித்தான். படகு வேகமாக ஆட்டம் காணத்தொடங்கியது. வெளியில் ஓர் தடவை எட்டிப்பார்த்தான். எதுவுமே புலப்படவில்லை. கரிய போர்வை கொண்டு உலகமே மூடப்பட்டிருப்பதான இருள். வழமையாக வரும் தூரத்தைவிட இன்று கொஞ்சம் அதிகமாகவே கடல் எல்லை கடந்துவந்திருக்கிறான் நட்சத்திரன். சின்னதாய் நெருடலும் தைத்தது. மீண்டுமொரு தடவை வெளியே எட்டிப்பார்த்தபோது தான் புரிந்தது. நங்கூரம் அறுந்து விட்டது.



படகு காற்றின் திசையில் நகர்ந்து நீண்ட தூரம் வந்துகொண்டிருக்கிறது! திடுக்கிட்டுப் போனான். கண் திறக்க முடியாத மழையும், உற்றுப் பார்த்தாலும் எதுவுமே புலப்படாத இருளும், புயலின் சாயலில் காற்றும் கடலை அகோரப்படுத்திக் கொண்டிருந்தன. நங்கூரம் அறுந்துவிட்டதால், இனி என்ன செய்வதென்று புரியவில்லை. படகை காற்று எல்லை கொண்டுபோய் நிறுத்தப் போகிறதோ!!

வலைகளும் எவ்விடத்தில் என்பது ஞாபகத் தில் சிக்கவில்லை. அதுவும் தூரமாகிவிட்டதாக தோன்றியது. கடலின் நடுவிலும் அலைகள் ஆக்ரோஷமாய் எழுந்துகொள்ள நட்சத்திரனின் இதயம் வேகமாய் அடித்துக்கொண்டது.

● ● ● ●

நட்சத்திரங்கள் மறைந்து, நிலவு ஓர் ஓரமாய் மறையத் தயாராகிக் கொண்டிருந்தது. எங்கோ தூரங்களில் இருந்து ஒரு சில உருவங்கள் காரைநோக்கி வருவது மகேஸ்வரியின் பார்வையில் சிக்கியது. படகுதான் வருகின்றது! பார்வையை கூர்மையாக்கினாள். தன் மகனின் படகா இதுவென்று எதிர்பார்ப்பின் ரேகை படர்ந்த பார்வை அது!

சாமத்திலேயே மகேஸ்வரி வந்துவிட்டாள் கடற்கரைக்கு... இரவெல்லாம் தூக்கமில்லை. கடலில் நிகழ்ந்ததுபோல அதிகம் மழை கரை யில் பெய்யாவிட்டாலும், சாதாரணமாக காற்றும் மழையும் பெய்திருந்தது. நேற்றிலிருந்து மனசும் சரியில்லை கிழக்கு புலரத்தொடங்கிவிட்டது. உப்புமா வெளியிலிருந்து கடலுக்குப்போன படகுகள் கரை சேர்ந்துகொண்டிருந்தன. நட்சத்திரனை மட்டும் காணவில்லை.

கரைசேரும் ஒவ்வொரு படகுக்காரர் களிடமும் விசாரித்துக் கொண்டிருந்தாள் மகேஸ்வரி.

(வலிகள் தொடரும்...)

# காதல் வந்ததும்...?

**இரவும்** பகலும் இனிதாய் மாறிட ஒவ்வொரு விடியலும் பூவாய் மலர்ந்தன.

இருபதை எட்டிடும் இனிய இளம் வயதுடன் அழகுதேவதையாக, பணம் படைத்த பெற்றோருக்குப் பிறந்ததை தன் அதிர்ஷ்டம் என்றே... சிபா நினைத்துக் கொண்டாள். இருந்தாலும் அவள் மனதிலும் ஒரு நெருடல.

"சே... என்னதான் அழகும், பணமும் இருந்தாலும் ஆதில் மாத்திரம் என்னை ஏறெடுத்தும் பார்க்கிறானில்லையே...! அவன் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறானோ..." என்று அலுத்துக் கொண்டாள்.




எம்.ரீ.தஸ்லீமா,
அல்-அமான், தோப்பூர்.


சிபா தனது நண்பிகளுடன் பாடசாலைக் குப்போவதும், வீடு வந்தால் தொலைக்காட்சி பார்ப்பதும்மாய் தன் பொழுதுகளை விரட்டிக் கொண்டிருந்தாள். தனது நண்பிகளைப் போன்று தானும் காதலிக்கவேண்டும். தனது மனசுக்குப் பிடித்தவனை அவர்களிடம் அறிமுகப்படுத்த வேண்டும் என்ற ஆசை ஊற்றெடுத்தது. தன்னுடன் படிக்கும் நண்பர்களிடையே அலசி ஆராய்ந்து பார்த்ததில், ஆதில்தான் அவளுக்குப் பொருத்தமானவனாக இருந்தான். அதனால் சியா ஆதிலைப் பார்க்கும் போதெல்லாம் புன்னகைத்தாள். கண் அசைத்து ஜாடை செய்தாள். தன் விருப்பத்தையும் தெரிவித்தாள். ஆதிலோ சிபாவின் செயல்களைக் கண்டு கொள்ளவேயில்லை.

வழமைபோன்று அன்றும் சிபா ஆதிலை நினைத்தவளாகப் பாடசாலைக்குச் சென்றாள். பாடசாலையில் ஆங்காங்கே மாணவர்கள் கூட்டம் கூட்டமாக நின்று பேசிக்கொண்டிருந்தனர். சிபாவை கண்ட அவளது நண்பிகளும், ஆதிலின் நண்பர்களும் அவளை நோக்கிவந்தனர். ஆதில் மாத்திரம் தனியாக நின்று கொண்டிருந்தான். "சிபா இன்னிக்கு நம்ம ஸ்கூல்ல முக்கியமான மீட்டிங் இருக்காம். பத்து மணிக்கெல்லாம் ஸ்கூல் விட்டிடுவாங்களாம்..."

சிபாவுடன் நண்பிகள் பேசிக் கொண்டிருக்கும் போதே ஆதிலின் நண்பர்களில் ஒருவன் சிபா விடம் கடிதத்தை நீட்டினான்.

"சிபா இந்தாங்க, இதை ஆதில் உங்ககிட்ட கொடுக்கச் சொன்னான்." கடிதத்தைப் பெற்றுக் கொண்ட சிபா மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள். வீடு சென்ற மடலினைப் படிக்கும்வரை அவளுக குப் பொறுமை இருக்கவில்லை. தனியான ஓர இடத்திற்குச் சென்று மடலினைப் படித்தாள்.

**"அன்பே சிபா!**
**நீ என்ன நிலவா...! உன்**
**அழகு வதனங்கள்...**
**ஓராயிரம் கவி சொல்ல...**
**இந்த ஆதவனுக்காகவா**
**– நீ**
**அவதாரம் எடுத்தாய்?**
**காதலி!**
**கவலையை விடு –**
**உன்னைக்**
**கரம்பிடிக்க – நான்**
**காத்திருக்கிறேன்..."**

சிபா ஒன்றுக்குப் பலமுறை அந்த மடலினைப் படித்து முடி[illegible]ருந்தாள். அவள் மனம் குதூகலித் தது. பாடசாலை முடிந்ததும் பச்சைக்கிளியாய் தன் வீடு நோக்கிப் பறந்து சென்றாள். உயிர் கொடுத்த பெற்றோரைவிட இந்தச் சில நிமிடங் களிலேயே உள்ளத்தைக் கொடுத்தவன் உயிராக்கிப் போனான.

மீண்டும் மீண்டும் கடிதத்தைப் படித்து கவிதையை ரசித்தாள். பைத்தியக்காரிபோல பலமுறை சிரித்தாள். கண்ணாடி முன்நின்று முன்னும் பின்னும் தன் அழகினை ரசித்தாள்.

"சிபாவின் செயல்களைக் கண்ட அவளது தாய்க்கு ஒன்றுமே புரியவில்லை." என்னடி வந்ததிலிருந்து நானும் பார்க்கிறேன் ஒரு மாதிரி சிரிக்கிற, அடிக்கடி கண்ணாடியைப் பார்க்கிற..." தாயின் கேள்விக்கு "ஒன்று மில்லம்மா" என்று ஒரே வார்த்தையில் பதில் அளித்தாள்.

"என்னமோ ஒரு எழவும் புரியலை..." என்று சொல்லிவிட்டு சிபாவின் தாய் அவ்விடத்தை விட்டுச் சென்றாள்.

சிபா இந்த இனிய நாளை நினைவேட்டில் குறிப்பதற்காக எழுந்து டயறியைப் புரட்டியவள், அதிலே ஏப்ரல் முதலாம் திகதி இருப்பதைக் கண்டதும் மலைத்துப் போனாள். ஏமாற்றத்தால் அவள் விழிகள் அருவியானது. தனது நண்பர்கள் அதிலும், ஆதில் தன்னை முட்டாளாக்கிவிட்டானே! பாழாய்ப்போன காதலினால் இன்று முட்டாள்கள் தினம் என்பதையே மறந்துவிட்டேனே என்று தன்னைத்தானே நொந்துகொண்டாள்.

## சிரிப்பதற்கு...










# போதை தருவது எது..?

"என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?" மடியில் படுத்திருந்தபடியே கூந்தலினுள் அளைந்து கொண்டிருந்த அவன் விரல்களைப் பிடித்து நிறுத்திவிட்டு லாவண்யா கேட்ட கேள்வி மிக அபத்தமாகப்பட்டது கபிலனுக்கு.

அவள் கைகளிலிருந்து தன் விரல்களை விடுத்துக் கொண்டே மீண்டும் கூந்தலினுள் அளையவிட்டு. அந்த சுகத்தை கண்களில் பிரதிபலித்தபடி "ம்.." என்று முனகினான் கபிலன்.

சட்டென முகத்தை நிமிர்த்தி அவன் தோள்களைக் கட்டிக் கொண்டு "எவ்வளவு பிடிச்சிருக்கு?" என்று விழிகளை விரித்துக் கேட்டாள் லாவண்யா.

எவ்வளவு பெரிய விழிகள் சமுத்திரத்தை இரு துண்டுகளாக்கி வைத்தது மாதிரி! இந்த விழிகளின் அளவு என்று சொல்லலாம். ஆனால் அது அவளுக்கு திருப்தி தராது என்று தோன்றியது. 'அம்மாவை உனக்கு எவ்வளவு பிடிக்கும்?' என்று கேட்டால். இவ்வளவு என்று இரண்டு கை களையும் முதுகுவரை விரித்து காற்றை அளந்து கூறும் குழந்தையைப் போலச் சொல்லிவிட முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

'இந்த பிரபஞ்சத்தின் துகள்கள்தானே நாம். முழுப் பிரபஞ்சத்தின் அளவுக்கும் உன்னைப் பிடித்திருக்கிறது என் பிரியமே!' உவகையோடு அவன் பிடரியைப் பிடித்து இழுத்து நெற்றியில் முத்தமிட்டாள் லாவண்யா.

"தொட்டனைத் தூறும்.." "மணற்கேணி" என்றாள் லாவண்யா. "இல்லை என் காதல்!" என்று அவளை அழுத்தமாகக் கட்டிக் கொண்டான்.
'ம்..' என்று அவள் முனகினாள்.

"தம்பூராவின் ஒற்றை நாதம் அந்தச் சூழலேயே நாதப் பெருவெளியாக நிரப்புமே... அதுபோல உன் ஒற்றை முனகல் என் இதயம் முழுக்க நிரப்புகிறது. நிரம்பியிருக்கும் அந்த நாதம் காதல் அமுதமாய் நரம்புகள் எங்கும் பாய்கிறது..."

சொல்லிக் கொண்டே போனவனின் உதடுகளில் விரலை அழுத்தி "போதும்" என்றாள். கள்ளுண்டவர் போலப் பேசுகிறீர்கள்... நரம்புகளில் ஓடுவது நாதம் போல் தெரியவில்லை.. ஏதோ போதைப்பொருளாக அல்லவா தெரிகிறது! என்று சிரித்தாள்.

"அப்படியா? அப்படித்தானென்றால் உன் குரலிலிருந்துதான் போதை என் நரம்புகளுக்குப் போயிருக்கும் நீ தொட்டால். பேசினால் என் உடலெங்கும் தேன் பாய்ந்ததுபோல் தித்திக்கிறது. மீண்டும் மீண்டும் தேன் கேட்கிறது இதயம்..." என்று அவள் இதழ்களைத் தொட்டான்.

அவள் உடலை நெழித்து அவனோடு பிணைத்துக் கொண்டாள் சிணுங்கியது அவளா. வளையலா. கொலுசா என்று தெரியாத கிறக்கத்திலிருந்தான் கபிலன்.

"வயலினும் புல்லாங்குழலும் தரமுடியாத புத்துணர்ச்சியை உன் வளையலும் கொலுசும் தருகின்றன.." என்று முனகினான்.

அவன் காதல் மொழி களைத் தொடர்ந்து கேட்கும் ஆவலில் அவள் 'ம்' என்றாள். தொடத் தொடக் காதல் உணர்ச்சி பெருகுவதுபோல உன் வளையல்களும் கொலுசுகளும் காதலைப் பெருக்கும் சாதனங்கள் தான் கண்ணே..."

"ம்" என்றாள் அவள் விழிகளிலும் ஆவலைத் தேக்கி. அந்த உன் ஒற்றைச் சொல்லில் வெளிப்படுகிற காதல் மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டுகிற சங்கீத போதையைத் தருகிறது.."

வேறென்ன புலவரே" எகத்தாளமாக.
"கள்ளுண்டு மயங்க மயங்க. போதையேறியோர் மீண்டும் மீண்டும் கள்ளையே விரும்புவது போல. காதலும் வெளிப்பட வெளிப்பட மேலும் மேலும் இனிமை தருகிறது.

"களித்தொறும் கள்ளுண்டால் வேட்டற்றால்
காமம் வெளிப்படுந் தோறும் இனிது."
(குறள்:1145)

## சிந்தியா பதில்

**@சிந்தியா! முள்ளியவளையில் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*மு.தமிழரசி, முள்ளியவளை.*

பாதிக்கப்பட்ட மக்களைத் தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாக்குவதும். அவமானப்படுத்துவதும் தேசத்துரோகிகளின் செயற்பாடாக உள்ளது அச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி வெளிக்காட்ட வேண்டும்.

மிகமிக பாதுகாப்பு நிறைந்த முல்லைத்தீவில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றிருப்பது அங்கு பாதுகாப்பின் பெயரால் நிலைகொண்டிருக்கும் படையினருக்கு சவாலான விடயமாகும்.

குற்றவாளிகள் இனங்காணப்படாவிட்டால் அது பாதுகாப்பு பற்றிப் பேசுபவர்களுக்கு அவமானமாகவே இருக்கும். குற்றவாளிகளைத் தப்பிக்க வைத்து சவாலை ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள் அல்லது குற்றவாளிகளை சட்டத்தின் முன்நிறுத்தி தம்மீதான களங்கத்தை துடைக்கப்போகிறார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**@சிந்தியா! அரசாங்கத்துடன் பேச்சுக்கு வந்தால் 'துரோகிப் பட்டம்' சூட்டிவிடுவார்கள் என சம்பந்தன் பயப்படுவதாக ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளாரே...?**

*எம்.சந்திரன், திருகோணமலை.*

ஜனாதிபதியின் கருத்து எழுந்தமானமானதாக இருக்காது. அப்படியென்றால் தனக்கு இதுவே நேரும் என்று பின் கதவு சந்திப்புக்களில் ஐயா! கூறியிருப்பாரோ...

**@சிந்தியா! வலிகாமம் வடக்கு, கிழக்கில் பொதுமக்களின் காணிகள் சுவீகரிப்பதற்கான சுவரொட்டிகள் காணப்படுகின்றனவே...?**

*சி.மதுராஜா, தெல்லிப்பளை.*

"காணி சுவீகரிப்பு தொடர்பான செய்திகள் மிகப் பிரபலமானவை. காணி சுவீகரிப்பு தொடர்பில் அரசாங்கத்தின் திட்டங்கள் என்ன?. அது நடைமுறைப் படுத்தப்படுகின்ற அணுகுமுறைகள் என்ன? என்பது பற்றி அரசாங்கம் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இல்லாவிட்டால் இறைவனிடம் நிலம் கேட்டவனுக்கு உன்னால் நடக்க முடிந்த தூரங்கள் அத்தனையும் உனக்கே சொந்தம் என்று இறைவன் கூறினாராம் என்பது போல். ஆயுதப் படைகள் நிலைகொண்டிருக்கும் இடமெல்லாம் அரசால் சுவீகரிக்கப்படும் என்றவாறு மக்களிடம் செய்திகள் உருவாக்கம்பெறுவது அரசின் பெயருக்கும் அரசின் நல்ல திட்டங்களை முன்னின்று செயற்படுத்துபவர்களுக்கும் அவப்பெயரையே ஏற்படுத்தும். அது தேர்தல்களிலும் தேவையற்ற செல்வாக்குச் செலுத்தும் என்பதைப் புரிந்துகொள்வது அவசியம்.

**@சிந்தியா! இலங்கையில் அல் -கொய்தா என்னும் தகவல்கள் பரவலாக அடிபடுகின்றதே?**

*எம்.மஷாஹிர். தர்ஹாநகர்.*

தமிழர்கள் எல்லாம் புலிகள் என்று கூறியவர்களைப் போல். முஸ்லிம்கள் எல்லாம் அல் -கொய்தாக்கள் என்று கூறுபவர்களே இருக்கின்றார்கள். இது பரபரப்பான செய்திக்கு நன்றாக இருக்கும்; ஐக்கியமான உறவுக்கு உதவாது.

**@சிந்தியா! நடைபெற்றுக் கொண்டிருக்கும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க செயல்ரீதியாக என்ன செய்யலாம்?**

*அ.சுஜி. மாத்தளை.*

இந்தக் கேள்விக்கு விடை தேடிக்கொண்டு பலர் தலையை உடைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

வெறும் சட்டங்கள் மட்டும் பாதுகாப்பைத் தந்துவிடாது என்பதையே நடக்கின்ற நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.

தமது பாதுகாப்பு குறித்து என்னவெல்லாம் செய்துகொள்ள வேண்டும் என்று பெண்கள் முதலில் ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும்.

**@சிந்தியா! மாத்தளை புதைகுழியின் மர்மம் தான் என்ன?**

*மா.சுஜீவன், பூவரசங்குளம்.*

இலங்கையில் தோண்டினால் மாணிக்கம் கிடைக்கும் என்ற வரலாறு பெருமையானது. இப்போது தோண்டினால் எலும்புக் கூடுகள் என்பது தலைகுனிவானது. அந்த எலும்புக் கூடுகள் ஜே.வி.பி யினருடையது என்ற சந்தேகங்கள் தற்போது வலுப்பெறுகின்றன.

பூதம் இனிமேல்தான் வெளிக்கிளம்பும். இப்படி ஒரு பூதம் எப்போதுமே வெளிக்கிளம்பிவிடக்கூடாது என்பதற்காகவே. வன்னி நிலமெங்கும் தேடித்தேடி எரிக்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டுக்கள் முன்னர் முன்வைக்கப்பட்டதை இப்போது சிந்திக்கின்றேன்.

**@சிந்தியா! செங்கலடியில் இடம்பெற்ற காதலுக்காக தனது பெற்றோரைக் கொலை செய்யத்தூண்டிய மாணவி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*ஜே.பிரஷவி, மட்டக்களப்பு.*

அது வயதும். கூடாத கூட்டும் ஏற்படுத்திய அபத்தம். பிள்ளைகளைப் பற்றி அவதானமாக இல்லாவிட்டால் இவ்வாறான ஆபத்துக்கள் வீட்டுக்குள்ளேயே நடந்து விடும்.

பெற்றோருக்கும், வயதுக்குவந்த பிள்ளைகளுக்கும் கொடுக்கப்பட்ட எச்சரிக்கை செய்தி அது.

**@சிந்தியா! எப்போதும் சுயநலமே வாழ்க்கை என்று சிந்திப்பவர்கள் பற்றி...?**

*சி.மல்லிகா, தெமட்டகொட.*

வாழத் தெரிந்தவர்கள். பொதுநலத்துக்குள்ளும் சுயநலம் இருப்பது சகஜம். பிறருக்குத் தொல்லை தராத சுயநலம் என்பது கவலைக்குரியதல்ல.


ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

### மலையாள மாந்திரிக சக்தி

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508



ஜோசெப் கிருஷ்ணா

# விளையாட்டு





# பணவெள்ளம்

**சர்வதேச** விளையாட்டு வீர, வீராங்கனைகளின் வருமானம் என்பது கோடிக் கணக்கிலானது என்பது ஒன்றும் இரகசியமல்ல. அதிலும் மிகக்கூடிய வருமானம் பெறுபவர்கள் உதைபந்தாட்ட வீரர்களே என்பதும் தெரிந்த விடயம். இருந்தும் இவர்களுக்குப் போட்டியாக, சமதையாக வருமானம் பெறும் சில டெனிஸ் வீர, வீராங்கனைகளும் உள்ளனர். அவர்களுள் முதன்மை பெறும் ஐந்துபேர்: றொஜர்பெடரர், ரபாயெல் நடால், நொவாக் ஜோகோவிச், செரினா வில்லியம்ஸ், மரியா ஷரபோவா, 17 தடவைகள் கிராண்ட் ஸ்லாம் வென்ற பெடரர் இதுவரையில் 75 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பரிசுப் பணமாக மட்டும் பெற்றிருக்கிறார்.

கண்காட்சிப் போட்டிகளில் ஆடும்போது இவர் பெற்றது 1 மில்லியன் அமெரிக்க டொலர்கள். மேலும் விளம்பரங்களின் ஊடாக இவர் சம்பாதிக்கும் பணம் 30



ஆனாலும் விளையாட்டைவிட, விளம்பரங்களின் மூலம் இவர் சம்பாதித்த தொகை மிக அதிகம். அதற்குக் காரணம் இவரது வியாபாரத்தின் மீதான அறிவும், இவரது கவர்ச்சியும் ஆகும்.

2010 இல் நைக் நிறுவனத்துடன் இவர் மேற்கொண்ட எட்டு வருட ஒப்பந்தத்தில் பெறுமதி 70 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

இன்னொருவர் செரினா வில்லியம்ஸ். பரிசு மழையாக இவர் பெற்ற தொகை 43 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இவரது உபாதைகள் குறுக்கிடாமல் இருந்திருந்தால் இந்தத் தொகை இன்னும் அதிகமாக இருந்திருக்கும். 2004 நைக் நிறுவனத்துடன் 40 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஒப்பந்தம் செய்தவர் அநாரெஸ் என்ற பெயர்கொண்ட இவரது சொந்த உடை நிறுவனம்மூலம் வரும் பணம் இன்னும் சில மில்லியன்கள். அதோடு அமெரிக்கன் புட்போல் கழகங்களுள் ஒன்றான மியாமி டொல்பின் அணியின் உரிமையாளர்களில் இவரும் ஒருவர்.

இத்தகைய மிகப் பெருந்தொகைகள், முற்றாகவே இவர்களிடம் சேரும் என்பதும் இல்லை. அந்தந்த அரசுகளின் வரிக் கொள்கைக்கு ஏற்ப குறிப்பிட்ட பெருந் தொகை வரியாகக் கட்டப்படுவதும் கணக்கில் எடுத்தே, இவர்களின் வருமானத்தைப் பார்க்க வேண்டும். அப்படிக் கழித்தாலும் வருமானம் கோடிக்கணக்குத்தான். மில்லியன், டொலர் என்ற வார்த்தைப் பிரயோகங்கள் இவர்களின் வருமான வியப்பை உய்த்துணர சிலவேளை சிறுதடையாக இருக்கும். மில்லியன் என்பது பத்து இலட்சத்தையும், ஒரு டொலர் என்பது நூற்றுப்பத்து ரூபாய் என்பதையும் கணக்கிலெடுத்துக் கணித்துப் பார்த்தால் வியப்பில் விழிபிதுங்கும் எனலாம்.

# அர்ஜூனன் வில்லு



**லேட்டா** வந்தாலும் லேட்டஸ்டா வருவது என்று ரஜினியின் பஞ்ச் டயலொக் ஒன்று உண்டு. அதற்கு மெத்தவும் பொருத்தமானவர் இந்திய கிரிக்கெட் வீரர் சிக்கர் தவான். இவரை ஒரே இரவு கிரிக்கெட் உலகையே திரும்பிப் பார்க்க வைத்தது. அதுதான் மொஹாலியில் அவுஸ்திரேலியாவிற்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சிக்கர் தவான் அடித்த அதிரடி சென்சுரி. அந்தச் செஞ்சுரியை அடித்த வேகம். இது இவரது முதல் டெஸ்ட் போட்டிதானா என்ற ஆச்சரியத்தைக் கிளப்பிவிட்டிருந்தது. டெஸ்ட் அறிமுகத்தில் வேகமாக, ஒரு நாள் போட்டிப் பாணியில் அடிக்கப்பட்ட செஞ்சுரியாக இது கருதப்படுகிறது. இளம் சூறாவளியொன்று ஆஸ்திரேலியாவைச் துவம்சம் செய்துவிட்டதென்று ஆஸ்திரேலியப் பத்திரிகைகள் வர்ணித்திருந்தன.

இருபது, இருபத்தைந்து வயதுக்குள் இந்திய அணிக்குள் வீரர்கள் நுழையும் காலத்தில், இவரால் இருபத்தேழு வயதில் தான் சர்வதேசக் கிரிக்கெட்டில் அறிமுகமாக முடிந்திருக்கிறது. ஒரு குறிப்பில் 2004 இல் நடைபெற்ற பத்தொன்பது வயதுக்குட்பட்ட உலகக் கோப்பையில் சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்டவர் என்று கூறப்படுகிறது. அதே தொடரில் தவனுக்கு அடுத்து ரண் குவித்தவர் அலிஸ்ரர் குக். இன்று அவர் எண்பத்தெட்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 24 சென்சுரிகளும் பெற்றுவிட்டார். அதே சுற்றுப் போட்டியில் விளையாடியவர்கள்தான் சுரேஸ் ரெய்னா, றொபின் உதப்பா, ஆர்.பி.சிங், தினேஸ் கார்த்திக். ஆனால் சிக்கர் தவான் நீண்டகாலம் பொறுமை காக்க வேண்டி ஏற்பட்டது. 2010 இல் இந்திய ஒரு நாள் அணியில் இடம்பெற்றார்.

ஆனால் சோபிக்க முடியவில்லை. தற்போது தவானின் பயிற்சியாளர் இவர் பற்றி, மிகவும் நொந்துபோய் இருந்த இந்த இளைஞன் கிடைத்த ஒரேயொரு வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டான் என்கிறார்.

தற்போது முரளி விஜயும் நன்றாகவே செய்வதால் ஷேவாக், கம்பீர் இருவருக்கும் பதிலீடு கிடைத்துவிட்டது என்று நம்பப்படுகிறது. இருந்தாலும் இது பற்றித் தவன் கூறுகையில், ஷேவாக்கும் கம்பீரும் இந்தியாவுக்காக நிறைய சாதித்தவர்கள். நானும் முரளி விஜயும் இந்தச் சாதனையை ஒரு நாளில் தொட்டுவிட முடியாது என்கிறார்.

தற்போது பயிற்சிகளுக்கு வரும்போது 1000CC மோட்டார் சைக்கிளில் வருகிறார். முன்னமேயே இதனை இவர் வைத்திருக்கிறாராம். இதன் விலை இந்திய ரூபாய்கள் இருபத்தைந்து இலட்சங்களாம். இந்தப் பணத்திற்கு பென்ஸ் காரே வாங்கி இருக்கலாமே என்றால், விரைவில் அதையும் வாங்குவேன் என்கிறாராம் இவர்.

தமிழக சஞ்சிகையொன்று இவர் பற்றி இப்படி எழுதியிருக்கிறது.

# சறுக்கல்கள்





தென்ஆபிரிக்க கிரிக்கெட் அணித் தலைவர் கிரேம் ஸ்மித் இப்பொழுது இங்கிலாந்தின் சரே அணியின் தலைவர். முதன் முதலாக அணித் தலைவராகக் களம் இறங்கிய இவர் இரண்டு ரண்கள் மட்டுமே எடுத்து அவுட் ஆகியது இவருக்கே அதிர்ச்சியாகி விட்டதாம். இதேவேளை இந்த ஆட்டத்தில் எதிரணியாக இருந்த சமர்செட் அணியின் தென் ஆபிரிக்க வீரர் அல்வீரோ பீற்றர்சன் 167 ஓட்டங்கள் குவித்தது இவருக்கு இன்னமும் வெறுப்பாகிவிட்டதாம்.

இன்னொருபுறம் பாகிஸ்தானில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இருபதுக்கு இருபது சுற்றுப்போட்டியில் ஒழுக்க மேம்பாடு தொடர்பில் மூன்று பாகிஸ்தான் சர்வதேச வீரர்கள் இச்சுற்றுப் போட்டியில் இருந்து தடைசெய்யப்பட்டுள்ளார்கள். பவாட் அலாம், காலிட் லத்தீப், சொய்ல்கான் எனும் மூவரே இவர்கள்.

இவர்கள் சர்வதேசப் போட்டிகளில் களம் இறங்கியவர்கள். நிறைய எதிர்காலம் உடையவர்கள். ஆனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஒழுக்கம் என்பதற்கு கூடிய முக்கியத்துவம் கொடுக்கின்றது. காரணம் முன்னதாக பல வீரர்களின் முறையற்ற செயற்பாடுகளால் பாகிஸ்தான் கிரிக்கெட்டின் பெயர் கெட்டமையாக இருக்கலாம்.

குறிப்பாக சல்மான்பட், மொஹமட் ஆசித், மொஹமட் ஆமிர் தொடர்பான ஆட்ட நிர்ணய அவமானம் பாகிஸ்தானை மிக்க் கடுமையான பாறைக்குள் தள்ளியுள்ளது எனலாம். அதுவே நல்லது.



# யாரும் இல்லை



**மைக் டென்னிஸ்**, 1969 –75 காலத்தில் இவர் விளையாடிய 28 டெஸ்ட் போட்டிகளில் 19 இல் தலைமை வகித்தவர். இங்கிலாந்து அணிக்குத் தலைமை தாங்கிய ஒரேயொரு ஸ்கொட்லாந்து வாசி என்ற பெயர் பெற்றவர். இவர் தனது 72 வயதில் இப்போது காலமாகிவிட்டார்.

இவரது அஞ்சலிக் குறிப்பொன்றில் பல விடயங்கள் எழுதப்பட்டிருந்தன. அதில் ஒன்று இவர் ஆஷஸ் தொடருக்காக தலைமையேற்று அவுஸ்திரேலியா சென்றபோது (1974 –75) முதல் ஆறு இனிஸ்சுகளிலும் அவர் பெற்ற மொத்த ஓட்டங்கள் 65.

எனவே அடுத்த டெஸ்ட் போட்டிக்குத் தலைமை தாங்காமல் தானாகவே விலகிக் கொண்டாராம். பின்னர் மெல்பேர்ன் டெஸ்ட் போட்டியில் தலைமை ஏற்று 188 ஓட்டங்கள் குவித்து, அந்தக் கால கட்டத்தில் இங்கிலாந்து அணித் தலைவர் ஒருவரால் பெறப்பட்ட அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை என்ற சாதனையையும் பதிவுசெய்தாராம்.

இவர் பற்றிய உயர்வான நிறையப் பதிவுகள் இன்னும் இருக்கின்றன. அதுசரி இப்போதுள்ள வர்த்தகமய கிரிக்கெட்டில் மைக் டென்னிஸ் போல செயற்படும் யாரும் இருப்பார்களா? சந்தேகம்தான்.

# காதிலை பூ கந்தசாமி




**வணக்கமுங்கோ! நீண்ட நாளைக்குப் பிறகு ஒரு பாட்டொண்டை மீண்டும் உங்கள் மத்தியில பாடுகின்ற நிலைமை தோன்றியிருக்கின்றதுங்கோ.**

"ஒண்ணுமே புரியலே உலகத்திலே மர்மமா இருக்குது" எண்ட பாட்டுத் தானுங்கோ. ஏன் உந்தப் பாட்டை நினைவுபடுத்திறேன் எண்டாலுங்கோ, இலங்கையில சிறுபான்மை இனங்களை அழிக்கும் நடவடிக்கைகள் இன்னும் தொடருது எண்டு குற்றச்சாட்டுக்கள் சொல்லப்படுகுதுங்கோ.

அதுகளைப் பொய்யாக்கிப் போடவேணுமெண்டு சிலபேர் முயற்சி செய்துகொண்டிருக்கேக்க, இன்னும் சிலபேர் அதுகளை உண்மையாகிப் போடுறதில எவ்வளவு கரிசனையா திட்டம் போடினம் தெரியுமோ.

காணி அபகரிப்பு, சிங்களக் குடியேற்றங்கள் என்றெல்லாம் ஒரு பக்கம் பிரச்சனைகள் போய்க் கொண்டிருக்க, மறுபக்கத்தில தமிழ் மக்கள் பிள்ளை பெற்றுக் கொள்ளாதீங்கோ, பொருளாதார பிரச்சினை மோசமாகிக் கொண்டிருக்குதுங்கோ, கருக்கலைப்புச் செய்து கொள்ளுங்கோ எண்டு அண்ட கிரவுண்டில ஒரு கருவறுப்புத் திட்டம் முன்னெடுக்கப்படுகுதுங்கோ.

மலையகத்தில கருக்கலைப்பு சாதாரணமாகவே நடைபெற்று வருகுதுங்கோ. வீடுகளுக்குப் போகும் சில சுகாதார பணியாளர்களும், சில அதிகாரிகளும் மலையக மக்கள் அதிகமாக பிள்ளை பெத்துக்கொள்ளாதீங்கோ. பிறகு கஷ்டப்படுவியள் எண்டெல்லாம் கூறி கருக்கலைப்பை ஊக்கப்படுத்தினமுங்கோ.

மலையகத்தில உந்தத் திட்டம் வெற்றிகரமாகியதைத் தொடர்ந்து இப்போது கிழக்கு மாகாணத்தில, குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில கிராமங்களை நோக்கி உந்தப் பிள்ளை பெத்துக் கொள்ளாதீங்கோ, பெத்துக் கொண்டால் பிற்காலத்தில் ரொம்பக் கஷ்டப்படுவியள் எண்டெல்லாம் வீடுவீடாக சொல்லித் திரியினமுங்கோ.

வறுமை வரப்போகுது சாப்பாட்டுக்கே வழியிருக்காது. பிறகு குடும்பத்தோடை சாகவேண்டிய நிலைமைதான் ஏற்படும் என்று சொல்லினமாமுங்கோ. அப்படி ஒரு அக்கறை இருக்கிறவை தங்களைச் சார்ந்தவர்களையெல்லோ எச்சரிக்கை செய்யவேணும்.

மறுபக்கத்தில என்ன நடக்குது ரெண்டு பிள்ளை பெற்றால் சலுகை வழங்கப்படும். அஞ்சு பிள்ளை பெற்றால் பணமுடிச்சு வழங்கப்படும், கட்டாயம் ஒரு வீடு வழங்கப்படும் என்றெல்லாம் பட்ஜெட்டிலேயே பணம் ஒதுக்கப்படுகிறது. ஒரு பக்கம் இருக்கேக்க தமிழ் மக்களை மட்டும் பிள்ளை பெத்துக் கொள்ளாதீங்கோ எண்டு சொல்லுறதில என்னங்கோ நியாயம் இருக்கமுடியும் எண்டு வாத்தியார் கேக்கிறது நியாயம்தானுங்கோ.

முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெறுகின்ற சம்பவங்கள் தொடர்பில் யார் இருக்கினம் எண்டது இண்டைக்கு பரகசியமாயிட்டுதுங்கோ. அதைவிடுங்கோ, அதற்கான காரணங்கள் என்ன எண்டதை ஆராயும்போது அதிர்ச்சி தரக்கூடிய ஒரு தகவலும் இருக்குதுங்கோ.

அதாவது முஸ்லிம்கள் ஒண்டுக்கு மேற்பட்ட திருமணம் செய்யலாம் எண்ட நடைமுறை இருக்கிறதாலை அவர்கள் வாழுகின்ற பகுதிகளிலை வெகு சீக்கரமாகவே சனத்தொகையில் வளர்ந்துவிடுகிறார்கள். இது தொடர்ந்தால் எதிர்காலத்தில பெரும்பான்மை இனத்துக்கே சவாலாக நிலைமை மாறிவிடும் என்றெல்லாம் அதிதீவிரவாதிகள் அதீவிரமாக சிந்திக்கினமெண்டும் ஒரு செய்தி சொல்லுதுங்கோ.

உந்த அதிதீவிரம் தன்ர தலையிலேயே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளவும் போகுதுங்கோ. அதாகப்பபட்டது என்ன தெரியுமோ, இலங்கையில அல்கொய்தா, தலிபான் தீவிரவாதிகளின் அமைப்புக்கள் இயங்குகின்றன என்று அமெரிக்கா சொன்னதில உண்மை இருக்குது எண்டதையும் ஏற்றுக் கொண்டிருக்கினமுங்கோ. உப்பி ஏற்றுக் கொண்டது அமெரிக்கா மேலான விருப்பம் இல்லையுங்கோ, அப்படியான வழியிலையும் முஸ்லிம்களுக்கு ஒரு தலையிடியைக் கொடுக்கலாம் எண்ட தீவிரத் திட்டம்தானுங்கோ.

எனக்கெண்டாலுங்கோ உதுகள் ஒண்டும் நாட்டுக்கு நல்லது மாதிரித் தெரியவில்லையுங்கோ. "அவலை நினைச்சு உரலை இடிக்கப் போகினம் எண்ட கதையாகப் போகுதோ எண்டுதானுங்கோ எண்ணத் தோண்டுதுங்கோவ்.

"சொல்லுறவன் சொன்னாலும் கேக்கிறவனுக்கு புத்தி எங்க போயிட்டுது" எண்டதை மகாஜனங்கள் சிந்திப்பினமோ?

**யாவும் கலப்படமற்ற பொய்**

1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000




**இதை** அவர், அந்தப் பெண்ணிடமே கூறி இருக்கிறார். இரவில் தனியே வீட்டுக்குப் போக நடுக்கமாம் இருவருக்கு. தன் பயந்தாங்குளித்தனம் அலுவலகத்திலுள்ள ஆணகளுக்குத் தெரிந்தால் வெட்கக்கேடு என்று நினைத்து தன் துணையாசிரியரான இப்பெண்ணின் துணையை நாடுவாராம். தினமும் வீடு திரும்பும்போது தனக்குத் துணையாக அவள் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவாராம். அவர் விருப்பப்படியே அவளும், அவருடன் சென்று அவர் வீட்டுவாசலில் அவரை விட்டுத் தனியாகத் தன் வீடு திரும்புவாளாம்! இது வெறும் கட்டுக் கதையல்ல. அட்டூழியம் செய்துமக்களின் வெறுப்பைத் தேடிக்கொண்ட முசோலினியின் பெயருக்கு "மேலும் களங்கம் விளைவிக்கப் புனையப்பட்ட கற்பனையல்ல. இது அந்த உதவியாசிரியையின் பெயர் அங்கலிகா பாலபானோஃப் என்பது. கௌரவமிக்க பெண்மணி. தன்னை சீஸர் என்று கூறிக் கொண்ட முசோலினியை தினமும் இருட்டில் அவருக்குத் துணையாகச் சென்றதைக் குறிப்பிட்டுத் தம் புத்தகத்தில் எழுதி இருக்கிறார். சோஷலிசத் தலைவர்களுள் மிகவும் மதிக்கப்பட்ட, புகழ்பெற்ற பெண் மணி இவர்.

இத்தாலியின் சர்வாதிகாரியாக முசோலினி ஆன பிறகு, அவரைக் கொல்ல ஏழு முறை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதனால் உதறல் கண்ட அஞ்சாநெஞ்சரான முசோலினி, தம் வீட்டிலும் அலுவலகத்திலும் ஒவ்வொரு அடியையும் பாதுகாக்க பதினைந்தாயிரம் விசேஷ தனிப்படையை உருவாக்கி, காவல் காக்கும்படி ஏற்பாடு செய்துகொண்டார். சர்வாதிகாரியும் தன்னை சீஸர் என்று கூறிக்கொண்டவருமான முசோலினி, குடல் புண்ணினால் (அல்சர்) பல வருடங்கள் அவதிப்பட்டவர். இந்நோய் தன் உயிருக்கு அபாயம் என்ற பீதி, கவலையினால் எற்பட்டதுதான்.

(தொடரும்...)

# இந்தவாரம் உங்கள் பலன்

(25.04.2013 தொடக்கம் 01.05.2013 வரை)

## மேடம்

தொலை தூரப் பயணங்களில் எதிர் பார்த்த வெற்றிகள் கிடைக்கும். மாணவர்கள், அரசியல்வாதிகள், ஆலயப் பணியாளர்கள், மருந்துப் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வோர்கள், ஜவுளி வியாபாரிகள் ஆகியோர்கள் நற்பலன் அடைவார்கள். பழைய கடன்கள் அடைபடும். உறவினர்களிடம் இருந்து தூரத்து நற்செய்திகளை கேட்பீர்கள். திடீர் அதிர்ஷ்டம் ஆகிய ரேஸ் லாட்டரி வழியாகத் தனவரவு உண்டாகும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். வங்கிகளில் இருந்து வரவேண்டிய பணம் மற்றும் வங்கி கடன் உதவிகள் கிடைக்கும்.

## இடபம்

பூமி நிலம் சம்பந்தமாக வெகுகாலமாகத் தடைப்பட்டு வந்த காரியங்களில் நல்ல முடிவுகள் கிடைக்கும். விவசாயிகளுக்கு நல்ல இலாபம் பெறுவார்கள். மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி அடைவர். வெளிநாடு சென்று வருதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். அடுத்தவர்களின் விசயத்தில் தலையிட்டு மனநிம்மதியை இழக்கவேண்டாம். காதல் விசயங்களில் எதிர்பார்த்திருந்த நல்ல செய்திகள் கிடைக்கக் கூடிய காலமாகும். காதல் சம்பந்தமான விசயங்களில் எச்சரிக்கை தேவை. காணாமற்போன பொருட்கள் காவல்துறையினர்களின் உதவிகளால் திரும்பக் கிடைக்கும். ஒரு சிலருக்கு புதிய வீடு மற்றும் வாகனம் வாங்க வாய்ப்பு உள்ளது.

## மிதுனம்

மாணவர்கள் கல்வியில் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது. சூதாட்டத்தால் வீண் பொருள்விரயம் ஏற்படக்கூடும். காதல் விசயங்களில் வெற்றி கிடைக்கும். பெண்களால் வடதிசையில் இருந்து சில நற்செய்திகள் வந்துசேரும். ஒரு சிலர் இருப்பிடம்விட்டு வெளியூர் செல்ல வாய்ப்பு உள்ளது. புதிய கடன்களை வாங்கிப் பழைய கடன்களை அடைப்பதற்காக வெகுமுயற்சிகளை செய்து கடனை அடைப்பீர்கள். புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதில் கால தாமதம் ஏற்படலாம். சகோதர சகோதரிகளின் தடைப்பட்ட சுப காரியங்கள் நடைபெறும்.

## கடகம்

கணவன், மனைவி உறவுகள் சுமாராக காணப்படும். சகோதர் சகோதரிகளின் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளில் இருந்துவந்த தடைகள் நீங்கித் திருமணம் நடக்க வாய்ப்பு உள்ளது. பொருளாதாரம் நெருக்கடி ஏற்படுத்தினாலும் சமாளித்துகொள்வீர்கள். தேவையற்ற விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்க வேண்டாம். நீண்ட காலமாக வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த கடன் உதவிகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ள காலமாகும். விபரீதமான எண்ணங்களை விட்டுக் காரியத்தில் கவனமாய் இருங்கள். சகோதரர்களால் பொருள்வரவு உண்டாகும்.

## சிங்கம்

வீடுகளில் பணம் பொருட்கள் திருட்டுப்போக இருப்பதால் எச்சரிக்கை தேவை. பங்காளிகளாலும், நண்பர்களாலும் சிற்சில தொல்லைகள் ஏற்படலாம். ஆலயங்களைத் திருத்தி அமைப்பதற்கான பணிகளில் ஈடுபட்டு நற்பெயர் எடுப்பீர்கள். வாகனங்கள் மற்றும் வீடுகளைப் பழுது பார்ப்பதன் மூலமாகப் பொருட்செலவுகள் ஏற்படலாம். மனைவியின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவ செலவுகள் வந்துசேரும். விருந்தினர் வரவால் மனமகிழ்ச்சி அடைவீர்கள். அடுத்தவர் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மனமகிழ்ச்சியை அடைவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேர வாய்ப்பு உள்ளது.

## கன்னி

நெடுநாட்களாக வராத கடன் கொடுத்த பணம் திரும்ப கைவந்துசேரும். தொலைதூரப் பயணங்கள் மூலம் எதிர்பார்த்த காரியங்கள் கை கூடும். தெய்வத் தொண்டுகளைப் பிரியமுடன் செய்வீர்கள். அரசு சம்பந்தமாகிய வழக்கு விசயங்களில் சாதகமான தீர்ப்புகள் கிடைக்கச் சற்று காலதாமதம் ஆகலாம். கணவன், மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் குறையும். வீடுகளைத் திருத்திக் கட்ட எண்ணுவீர்கள். பழைய வாகனங்களை விற்றுப் புதிய வாகனங்களை வாங்குவீர்கள். தாய்க்கு இருந்துவந்த நோய்கள் குறைந்து காணப்படும். உறவினர்கள் மற்றும் நண்பர்களால் எதிர்பாராத ஆதாயங்களும் மனமகிழ்ச்சியும் உண்டாகும்.

## துலாம்

புதிய வீடு நிலம் வாங்குவது சம்பந்தமான முயற்சிகளைச் சற்றுக் கால தாமதமாகச் செய்வது நல்லது. முன் கோபத்தை தவிர்ப்பது நல்லதாகும். உறவினர்களின் வரவால் பொருட்செலவுகள் உண்டாகும். தாயின் உடல்நிலை பாதிப்பால் மருத்துவச் செலவுகள் உண்டு. உற்றார் உறவினர்களால் ஆதாயம் இல்லை. தந்தையால் பொருள்வரவு உண்டு. குலதெய்வ வழிபாட்டிற்காக வெளியூர் செல்லுவீர்கள். தந்தை, மகன் உறவில் சிற்சில பிரச்சினைகள் வரலாம். பழைய இரும்பு, பழைய பேப்பர் மற்றும் பிளாஷ்டிக் சம்பந்தமான பொருட்களின் வியாபாரிகள், ஆகியோர்கள் நல்ல இலாபம் பெறுவார்கள். காதலர்களுக்கு நல்ல செய்தி வந்துசேரும்.

## விருச்சிகம்

பிறரிடம் பணம் கொடுத்து ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். விருந்தினர் வரவால் மனமகிழ்ச்சி உண்டாகும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். பெண்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும். உடம்பில் நரம்பு, எலும்பு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். விவசாயம் செய்வோர்கள் விவசாயத்தில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. அரசியல்வாதிகளால் ஆதாயம் இருக்காது. புதிய நண்பர்கள் சேர்க்கையால் மனநிம்மதி அடைவீர்கள். பிள்ளைகளின் மருத்துவச் செலவுகளுக்காக பொருட்செலவுகள் உண்டாகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாக பேசிப் பழகுதல் நல்லது. பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## தனுசு

நண்பர்களால் எதிர்பாராத பொருட்செலவுகள் உண்டாகும். மாமன் வழியின் மூலம் சில நன்மைகளை அடைவார்கள். பொதுநலத் தொண்டுகளில் பிரியமுடன் ஈடுபடுவீர்கள். குலதெய்வ வழிபாடு செய்து வருவது நல்லது. செய்தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படக்கூடும். புதிய ஆடை அணிகலன்கள், ஆடம்பர அலங்கார பொருட்களை வாங்குவீர்கள். பிறருக்காக உழைப்பதில் மனம் மகிழ்ச்சி அடைவீர்கள். தென்திசையில் இருந்து பெண்களால் எதிர்பாராத நல்ல செய்திகள் வந்துசேரும். தந்தையின் உடல் நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச் செலவுகள் உண்டாகும்.

## மகரம்

உடம்பில் வாதம் வாயு மற்றும் எலும்பு சம்பந்தமான உபாதைகள் வந்து போகும். சொத்துக்கள் சம்பந்தமான விசயங்களில் எதிர்பார்த்த நல்ல முடிவுகள் கிடைக்கச் இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். சகோதர சகோதரிகளுடன் காரணமில்லாத சச்சரவுகள் வந்துபோகும். கணவன், மனைவி உறவுகளில் இருந்துவந்த மனக்கசப்புகள் நீங்கி உறவுகள் பலப்படும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் விபரீதங்களைச் சந்திக்க வாய்ப்பு உள்ளதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவும் கண்களில் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். விவசாயம் செய்வோர்கள் மிகுந்த கவனமுடன் இருக்கவும்.

## கும்பம்

உடம்பில் வாயு மற்றும் வயிறு சம்பந்தமாகிய தொல்லைகள் வந்து போகும். காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் இருக்கவும். புதிய வீடு மற்றும் நிலங்கள் வாங்குவீர்கள். அரசியல்வாதிகளால் ஆதாயம் உண்டு. மூத்த சகோதரரால் பொருட்செலவுகள் ஏற்படும். கணவன், மனைவி உறவுகள், சுமாராகக் காணப்படும். உடம்பில் மூலம் மற்றும் உஷ்ண சம்பந்தமான பீடைகள் வந்துதீரும். புதிய நண்பர்களைச் சேர்ப்பதைத் தவிர்க்கவும். நீண்டதூரப் பயணங்களால் மனநிம்மதி ஏற்படாது. சுயதொழில் செய்வதற்கான முயற்சிகளில் சற்றுக் கால தாமதம் ஏற்படலாம்.

## மீனம்

பிள்ளைகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் பணவரவு உண்டு. நீண்டதூரப் பயணங்களைத் தவிர்க்கவும். வங்கிகள்மூலம் எதிர்பார்த்த கடன் உதவிகள் கிடைக்கச் சற்றுக் கால தாமதம் ஆகலாம். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தனது தாய்நாட்டிற்குச் சென்றுவர வாய்ப்புகள் உள்ளன. திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண காரியம் கைகூடும். நீண்ட காலமாகப் பிரச்சினைகளில் இருந்து வந்த குடும்பச் சொத்துக்கள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் சிறந்துவிளங்குவர். புதிய வீடு நிலம், வாகனம் போன்றவற்றை மற்றவர்களின் உதவிகளோடு வாங்குவீர்கள்.

# இரட்டை முகம்





உகண்டா நாட்டைச் சேர்ந்த ரிரைனி என்னும் 9 வயதுச் சிறுமியையே நீங்கள் முதலாவது படத்தில் பார்க்கிறீர்கள். இவருக்கு முகத்தில் மற்றுமொரு முகம் இருக்கிறது. இரட்டை முகம் கொண்ட பெண் இவரா என்று நினைக்கத் தோன்றும். ஆனால் இது ஒரு கட்டி என்கிறார்கள் பிரித்தானிய அறுவைச் சிகிச்சை நிபுணர்கள். உகண்டா நாட்டில் இருந்த இப்பெண்ணின் நிலையை கண்டு பொறுக்கமுடியாத ஒரு தொண்டு நிறுவனம் இவருக்கு உதவிகளைப் புரிய முன்வந்தது. இருப்பினும் ஆபத்தான இந்த சத்திரசிகிச்சையைச் செய்ய எவரும் முன்வரவில்லை. இதேவேளை பிரித்தானியாவில் உள்ள சத்திரசிகிச்சை நிபுணர்கள் தாமாகவே முன்வந்து இதனைச் செய்து சாதனை படைத்துள்ளார்கள். இந்த 9 வயது சிறுமி இதுவரை காலமும் அனுபவித்துவந்த கொடுமைகள் பல. இவர் ஒரு சாத்தான் என்று மக்கள் கூறினார்கள். பள்ளி செல்லக்கூடாது என்றார்கள், வேறு பிள்ளைகள் இவருடன் சேர்ந்து விளையாடுவதே இல்லை. இந்நிலை அனைத்தும் தற்போது மாறியுள்ளது. நன்றி பிரித்தானிய அறுவைச் சிகிச்சை நிபுணர்களுக்கு!

---

# அழகின் அழகோ!

ஜப்பானின் Tochigi எனும் இடத்தில் Ashikaga எனும் பூங்கா உள்ளது. இங்கேதான் உலகின் மிகவும் அழகான விஸ்டீரியா மரம் அமைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. மிகப் பழமையானதும் மிக விசாலமான-துமாக உள்ள இம்மரம் இப்பூங்காவின் முக்கிய ஈர்ப்பாக உள்ளது. சுமார் 143 வயதான இந்த விஸ்டீரியா மரத்தின் கிளைகள் விட்டங்களின் துணையோடு நிற்பதால் ஓர் மலர்க்குடை போல் காட்சி தருகிறது. மே முதல் ஏப்ரல் வரையிலான நடுப்பகுதியில் இப்பூங்காவிற்கு வருகை தந்தால் இந்த விஸ்டீரியா மரத்தின் முழு அழகையும் ரசிக்கலாம் என்கிறார்கள்.



# நகரும் நகரம்....

பெரு நாட்டில் உள்ள ஏரியில் யூரோ மக்கள் மிதக்கும் வீடுகளை உருவாக்கியுள்ளதால் இத்தீவு மிதக்கும் தீவுகள் என அழைக்கின்றனர். திதிகாக்கா என்றழைக்கப்படும் இவ்வேரி வணிக நடவடிக்கைகளுக்காக உபயோகிக்கப்படுகின்றது. தரைமட்டத்திலிருந்து அதிஉயர்ந்த இடத்தில் அமைந்திருக்கிற இவ்வேரி 3811 மீற்றர் உயரத்தில் உள்ளது.

இங்கே வாழும் மக்கள் இவ்வேரியின் அருகே உள்ள மர இழைகளால் தமது வீடுகளை அமைத்து வாழ்கின்றனர். இத்தகைய மரநார்களை டொட்டாரா என்றழைக்கப்படும். இவை நீரில் மிதந்து கொண்டிருக்கும்போது இவை நகர்ந்து போகாமல் நிலத்துடன் தொடர்புடையவாறு பெரிய தடிகளால் இணைத்து கட்டப்பட்டிருக்கும்.

இவ் ஏரியில் இத்தகைய மிதக்கும் வீடுகள் 42 வரை காணப்படுகின்றன. இவை மக்களின் கைவண்ணத்தினால் கட்டப்படுகின்றன. இந்த மரநார்கள் விரைவில் நீரினால் பழுதடையக் கூடியதாக இருப்பதால் வருடத்திற்கு மூன்று தடவை புதிதாகக் கட்டப்படுகிறது.





---

# கண்ணழகு!

சீனாவைச் சேர்ந்த பெண்ணொருவர் கன்னிமையை நீளமாக வளர்த்ததன் மூலம் உலகின் மிக நீளமான கண்ணிமைக்கு சொந்தக்காரர் என்று சாதனை படைத்துள்ளார்.

கண் இமையில் இவ்வளவு அதிகமான முடிகள் வளர்வதற்கு சாத்தியம் இல்லையொன்றாலும், சில ஹோமோன் மாற்றங்கள் மூலம் தலைமுடி போல கண்ணிமையும் வளரலாம் என்கின்றனர் மருத்துவர்கள். இவருக்கு கண் இமைக்க நேரமே இருக்காது போலத்தான் தெரிகிறது.





# பொழுதுபோக்கு...

அவுஸ்திரேலியாவில் சிங்கங்களுடன் சாவகாசமாக பொழுதைக் கழிக்கும் 3 வயது சிறுவன் அவற்றுக்கு சிறுவயது முதலே பயிற்சியளிக்க ஆரம்பித்துள்ளான்.

ஸ்டார்டஸ்ட் சர்கஸ் என்ற சாகசக் குழுவில் இணைந்துள்ள இச்சிறுவன் சாகச விளையாட்டுப் பயிற்சிகளை சிங்கங்களுக்கு வழங்கிவருகிறான். அக்குழுவில் புதிதாக இணைந்துள்ள உறுப்பினர் என அச்சிறுவனை வரவேற்றுள்ள ஏனைய உறுப்பினர்கள் ஆரம்பத்திலேயே சிங்கங்களுடன் நட்புறவாகப் பழகியமையை பாராட்டியுள்ளனர்.





இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அச்சுகள் அச்சகத்தில் டீ.டீ என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஏப்ரல் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.